SANATHANA DHARMA & SASTRA PRACHARA
FREE PUBLICATIONS & DISTRIBUTIONS SERIES

A NON – DETAILED TEXT BOOK FOR
VEDIC AND SANSKRIT STUDENTS.

॥बालबोध संग्रह:॥

பாலபோதஸங்க்ரஹம் - 8

மஹாகவி காளிதாஸரின்
ரகுவம்ஶ மஹாகாவ்ய சுருக்கம்



வெளியீடு

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம்

1. சாலைத் தெரு, காஞ்சீபுரம் - 631 502.
www.kamakoti-org Phone: 044 - 27222115
Email. KANCHIMUTT@gmail.com www.KAMAKOTI.ORG



SANATHANA DHARMA & SASTRA PRACHARA
FREE PUBLICATIONS & DISTRIBUTIONS SERIES

A NON – DETAILED TEXT BOOK FOR
VEDIC AND SANSKRIT STUDENTS.

||बालबोध संग्रहः||

பாலபோதஸங்க்ரஹம் - 8
மஹாகவி காளிதாஸரின்
ரகுவம்ஶ மஹாகாவ்ய சுருக்கம்

வெளியீடு
ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம்
1. சாலைத்தெரு காஞ்சீபுரம் 631 502.
www.kamakoti-org Phone: 044 – 27222115
Email. KANCHIMUTT@gmail.com. www.KAMAKOTI.ORG

இந்நூல் 9-2-2017 அன்று காஞ்சிபுரம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகத்தன்று காஞ்சி ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹா பெரியவாள் அதிர்ஷ்டானத்தில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ காஞ்சி ஆச்சார்யார்கள் திருக்கரங்களால் வெளியிடப்பட்டது.

॥ श्रीः ॥

॥ हनुमत्पञ्चरत्नम् ॥

वीताखिलविषयेच्छं जातानन्दाश्रुपुलकमत्यच्छम्।
सीतापतिदूताद्यं वातात्मजमद्य भावये हृद्यम् ॥१॥

तरुणारुणमुखकमलं करुणारसपूरपूरितापाङ्गम्।
सञ्जीवनमाशासे मञ्जुलमहिमानमञ्जनाभाग्यम् ॥२॥

शम्बरवैरिशरातिगमम्बुजदलविपुललोचनोदारम्।
कम्बुगलमनिलदिष्टं बिम्बज्वलितोष्ठमेकमवलम्बे॥३॥

दूरीकृतसीतार्तिः प्रकटीकृतरामवैभवस्फूर्तिः।
दारितदशमुखकीर्तिः पुरतो मम भातु हनुमतो मूर्तिः ॥४॥

वानरनिकराध्यक्षं दानवकुलकुमुदरविकरसदृक्षम्।
दीनजनावनदीक्षं पवनतपःपाकपुञ्जमद्राक्षम् ॥५॥

एतत् पवनसुतस्य स्तोत्रं यः पठति पञ्चरत्नाख्यम्।
चिरमिह निखिलान् भोगान्भुक्त्वा
श्रीरामभक्तिभाग्भवति ॥६॥

॥ हनुमत्पञ्चरत्नं सम्पूर्णम् ॥

(ஸ்ரீ ஆதிசங்கர் அருளிச் செய்தது)



SANATHANA DHARMA & SASTRA PRACHARA
FREE PUBLICATIONS & DISTRIBUTIONS SERIES

A NON – DETAILED TEXT BOOK FOR
VEDIC AND SANSKRIT STUDENTS.

||बालबोध संग्रह:||

பாலபோதஸங்க்ரஹம் - 8
மஹாகவி காளிதாஸரின்
ரகுவம்ஶ மஹாகாவ்ய சுருக்கம்

அருளியது
பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஜகத்குரு
ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி
ஸ்ரீ ஶங்கராசார்ய ஸ்வாமிகள், 69வது பீடாதிபதிகள்
மற்றும்
70வது பீடாதிபதிகள்
பரஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஜகத்குரு
ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஶங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி
ஸ்ரீ ஶங்கராசார்ய ஸ்வாமிகள்,
மூலாம்னாய ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடம்
ஸ்ரீ காஞ்சீஆசார்யாள் அவர்களின் ஆக்ஞை, ஆலோசனைப்படி
தொகுத்து, எழுதி, பக்தியுடனும், விநயத்துடனும்
ஸமர்ப்பிக்கின்றவர்
பூஜ்யஸ்ரீ குவலயானந்த தீர்த்த ஸ்வாமிகள்
(ஸ்ரீ தம்புடு ஸ்வாமிகள்) ஶிஷ்யரான
ஸ்ரீ ஆத்ம போத தீர்த்த ஸ்வாமிகள்
(ஸ்ரீ கும்பகோணம் ஸ்வாமிகள்).

வெளியீடு:
மூலாம்னாய ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம், காஞ்சீபுரம்

गोविन्ददेशिकमुपास्य चिराय भक्त्या तस्मिन्स्थिते निजमहिम्नि विदेहमुक्त्या।
अद्वैतभाष्यमुपकल्प्य दिशो विजित्य काञ्चीपुरे स्थितिमवाप स शङ्करार्यः॥

ஸ்ரீ கோவிந்த குருவை பக்தியுடன் வெகு காலம் உபாஸித்து, அவர் விதேஹ முக்தி அடைந்த பிறகு, அத்வைதபரமான பாஷ்யங்களை எல்லாம் எழுதி, எல்லாத்திக்குகளிலும் உள்ள மாற்று ஸித்தாந்தக்காரர்களை வாதத்தால் ஜயித்து, கடைசி காலத்தில் ஸ்ரீ ஶங்கராசார்யார் காஞ்சியில் வஸித்து, அங்கேயே அவதார வாழ்க்கையின் முடிவை அடைந்தார்.

(ஸ்ரீ ராமபத்ர தீக்ஷிதர் எழுதிய பதஞ்சலி சரித்திரம்)

अपारकरुणामूर्तिं ज्ञानदं शान्तरूपिणम्।
श्रीचन्द्रशेखरगुरुं प्रणतोस्मि मुदान्वहम्॥

அபாரகருணாமூர்த்திம் க்ஞானதம் ஶாந்தரூபிணம் ।
ஸ்ரீசந்த்ரஶேகரகுரும் ப்ரணதோஸ்மி முதாந்வஹம்॥

எல்லையற்ற கருணையின் வடிவானவரும், பேரறிவு அளிப்பவரும், அமைதியே உருவானவருமான அந்த ஸ்ரீ சந்த்ரஶேகர குருவை உள்நிறைவுடன் நாள்தோறும் வணங்குகின்றேன்.

ஸ்ரீ ஆதிஶங்கர பகவத்பாதாசார்யாள் காலம் கலியுகம் வருஷம் 2593-2625 (கி.மு. 509முதல் கி.மு.477வரை)

முன்னுரை

जगत्कामकलाकारं नाभिस्थानं भुव: परम् पदपद्मस्य कामाक्ष्या: महापीठमुपास्महे।
सदाशिवसमारम्भां शङ्कराचार्य मध्यमाम् अस्मदाचार्यपर्यन्तां वन्देगुरुपरम्पराम्॥
ஜகத்காமகலாகாரம் நாபிஸ்தாநம் புவ:
பரம் பதபத்மஸ்ய காமாக்ஷ்யா: மஹாபீடமுபாஸ்மஹே|
ஸதாஶிவஸமாரம்பாம் ஶங்கராசார்ய மத்யமாம்
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குரும்பரம்பராம் ||

ஸ்ரீ காஞ்சீ ஆசார்யாள் ஆக்ஞை ப்ரகாரம், ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் மூலம், வெளியிடப்பட்ட "பாலபோதஸங்க்ரஹம்" என்னும் நூலின் ஏழு பாகங்கள், மாணவ, மாணவிகளிடையே நல்ல வரவேற்பும், நமது ஸநாதன தர்ம, ஶாஸ்த்ர நூல்களின் அடிப்படை அறிவு ஏற்பட வேண்டும் என்ற ஆர்வமும் ஏற்பட்டு உள்ளது. ஸ்ரீமடத்தில் ஶாஸ்த்ர மற்றும் தர்ம ப்ரசார வெளியீடாக, இவைகள் பதிபிக்கப்பட்டு அனைவருக்கும் இலவசமாக அளிக்கப்பட்டு வருகின்றன.

இந்த எட்டாம்பாகத்தில், மஹாகவி காளிதாஸரின் அத்புத மஹாகாவ்யமான ரகுவம்சத்தின் கதைச்சுருக்கம் கொடுக்கப் பட்டுள்ளது. ரகுவம்ச மன்னர்களின் நற்குணங்கள் நமக்கும் மிகச்சிறந்த வழிகாட்டியாக என்றென்றும் உள்ளன. ஸம்ஸ்க்ருதத்தில் உள்ள நமது பாரம்பரிய நூல்களை படிக்க வேண்டும் என்கின்ற எண்ணத்திற்கு, இந்நூல்கள் ஆணிவேராக உள்ளன. இதனால் நமது பாரதீய கலாசாரம் நன்கு பாதுகாக்கப்பட்டதாக ஆவதுடன், நம் ஸந்ததியினருக்கும் மிகச்சிறந்த அறிவுகண்ணாக அமையும் என்பதில் ஐயமில்லை. பாரதீய கலாசாரத்தை ரக்ஷிப்பதின் மூலம், நமது நாட்டு மக்களுக்கு ஸாத்வீகமான வாழ்க்கை அமையும். உலக நாடுகளும் நம்மை திரும்பி பார்க்க ஆரம்பித்துள்ளன நம் கலாசாரத்தைக்கண்டு.

ஸ்ரீகாஞ்சி ஆசார்யாள் ஆக்ஞை பிரகாரம், பாலபோதஸங்க்ரஹம் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டு வருகின்றவர் மும்பை பி.ஆர். கண்ணன் அவர்கள்.

அவரின் Email I.D. PRKANNANVASHI@yahoo.com
cell: 919860750020- அவரிடம் தொடர்பு கொண்டால், இந்நூல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பை பெறலாம். மேலும் www.KAMAKOTI.ORG ஸ்ரீமடத்தின் websiteலும் படிக்கலாம்.

அனைத்து கல்வி ஸ்தாபன நிர்வாகிகளும், அத்யாபகர்களும் இவைகளைப்படித்து, மாணவச் செல்வங்களுக்கு போதித்தும், அவர்களை படிக்கச் செய்தும், ஸகல க்ஷேமங்களையும் அடைய ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரி ஸமேத ஸ்ரீசந்த்ரமௌலீச்வரரைப் பிரார்த்திக் கின்றோம்.

KALIDASA IS THE GREATEST REPRESENTATIVE OF INDIA'S SPIRIT, GRACE, AND GENIVUS. THE INDIAN NATIONAL CONSCIOUSNESS IS THE BASE FROM WHICH HIS WORKS GROW. KALIDASA HAS OBSERVED INDIA'S CULTURAL HERITAGE, MADE IT HIS OWN, ENRICHED IT, GIVEN IT UNIVERSAL SCOPE AND SIGNIFICANCE.

DR. RADHAKRISHNAN
EX.PRESIDENT OF INDIA.

தமிழ்நாடு தஞ்சாவூர் மாவட்டம் களஞ்சேரி கிராமத்தில் உள்ள
வேத வித்யா குருகுலம் ஸ்தாபகர்
ப்ரம்மஸ்ரீ ஜி.கே. ஸீதாராம ஶாஸ்த்ரி **M.A M.PHIL**
அவர்களின் மேற்பார்வையில் இந்த பாலபோத ஸங்க்ரஹம் **8**ம் பாகம்
ரகுவம்ஶ மஹாகாவ்ய சுருக்கம் புஸ்தகத்தை, **DTP** செய்தவர்கள்.
பாடசாலையின் யஜுர்வேத க்ரமாந்த வித்யார்த்திகள்.

1. சிரஞ்சீவி **S.**கிரிதர ஶர்மா
2. சிரஞ்சீவி **S.**ஹரிநாராயண ஶர்மா
3. சிரஞ்சீவி **B.**ராமாம்ருத ஶர்மா
4. சிரஞ்சீவி **N.**ஸ்ரீராம ஶர்மா

॥बाल बोध सङ्ग्रहः॥

பாலபோதஸங்க்ரஹம் - 8

பாடங்கள் பெயர்

स्वस्तिवाचनम् – गुरुवन्दनम्

श्री गुरुभ्यो नमः ॥
श्री महात्रिपुरसुन्दरी समेत श्री चन्द्रमौलीश्वराय नमः ।
श्री काञ्ची कामकोटि पीठाधिपति जगद्गुरु
श्री शङ्कराचार्य श्री चरणयोः प्रणामाः ।

स्वस्ति श्रीमदखिल भूमण्डलालङ्कार त्रयस्त्रिंशत्कोटि देवता सेवित श्री कामाक्षीदेवीसनाथ श्रीमदेकाम्रनाथ श्री महादेवीसनाथ श्रीहस्तिगिरिनाथ साक्षात्कार परमाधिष्ठान सत्यव्रत नामाङ्कित काञ्ची दिव्यक्षेत्रे शारदामठसुस्थितानां अतुलित सुधारस माधुर्य कमलासन कामिनी धम्मिल्ल सम्फुल्ल मल्लिका मालिका निष्यन्दमकरन्दझरी सौवस्तिक वाङ्निगुम्भ विजृम्भणानन्द तुन्दिलित मनीषिमण्डलानां अनवरत अद्वैत विद्याविनोदरसिकानां निरन्तरालङ्कृतीकृत शान्ति दान्तिभूम्नां सकल भुवनचक्रप्रतिष्ठापक श्रीचक्रप्रतिष्ठा विख्यात यशोऽलङ्कृतानां निखिल पाषण्ड षण्ड कण्टकोद्घाटनेन विशदीकृत वेदवेदान्तमार्ग षण्मतप्रतिष्ठापकाचार्याणां श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य श्रीजगद्गुरु श्रीमच्छङ्कर भगवत्पादाचार्याणां अधिष्ठाने सिंहासनाभिषिक्त श्रीमत् चन्द्रशेखरेन्द्रसरस्वती संयमीन्द्राणां अन्तेवासिवर्य श्रीमत् जयेन्द्र सरस्वती श्रीपादानां तदन्तेवासिवर्य श्रीमत् शङ्करविजयेन्द्र सरस्वती श्री पादानां च चरणनलिनयोः सप्रश्रयं साञ्जलिबन्धं च नमस्कुर्मः ॥

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்
ஸ்ரீ முகம் - தமிழ் அர்த்தம்

ஸ்வஸ்திஸ்ரீ அகில பூமண்டலங்களுக்கு அலங்காரமாய், முப்பத்து முக்கோடி தேவதைகளாலும் ஸேவிக்கப்பெற்று, ஸ்ரீ காமாக்ஷி தேவியோடு விளங்கும் ஸ்ரீமத் ஏகாம்பரநாதருடையவும், ஸ்ரீமஹா தேவியோடு விளங்கும் ஸ்ரீ ஹஸ்திகிரி நாதருடையவும், ஸாந்நித்யத்தோடு கூடிய க்ஷேத்ரமான 'ஸத்யவ்ரதம்' என்ற பெயர் கொண்ட காஞ்சீ திவ்ய க்ஷேத்ரத்திலே சாரதா மடத்தில் வீற்றிருப்பவர் களாகவும், ஒப்புவமையில்லாத அமிர்தரஸ மாதுர்யத்தை உடையதாய், கமலாஸனமுடைய தேவியின் திருமுடியில் அலர்ந்த மல்லிகா மாலையினின்று பெருகும் மகரந்த அருவி போன்ற சொல் மாலைகளாலே விளங்குகின்ற ஆனந்தத்தால் நிறைந்த புத்திமான்களால் சூழப்பெற்றவர்களாகவும், அனவரதம் அத்வைத வித்தையிலேயே பொழுது போக்கி இன்புறுவோர்களாகவும், இடைவிடாது அலங்கரித்துக் கொண்டிருக்கும் சமதமங்களாலே பெரியோர்களாய் விளங்குவோர்களாகவும், எல்லா புவன சக்ரங்களுக்கும் ப்ரதிஷ்டை அளிப்பதான ஸ்ரீசக்ர ப்ரதிஷ்டாபனத்தாலே ப்ரஸித்தமான புகழால் அலங்கரிக்கப் பெற்றவர்களாகவும், பாஷண்ட ஸமூஹங்களாகிய ஸகல கண்டகங்களையும் எடுத்தெரிவதாலே செம்மையாகப் பெற்றவையான வேத வேதாந்த மார்க்கங்களாகிய ஷண்மதங்களையும் ப்ரதிஷ்டித்த ஆசார்யர்களாகவும் விளங்கும் ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யர்களான ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசார்யர்களின் அதிஷ்டானத்திலே ஸிம்ஹாசனத்தில் அபிஷித்தர்களான ஜகத்குரு ஸ்ரீமத் சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்ரீ பாதர்களுடைய அந்தேவாஸிவர்களான ஜகத்குரு ஸ்ரீஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளுக்கும் அவரின் சிஷ்யர்களுமான ஜகத்குரு ஸ்ரீமத் சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளுக்கும் அனந்தகோடி நமஸ்காரங்கள்.

ஸமர்ப்பணம்

அரூபமாய் இன்றும் நம் எல்லோருக்கும் ஞானத்தை அருள் மழையாக பொழிந்து கொண்டு இருக்கும் ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் முதற்கொண்டு தொடர்ந்து, அவிச்சின்னமாய், மூலாம்னாய ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் பீடாதிபதிகளாய் இருந்த அனைத்து ஸ்ரீ ஆசார்ய மஹான்களுக்கும், முக்கியமாக நம்மிடையே **100** ஆண்டுகள் கடும் தவம் புரிந்து அனைத்து உலக மக்களுக்கும் நல்வழி காட்டிய மஹாஞானி,

68-ம் ஆசார்ய பீடாதிபதிகள்
பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஜகத்குரு
ஸ்ரீஸ்ரீஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களின் திவ்ய
சரணாரவிந்தங்களில் பக்தி ஶ்ரத்தையுடனும்,
விநயத்துடனும் ஸமர்ப்பிக்கின்றோம்.
மேலும் நம் இருளை நீக்கவே அவதரித்த
69-ம் பீடாதிபதிகள் ஜகத்குரு
ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின்
மற்றும்
70-ம் பீடாதிபதிகள் ஜகத்குரு
ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள்
அவர்களின் ஆக்ஞையை சிரமேற்கொண்டு இந்த பாலபோத ஸங்க்ரஹம்-**8**
மஹாகவி காளிதாஸரின் ரகுவம்ச மஹாகாவ்ய சுருக்கம்
எனும் நூலை மகிழ்ச்சியுடன் ஸமர்பிக்கின்றோம்.

இந்த நூலின் அச்சுப்பிழைகளைத் திருத்தி உதவி செய்த
வேத, ரத்னாகர, ப்ரும்மஸ்ரீ Dr.R. முரளிகிருஷ்ண ச்ரௌதிகள்
(Founder, Veda Sastra Shiksha Anusandana Kendram - Chennai - 600 073)
அவர்களுக்கும், திருநெல்வேலி க்ருஷ்ணாபுரம் ஸ்ரீவ்யாஸ, சங்கர, பரிபூர்ண
சாய் தத்தாத்ரேய சதுர்வேத வித்யா பாடசாலை ட்ரஸ்ட் ஸ்தாபகர் வேத
விசேக்ஷணா ப்ரும்மஸ்ரீ C. பரிபூர்ண க்ருபாகர சர்மா, த்விவேதி
அவர்களுக்கும் எங்கள் க்ருதக்ஞதையை
தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஸ்ரீ சிவார்ப்பணம் ட்ரஸ்ட், சென்னை
கைபேசி : +91 99400 80033

January 2017

Chapter One

Never Fading Gnomic Flowers of MahakaviKalidasa.

ஸ்ரீ மஹாகவி காளிதாஸர் இயற்றிய ரகுவம்ஸத்தில் காணப்படும் ஒருசில நன்மொழிகள்

१. हेम्न: संलक्ष्यतेह्यग्नौविशुद्धि: श्यामिकापिवा।(१-१०)

- ஹேம்ந: ஸம்லக்ஷ்யதேஹ்யக்நௌ விஶுத்தி ஶ்யாமிகாபிவா। (1-10)
- ➢ பொன்னின்தூய்மையோ அல்லது மாசோ அதை நெருப்பிலிட்டால் தெரியும்.

२. सहस्त्रगुणमुत्स्त्रष्टुमादत्तेहिरसंरवि:।। (१-१८)

- ஸஹஸ்ரகுணமுத்ஸ்ரஷ்டும் ஆதத்தேஹிரஸம்ரவி:॥
- ➢ சூர்யன் ஆயிரம் மடங்காக கொடுப்பதற்காக ஜலத்தை எடுத்துக்கொள்ளுகின்றான் அல்லவா!

३. फलानुमेया: प्रारम्भा: संस्कारा: प्राक्तनाइव। (१-२०)

- பலாநுமேயா: ப்ராரம்பா: ஸம்ஸ்காரா:ப்ராக்தநாஇவ।(1-20)
- ➢ அவ்வரசனின் (திலீபனின்) முயற்சிகள், முன்ஜன்மத்தில் ஏற்பட்ட பண்புகள்போல பலனைக்கொண்டு ஊஹிக்கத்தக்கவனவாக இருந்தன.

४. प्रतिबध्नाति हि श्रेय: पूज्यपूजाव्यतिक्रम: । (१-७९)

- ப்ரதிபத்நாதி ஹி ஶ்ரேய: பூஜ்யபூஜாவ்யதிக்ரம:।(1-79)
- ➢ பூஜிக்கத்தக்கவர்களை பூஜிக்காமல் இருப்பது நன்மையை தடுக்குமல்லவா!

५. सम्बन्धमाभाषण पूर्वमाहु: ॥ (२-५८)

- ஸம்பந்தமாபாஷண பூர்வமாஹு:॥
- ➢ நட்பு ஸம்பாஷணையால் உண்டாகின்றது. எனபெரியோர் கூறுவர்.

६. स्ववीर्यगुप्ता हि मनो: प्रसूति: ॥२-४

- ஸ்வவீர்யகுப்தா ஹி மனோ: ப்ரஸூதி:॥(2-4)
- ➢ ஏனெனில் மநுவின் ஸந்ததி தன் வீரயத்தினாலேயே காப்பாற்றப்பட்டது. (அவரவரும் தன் முயற்சியால் தன்னை காப்பாற்றிக்கொண்டு, மேன்நிலையை அடையவேண்டும்)

७. भक्त्योपपन्नेषु हि तद्विधानांप्रसादचिह्नानिपुर: फलानि॥२-२२

- பக்த்யோபபந்நேஷு ஹி தத்விதாநாம் ப்ரஸாதசின்னாநி புரப்பலாநி ॥ 2-22
- ➢ பக்தியோடுகூடியவர்கள் விஷயத்தில் நந்தினி, காமதேனு போன்ற மஹான்களுடைய அனுக்ரஹத்தின் அடையாளங்கள் ஸமீபத்திலுள்ள பயனை உடையவன.

८. न पादपोन्मूलनशक्तिरंह: शिलोच्चये मूर्च्छतिमारूतस्य॥२-३४

- நபாதபோன்மூலநஶக்திரம்ஹ: ஶிலோச்சயேமூர்சதிமாருதஸ்ய ॥ 2-34
- ➢ மரங்களை அசைக்கும் காற்றுக்கு மலையை அசைக்கத்திறனுண்டா?

९. शस्त्रेण रक्ष्यं यदशक्यरक्षं न तद्यश: शस्त्रभृतांक्षिणोति॥२-४०

- ஶஸ்த்ரேணரக்ஷ்யம் யதஶக்யரக்ஷம் ந தத்யஶ: ஶஸ்த்ரப்ருதாம்க்ஷிணோதி॥ 2-40
- ➢ ஆயுதபலத்தினால் காப்பாற்றமுடியாமல் ஒருபொருள்அழியுமானால் அதனால்அதைகாப்பற்ற முயன்றவீரர்களின் நற்பெயர் அழிவதில்லை.

१०. स्थातुंनियोक्तुर्नहिशक्यं अग्रेविनाश्यरक्ष्यंस्वयमक्षतेन॥ २-५६

- ஸ்தாதும் நியோக்துர் ந ஹிஶக்யம்அக்ரேவிநாஶ்யரக்ஷ்யம்ஸ்வயமக்ஷதேந॥ 2-56

➢ காப்பாற்றப்படவேண்டிய பொருளை நாசமடைவித்துவிட்டு, தான்காயமடையாத ஸேவகனால் எஜமானனுக்கு எதிரில் நிற்பதற்கு முடியாது அல்லவா!

११. एकान्तविध्वंसिषु मद्विधानां पिण्डेष्वनास्था खलु भौतिकेषु॥ २-५७

- ஏகாந்தவித்வம்ஸிஷு மத்விதாநாம் பிண்டேஷ்வநாஸ்தா கலு பௌதிகேஷு॥ 2-57

➢ என்போன்றவர்களுக்கு, (திலீபன்) நிச்சயமாக அழிகின்ற பஞ்சபூதங்களாலான சரீரங்களில் விருப்பமில்லை அல்லவா

१२. भवोहिलोकाभ्युदयाय तादृशां॥ ३-१४

- பவோஹிலோகாப்யுதயாய தாத்ருஶாம்॥ 3-14

➢ ரகு போன்றமஹான்களின் பிறப்பு உலகத்தின் க்ஷேமத்திற்காக ஏற்படுகின்றது.

१३. क्रियाहि वस्तूपाहिता प्रसीदति॥ (3-29)

- க்ரியாஹிவஸ்தூபாஹிதாப்ரஸீததி॥

➢ படிப்பித்தல் போல நல்லவிஷயத்திலே செய்யும் முயற்சி பயனுள்ளதாக ஆகின்றது.

१४. पथ:श्रुते: दर्शयितारईश्वरा मलीमसांआददते न पद्धतिम्॥ 3-46

- பத: ஶ்ருதே: தர்ஶயிதார ஈஶ்வராமலீமஸாம் ஆதத்தே ந பத்ததிம்॥

➢ வேதத்தின்வழியை காட்டுகின்ற பெரியோர்கள் குற்றமுள்ளவழியை அங்கீகரிப்பதில்லை.

१५. यशस्तुरक्ष्यंपरतोयशोधनै:॥

- யஶஸ்துரக்ஷ்யம்பரதோயஶோதனை:॥ 3-48

➢ புகழையே செல்வமாகக் கொண்டவரால் விரோதிகளிடமிருந்து புகழானது காக்கப்படவேண்டும்.

१६. प्रणिपातप्रतीकार:संरम्भो हि महात्मनाम्॥ (4-64)

- ப்ரணிபாதப்ரதீகார: ஸரம்போ ஹி மஹாத்மநாம்॥

➢ வணக்கத்தினால் அடங்குவதன்றோ பெரியோரின் சினம்.

१७. आदानं हि विसर्गाय सतां वारिमुचामिव।

- ஆதாநம்ஹிவிஸர்காயஸதாம்வாரிமுசாமிவ॥ (4-86)

➢ மேகங்களைப்போல் நல்லோர் எடுத்துக்கொள்வதும் திரும்பகொடுப்பதற்கே! தாங்கள்அனுபவிப்பதில்லை.

१८. पर्यायपीतस्य सुरैर्हिमांशो:कलाक्षय: श्लाध्यतरो हि वृद्धे:। ५-१६

- பர்யாயபீதஸ்ய ஸுரைர்ஹிமாம்ஶோ: கலாக்ஷய: ஶ்லாக்யதரோ ஹி வ்ருத்தே:॥ (5-16)

➢ தேவர்களால்முறையேபானம்செய்யப்பட்டசந்திரனின்கலைகளின்குறைவு, அவைகளின் வ்ருத்தியைக் காட்டிலும் சிறந்ததல்லவா?
{பிறர்க்குப்பயன்படாத செல்வத்துடன் வாழ்வதைக்காட்டிலும், பிறர்க்குபயன்பட்டு ஏழ்மைஅடைவது சாலச்சிறந்ததாகும்-(கௌத்ஸர்)

१९. नक्षत्रताराग्रह संस्कुलापि ज्योतिष्मती चन्द्रमसैव रात्रि:॥

- நக்ஷத்ரதாராக்ரஹ ஸம்குலாபி ஜ்யோதிஷ்மதீ சந்த்ரமஸைவ ராத்ரி:॥ 6-22

- ➢ நக்ஷத்ரங்கள், தாரகைகள், க்ரஹங்கள், இவைகளால்நிறைந்திருந்த போதிலும், இரவானது சந்திரனாலேயே பிரகாசமுடையதாயிருக்கின்றது.

२०. भिन्नरुचि र्हि लोक:

- பின்னருசிர்ஹிலோக:|| 6-30
- ➢ உலகம் பலதிறப்பட்ட ருசியை உடையது அல்லவா?

२१. नहिप्रफुल्लंसहकारमेत्य वृक्षान्तरं काङ्क्षति षट्पदाली॥ 6-69

- நஹிப்ரபுல்லம்ஸஹகாரமேத்ய வ்ருக்ஷாந்தர்ம் காங்க்ஷதிஷட்பதாலீ||
- ➢ வண்டுகளின்கூட்டம் மலர்ந்த ஒட்டுமாமரத்தை அடைந்தபின் வேறுமரத்தை விரும்புகிறதில்லை.

२२. रत्नंसमागच्छतुकाञ्चनेन||

- ரத்நம்ஸமாகச்சது காஞ்சனேன|| 6-79
- ➢ இரத்னமானது பொன்னுடன்சேரட்டும்.

२३. मनोहिजन्मान्तर संगतिज्ञम्॥

- மனோஹிஜன்மாந்தர ஸங்கதிஞம்|| 7-15
- ➢ மனம், பூர்வஜன்மத்தின்தொடர்பைஅறியக்கூடியதல்லவா!

२४. धूमोनिवर्त्येत समीरणेन यतस्तु कक्षस्तत एव वन्हि:॥

- தூமோநிவர்தயேத ஸமீரணேந யதஸ்து கக்ஷஸ்தத ஏவவஹ்னி:|| 7-55
- ➢ புகையை காற்றுதள்ளுமே அன்றி, நெருப்பைதள்ளாது. அதன் உதவிகொண்டு மேன்மேலும் ஜ்வலிக்கும்.

२५. प्रतिकारविधानमायुष:सति शेषेहि फलाय कल्पते॥

- ப்ரதீகாரவிதாநமாயுஷ: ஸதிஶேஷேஹிபலாயகல்பதே|| 8-40
- ➢ ஆயுளின்மிகுதி இருந்தாலன்றோ, சிகித்ஸைசெய்தல் பயனளிப்பதற்கு திறனுடையதாகின்றது.

२६. विषमप्यमृतं क्वचिद्भवेदमृतंवा विषमीश्वरेच्छया॥

- விஷமப்யம்ருதம் க்வசித்பவேத் அம்ருதம்வாவிஷமீஸ்வரேச்சயா|| 8-46
- ➢ கடவுளின்விருப்பத்தால், சிலவிடங்களில்விஷமும் அமிர்தமாக மாறும், சிலவிடங்களில் அமிர்தமும் விஷமாகமாறும்.

२७. धिगिमांदेह भृतामसारताम्।८-५१

- திகிமாம்தேஹப்ருதாமஸாரதாம்|| 8-51
- ➢ உடல் தாங்கிய ஜீவன்களின் இந்தநிலையற்றதன்மையை வெறுக்கவேண்டும்.

२८. परलोकजुषां स्वकर्मभिर्गतयो भिन्नपथा हि देहिनाम्॥ ८-८५

- பரலோகஜுஷாம் ஸ்வகர்மபிர்கதயோபிந்நபதா ஹி தேஹிநாம்|| 8-85
- ➢ மறுஉலகத்தைஅடைகின்றஅதாவதுஇறக்கின்றபிராணிகளுக்கு, அவர்கள்செல்லவேண்டியஇடங்கள், அவரவர்களின்புண்ய பாபங்களினால், வேறுபடுத்தப்பட்ட வழியை உடையன அல்லவா!

२९. मरणंप्रकृति: शरीरिणां विकृतिर्जीवितमुच्यते बुधै:।
क्षणमप्यवतिष्ठते श्वसन्यदिजन्तु र्ननुलाभवानसौ॥ ८-८७

- மரணம்ப்ரக்ருதி: ஶரீரிணாம் விக்ருதிர்ஜீவிதமுச்யதே புதை:||
  க்ஷணமப்யவதிஷ்டதே ஶ்வஸந்யதிஜந்துர் நநுலாபவாநஸௌ|| 8-87
- ➢ அனைத்து உயிர்வாழ்பிராணிகள்அனைத்திற்கும், மரணம்என்பது இயற்கையானது. சிறிதுகாலம் பிழைத்திருப்பதுதான்ஆச்சர்யமானது. எந்தநிமிஷத்திலும் மரணம்ஏற்படும். ஒருநிமிஷநேரம் உயிருடன் இருப்பதுதான் லாபமாகும்.

३०. अपथेपदमर्पयन्ति हि श्रुतवन्तोपि रजोनिमीलिता:॥९-७४

- அபதேபதமர்பயந்தி ஹி ச்ருதவந்தோபிரஜோநிமீலிதா|| 9-74
- ➢ சிறந்தஅறிவுள்ளவர்களும் ரஜோகுணத்தினால் அறிவுக்கண் மறைக்கப்பட்டவர்களாக, தகாதமார்கத்தில் அடிவைக்கின்றனர்.

३१. कृष्यांदहन्नपि खलु क्षितिमिन्धनेद्धो बीजप्ररोहजननीं ज्वलन: करोति॥ ९-८०

- க்ருஷ்யாம்தஹந்நபி கலு க்ஷிதிமிந்தநேத்தோ பீஜப்ரரோஹஜனனீம்ஜ்வலந: கரோதி || 9-80
- ➢ விறகினால் ஜ்வலிக்கும்படிச்செய்யப்பட்டநெருப்பு உழுதற்குரிய நிலத்தை எரிகின்றதாயினும் அந்நிலத்தை விதைகளினின்றும் முளைகளை நன்கு உண்டாக்கஶக்தியுடையதாக செய்கின்றதல்லவா!

३२. अव्याक्षेपो भविष्यन्त्या: कार्यसिद्धे र्हि लक्षणम्॥ १०-६

- அவ்யாக்ஷேபோபவிஷ்யந்த்யா: கார்யஸித்தேர் ஹி லக்ஷணம்|| 10-6
- ➢ ஒருபயனைக்கருதி, அதைஎதிர்பார்ப்பவரிடம்செல்லுகையில், வேறுவிஷயத்தில் தங்கள்மனத்தைச்செலுத்தாமல், அவர்வரும்வரை கவனிக்கும்நிலையில் இருந்தாலே, அது கார்யஸித்தியைக் கொடுக்கும்.

३३. अनन्यपरताकार्यसिद्धेस्तुलक्षणम्॥

- அநந்யபரதாகார்யஸித்தேஸ்துலக்ஷணம்||
- ➢ என்பது நிமித்தஸங்க்ரஹ ஶாஸ்த்ரமாகும்.

३४. स्वयमेव हि वातोग्ने: सारत्यम्प्रतिपद्यते।१०-४०

- ஸ்வயமே ஹி வாதோக்னே: ஸாரத்யம் ப்ரதிபத்யதே|| 10-40
- ➢ காற்று தானாகவே நெருப்பிற்கு துணையைஏற்கின்றது.

३५. तेजसांहि न वय: समीक्ष्यते।

- தேஜஸாம்ஹி ந வய:ஸமீக்ஷ்யதே|| 11.1
- ➢ பலமுடையவர்களின் இளமைப்பருவமானது கவனிக்கப்படுவதில்லை.

३६. आशिषम्प्रयुयुजे न वाहिनीम्सा हि रक्षणविधौतयो: क्षमा॥

- ஆஶிஷம்ப்ரயுயுஜே ந வாஹினீம் ஸாஹிரக்ஷணவிதௌத யோ: க்ஷமா|| 11.6
- ➢ தஶரதர் ஆசீர்வாதத்தைசெய்து, ராமலக்ஷ்மணர்களை விஶ்வாமித்ரருடன்அனுப்பினார். ஸேனையைஅனுப்பவிலலை. பெரியோர்களின் மனப்பூர்வமான ஆசீர்வாதங்கள்தாம் உண்மையில் எல்லோரையும் காக்கவல்லன.

३७. सद्यएव सुकृताम्हि पच्यते कल्पवृक्षफलधर्मि काङ्क्षितम्॥

- ஸத்யஏவஸுக்ருதாம் ஹி பச்யதே கல்பவ்ருக்ஷபலதர்மி காங்க்ஷிதம்|| 11.50
- ➢ புண்யசாலிகளின் விருப்பமானது கல்பவ்ருக்ஷத்தின் பழத்தின்தன்மையை உடையதாக உடனேயே பலிக்கின்றதுஅல்லவா!

३८. निर्जितेषु तरसा तरस्विनाम्शत्रुषु प्रणतिरेव कीर्तये।

- நிர்ஜிதேஷு தரஸா தரஸ்விநாம்சத்ருஷு ப்ரணதிரேவ கீர்த்தயே|| 11.89
- பலத்தினால் வெல்லப்பட்ட விரோதிகளினடத்தில். வினயத்துடன் இருத்தலே. பலசாலிகளுக்கு கீர்த்திக்கு(புகழுக்கு) காரணமாகின்றது.

३९. कालेखलुसमारब्धा: फलं बध्नन्तिनीतय:।

- காலேகலு ஸமாரப்தா: பலம் பத்னந்தி நீதய:|| 12.69
- தக்ககாலத்தில் தொடங்கப்பட்ட உபாயங்கள் பலனைக்கொடுக்கின்றன அல்லவா||

४०. छायाहिभूमे: शशिनोमलत्वेन आरोपिता शुद्धिमत: प्रजाभि:॥

- சாயாஹிபூமே: ஶஶினோமலத்வேந ஆரோபிதா ஶுத்திமத: ப்ரஜாபி:|| 14.40
- ஜனங்களினாலே பூமியின்ப்ரதிபிம்பமானது பரிசுத்தமான சந்திரனுடைய களங்கமாக சொல்லப்பட்டு இருக்கின்றது.

४१. आज्ञागुरूणाम्ह्यविचारणीया।

- ஆக்ஞா குரூணாம்ஹ்யவிசாரணீயா|| 14.46
- பெரியோர்களின்உத்தரவு. ஆராய்ந்து பார்க்கக்கூடாதது.

४२. त्राणाभावे हि शापास्त्रा: कुर्वन्तितपसोव्ययम्।

- த்ராணாபாவே ஹி ஶாபாஸ்த்ரா: குர்வந்தி தபஸோவ்யயம்|| 15.3
- காப்பாற்றுபவன் இல்லாதபொழுதுதான் ஶாபத்தைஆயுதமாகக்கொண்டமஹரிஷிகள் தவத்தின்செலவை செய்கின்றார்கள்.

४३. धर्मसंरक्षणार्थैवप्रवृत्तिर्भुविशार्ङ्गिण:।

- தர்மஸம்ரக்ஷணார்தைவ ப்ரவ்ருத்திர் புவிஶார்ங்கிண:|| 15.4
- பூமியில் விஷ்ணுவின் அவதாரமானது தர்மப்பாதுகாப்பையே ப்ரயோஜனமாகஉடையது.

४४. प्रह्वेष्वनिर्बन्धरुषो हि सन्त:।

- ப்ரஹ்வேஷ்நிர்பந்தருஷோ ஹி ஸந்த:|| 16.80
- பெரியோர்கள் வணக்கமுடையவர்களிடத்தில் (தன்னைசரணமாகவந்தவர்களிடத்தில்) உறுதியான கோபமுடையவர்கள் அல்லர்.

४५. वयोरूप विभूतिनामेकैकं मदकारणम्।

- வயோரூபவிபூதிநாமேகைகம் மதகாரணம்|| 17.43
- பருவம். அழகு. செல்வம்இவைகளில்ஒவ்வொன்றும்செருக்கிற்குக்காரணம்.

४६. कातर्यम्केवला नीति: शौर्यं श्वापदचेष्टितम्।

- காதர்யம்கேவலா நீதி: ஶௌர்யம்ஶ்வாபதசேஷ்டிதம்|| 17.47
- ஆண்மையற்ற ராஜநீதி பயந்ததன்மையாகின்றது ராஜநீதியற்ற வெற்றுப்பராக்ரமம் காட்டும்ருகங்களின்செயலாகும்.

४७. अम्बुगर्भो हि जीमूतश्चातकैरभिनन्द्यते।

- அம்புகர்போ ஹி ஜீமூதச்சாதகைரபிநந்த்யதே|| 17.60
- நீர்நிறைந்தமேகம்தான் சாதகப்பறவைகளால் கொண்டாடப்படுகின்றது. (செல்வம்இருப்பின்மக்கள்நம்மைநாடுவர்)

४८. स्वातुभिस्तु विषयैर्हृतस्ततोदु:खमिन्द्रियगणोनिवार्यते।

- ஸ்வாதுபிஸ்து விஷயைர்ஹ்ருதஸ்ததோதுக்கமிந்த்ரியகணோ நிவார்யதே|| 19.49
- ➢ இனியபொருள்களுக்கு வசப்பட்டபுலன்களை மீட்பதுமிகமிகஅரிது.

கேள்விகள்:-

1. ஏதேனும்25நன்மொழிகளை புஸ்தகம்பாராமல் எழுதி பழகுக?
2. பெரியோர்கள் ஆசீர்வாதம் பற்றிய மஹாகவியின்வாக்கைஎழுது?

Chapter Two

மஹாகவி காளிதாஸரின் ரகுவம்ஶ மஹாகாவ்ய சுருக்கம்

மஹாகவி காளிதாஸரின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவர்தம் காவ்ய படைப்புகள் பற்றிய பாடங்கள், பாலபோத ஸங்க்ரஹம் இரண்டாம் பாகத்தில், பக்கம் 95 முதல் 121 முடிய கொடுக்கப்பட்டுள்ளன. பால போத ஸங்க்ரஹம் ஏழு பாகங்கள், ஸ்ரீ மடத்தால் வெளியிடப்பட்டுள்ளது. பலர் இம்முயற்சியை வரவேற்றுள்ளனர்.

மஹாகவி காளிதாஸர் பற்றிய காலம் பற்றி பல்வேறு கருத்துக்கள் இருப்பினும், அனேகமாக பல அறிஞர்கள், SIR WILLIAM JONES ஸர் வில்லியம் ஜோன்ஸ் அவர்க ள், ஆராய்ச்சி செய்து குறிப்பிட்ட, முதல் நூற்றாண்டையே ஏற்றுக் கொண்டுள்ளனர்.

अस्तिकश्चिद्वाग्विशेष:அஸ்தி கச்சித் வாக்விசேஷ: என, தன் மனைவி வித்யோத்தமா கூறியதைக் கேட்ட, மஹாகவி காளிதாஸர், अस्त्युत्तरस्याम्दिशिदेवतात्मा. என குமாரஸம்பவ காவ்யத்தில் अस्तिஅஸ்தி என முதல் ஶ்லோகமாக ஆரம்பித்து எழுதியுள்ளார். कश्चिद् கச்சித் என்பதை முதல் பதமாக்கொண்டு कश्चिद्कान्ताविरहगुरुणाகச்சித் காந்தா விரஹகுருணா என்று மேகதூதம் அல்லது மேகஸந்தேஸ நூலில் ஆரம்பித்துள்ளார். वाक् வாக் என்பதை முதல் பதமாகக் கொண்டு वागर्थाविवसम्प्रक्तौவாகர்த்தாவிவ ஸம்ப்ருக்தெள என்று ரகுவம்ஶ மஹாகாவ்யத்தையும் இயற்றியுள்ளார்.

முதல் ஶ்லோகங்களான இவைகள் அந்தந்த நூலின் மங்கள ஶ்லோகமாக கருதப்படுகின்றன. பலர் வேண்டுகோளுக்கிணங்க, இப்பாடத்தில் மஹாகாவ்யமான ரகுவம்ஶத்தின் சுருக்கமான கதைகளை பற்றி கொடுத்துள்ளோம். ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில் யுத்த காண்டத்தில்(1-11) अहं रघुवंश्च लक्ष्मणश्च महाबल: அஹம்ச ரகுவம்ஶ: (யுத்தகாண்டம் 1-11) என்றும் பாலகாண்டத்தில் रघुवंशस्यचरितम्चकारभगवानृषि: ரகுவம்ஶஸ்ய சரிதம், (பாலகாண்டம் 3-9) என்றும் ஸ்ரீராமன், ரகுவம்சத்தைச் சேர்ந்தவன் என ஸ்ரீவால்மீகி மஹரிஷியின் வாக்கை மனதில் கொண்டு, தன் காவ்யத்திற்கு ரகுவம்ஶம் என பெயரிட்டுள்ளார், என்று பெரியோர்கள் கூறுவர்

சூர்ய வம்ஸ அரசர்களின் வாழ்க்கை வரலாறு, அக்காலத்தில் பாரததேசத்தின் செல்வம், இலக்கியம், கலை, மக்கள்வாழ்க்கை, மன்னர்களின் சிறப்பியில்புகள், அவர்களின் குணம், தூய்மை, வாய்மை, வீரம், எளிமை முதலியவைகளை விஸ்தாரமாக அழகாக பலவிதமான உவமைகளுடன் விவரித்துள்ளார்.

வேததர்மத்தில் பற்றுள்ளவரும், நம்பிக்கையுடையவருமான மஹாகவி, ஆங்காங்கு யாகாதி கார்யங்களையும், நித்ய கர்மானுஷ்டானங்களையும் தர்மங்களையும், இறைபக்தி, தாய், தந்தை, குருவிடம் பக்தி முதலியவைகளை குறிப்பிட்டு காண்பித்துள்ளார். படு பள்ளத்தை நோக்கி ஊர்ந்து செல்லும் பெரும் ப னிசரிவு போல அழிவை நோக்கி செல்லும் பகட்டான செல்வ வாழ்க்கையைக் குறித்தும், தன் நூல்களில் எச்சரிக்கின்றனர்.

ரகுவம்ஶ மஹாகாவ்யம் 19வது ஸர்கங்கள் (CHAPTERS) கொண்டது. திலீப சக்ரவர்த்தி முதல் அக்னிவர்ணன் எனும் சக்ரவர்த்தியின் சரித்ரம் முடிய 29 மாமன்னர்களின் வரலாற்றை நேரில் காண்பது போல், தர்ம, அர்த்த, காம, மோக்ஷம் எனப்படும் சதுர்வித புருஷார்த்தங்களுடன் மஹாகவி வர்ணித்துள்ளார். ரகுவம்ஶத்தின் முதல் எட்டு ஸர்கங்கள் திலீபன், ரகு, அஜன் இவர்களைப் பற்றியும், 9முதல்15வரை ஏழு ஸர்கங்கள் ஸ்ரீமத் வால்மீகி ராமாயண ஸார ஸங்க்ரஹமாக தஶரத சக்ரவர்த்தி, ஸ்ரீராம, லக்ஷ்மண சரித்திரங்கள். 16வது ஸர்கம் லவ குசனது வரலாறு. 17வது ஸர்கம் ஸ்ரீராமரின் பேரன் அ திதி பற்றியும். 18வது ஸர்கம் மிகச்சுருக்கமாக 21 மாமன்னர்களின் சரித்திரங்கள். 19வது ஸர்கம் அக்னிவர்ணன் சரித்திரம் முதலியன உள்ளன

ரகு வம்ஶ சக்ரவர்த்திகளின் பெயர்களை காண்போமா!
மஹாகவி காளிதாஸர் குறிப்பிட்டுள்ள வைவஸ்வத மநு வம்ஶ சக்ரவர்த்திகளின் பெயர்கள். சூரியனின் புதல்வன் வைவஸ்வதமநு அதனால் சூர்யவம்ஶம் என்றும், சொல்லப்படுகின்றது. அவ்வம்ஶத்தின் அரசர்கள் அனைவருமே பராக்ரமசாலிகள். அதில் மிகப்ரஸித்திபெற்ற திலீபசக்ரவர்த்தி முதற்கொண்டு, அரசபரம்பரையை காளிதாஸர் வர்ணித்துள்ளார்.
दिलीप: - திலீபன் रघु: - ரகு திலீபனின் புதல்வன் ரகு ரகுசக்ரவர்த்திற்கு நிகராக யாருமே இல்லையாதலால், காளிதாஸர் தன் மஹாகாவ்யத்திற்கு ரகுவம்ஶம் என்றே பெயரிட்டுள்ளார். இவருக்குபிறகு வரும் அரசர்கள் அனைவரும் தங்களை, ரகுவம்ஶம் எனக்கூறிக் கொள்வதிலேயே பெருமை கொண்டனர். அதனால் ரகுவம்ஶ மன்னர்களின் பெயர்களை வரிசைக்ரமமாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. अज:-அஜன்
2. दशरथ: - தஶரதன்
3. श्रीराम: - ஶ்ரீராமன்
4. कुश: - குஶன்
5. अतिथि: - அதிதி
6. निषध: - நிஷதன்
7. नल: - நலன்
8. नभा: - நபன்
9. पुण्डरीक: - புண்டரீகன்
10. क्षेमधन्वा - க்ஷேமதன்வா
11. देवानीक: - தேவாநீகன்
12. अहीनगु: - அஹீநகு:
13. पारियात्र: - பாரியாத்ரன்
14. शिल: - ஶிலன்
15. उन्नाभ: - உந்நாபன்
16. वज्रणाभ: - வஜ்ரநாபன்
17. शङ्खण: -ஶங்கணன்
18. व्युषिताश्व: -வ்யுஷிதாச்வன்
19. विश्वसह: -விஶ்வஸஹன்
20. हिरण्यनाभ: -ஹிரண்யநாபன்
21. कौसल्य: -கௌஸல்யன்
22. ब्रम्मिष्ठ: -ப்ரஹ்மிஷ்டன்
23. पुत्र: -புத்ரன்
24. पुष्य: -புஷ்யன்
25. ध्रुवसन्धि: -த்ருவஸந்தி:
26. सुदर्शन: -ஸுதர்ஶனன்
27. अग्निवर्ण: - அக்னிவர்ணன்

ரகுவம்ஶத்தின் மொத்த ஶ்லோகங்கள்

ஸர்கம்	ஶ்லோகஎண்ணிக்கை	ஸர்கம்	ஶ்லோகஎண்ணிக்கை
1	95	2	75
3	70	4	88
5	76	6	86
7	71	8	95
9	82	10	86
11	93	12	104
13	79	14	87
15	103	16	88
17	81	18	53
19	57	**மொத்த ஶ்லோகங்கள் =1569**	

ரகுவம்ஶ மஹாகாவ்யத்திற்கு கீழ்கண்டவாறு பல வ்யாக்யானங்கள் ஸம்க்ருதத்தில் உள்ளன.

1. ஹேமாத்ரி
2. சரித்ரவர்தனா
3. வல்லபா
4. ஸுமதிவிஜயா
5. தினகராமிஶ்ரா

மேலும் மஹாகவிகாளிதாஸர் இயற்றிய குமார ஸம்பவத்திற்கு ஸம்க்ருதத்தில் வ்யாக்யானம் எழுதியுள்ள நாராயணர் என்பவரின் பதார்த்ததீபிகாவும்,

6. அருணகிரிநாதர் எழுதிய ப்ரகாஶிகா எனும் வ்யாக்யானமும், ரகுவம்ஶத்திற்கு உள்ளன. இவ்விரண்டும் பதிப்பில் வரவில்லை என்று தெரிகின்றது. இவைகள் சென்னை பல்கலைகழகம் அடையாறு, பரோடா, மைசூர், ஓரியண்டல் லைப்ரரிகளில் பாதுகாக்கப்பட்டு வருவதாக அறிகின்றோம். மேலே குறிப்பட்ட அனைத்து வ்யாக்யானங்களுக்கும் மிகச்சிறந்த்தாகப் போற்றப்பட்டு, அறிஞர் உலகின் அன்றாட ஆரய்ச்சிக்கு உள்ளதாக, மல்லிநாதர் என்பவரின் ஸஞ்சீவினி ஸம்ஸ்க்ருத வாக்யானம் உள்ளது குறிப்பிடத்தக்கது.
7. மல்லிநாதர் = வ்யாக்யானம் = ஸஞ்சீவினீ
8. சென்னை ப்ரபௌஸர் வி.எஸ். வெங்கடராகவாச்சாரியார் **(1909-1989) V.S.V** அவர்கள் எழுதியுள்ள பத பதார்த்தத்துடன் (ஸம்ஸ்க்ருதம் தமிழ்) கூடிய மொழிபெயர்ப்பு முதன் முதலில் 1952ல் சென்னை லிப்கோ **(LIFCO)** வினரால் வெளியிடப்பட்டுள்ளது. இவரால் குமாரஸம்பவம், மேகதூதமும் பத பதார்த்தத்துடன் எழுதப்பட்டுள்ளது. ஸம்ஸ்க்ருதம் ஆரம்ப பயிற்சியாளர்களுக்கு இந்நூல்கள் மிகவும் உபயோகமாக உள்ளன.

(COURTESY)

Chapter Three

முதல்ஸர்கம் प्रथमसर्गः

திலீபசக்ரவர்த்தி - மஹாராணி ஸுதக்ஷிணை சரித்ரம்

१. वागर्थाविवसम्पृक्तौ वागर्थप्रतिपत्तये।
जगतः पितरौ वन्दे पार्वतीपरमेश्वरौ ॥

- வாகர்த்தாவிவ ஸம்ப்ருக்தெள வாகர்த்தப்ரதிபத்தயே ।
ஜகத: பிதரெளவந்தே பார்வதீ பரமேஶ்வரௌ ॥

➢ காளிதாஸர் முதல்ஸர்கம் முதல் ஶ்லோகத்தில் பார்வதீ பரமேஶ்வரரை மங்கள ஶ்லோகமாக வணங்குகின்றார். சொல்லும் பொருளும் போல் சேர்ந்திருப்பவர்களும், உலகத்திற்கு தாய் தந்தையருமான் பார்வதியையும் பரமேஶ்வரனையும் சொல் பொருள் இவைகளை அறியும் பொருட்டு நமஸ்கரிக்கிறேன்.இச்லோகத்தையே நாமும் அன்றாடம் பகவானிடம் பிறார்த்திக்கலாம்.மஹாகவி தன் விநயத்தை நன்கு தெரிவிக்கின்றார். சூர்யவம்ஶ மன்னர்களின் சரித்திரம் மிகவும் விஸ்தாரமானது. பெருமைகள் பல கொண்டவைகள். கடக்க முடியாத ஸமுத்ரத்தை சிறு படகின் மூலம் ஒருவன் கடக்க விரும்புவது போல் எனது குறைந்த அறிவினால் கடல் போன்ற ரகுவம்ஶ சரித்திரத்தை அதாவது ஸூர்யவம்ஶ வரலாற்றை கூறப்போகிறேன். உயரமான மனிதனால் அடையத்தகுந்த பழத்தை குள்ளன் அடைய முயற்சிப்பது போல் குறைந்த அறிவுடையவனுமான நான் அந்த குள்ளன் போல பரிஹாசிக்கப்படுவேன். பலர் என் செயலைக்கண்டு பரிஹாசிப்பர்.இருப்பினும் நான் முன்னோர் சென்ற வழியில் சென்று எனது விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வேன்.

ரகுவம்ஶ மாமன்னர்களின் பெருமைகள்

२. सोऽहमाजन्म शुद्धानां आफलोदयकर्मणाम् ।
आसमुद्रक्षितीशानां आनाकरथवर्त्मणां ॥

- ஸோஹமா ஜன்ம ஶுத்தானாம் ஆபலோதய கர்மணாம்।
ஆஸமுத்ரக்ஷிதீஶானாம் ஆநாகரதவர்த்மநாம்॥ 5

➢ அப்படிப்பட்ட குறைந்த அறிவையுடையநான் பிறவி முதல் பரிசுத்தமானவர்களும் பயனுண்டாகும் வரை முயற்சி உடையவர்களும் சமுத்ரம் வரையுள்ள நிலத்திற்கு அரசர்களாக இருப்பவர்களும் ஸ்வர்கம் வரை தேரின் வழியுடையவர்களுமான ரகுவம்சத்து அரசர்களின் சரித்ரத்தை சொல்வேன்.

३. यथाविधिहुताग्नीनां यथाकामार्चितार्थिनां ।
यथापराधदण्डानां यथाकालप्रबोधिनाम्॥

- யதாவிதி ஹுதாக்னீநாம் யதாகாமார்சிதார்த்திநாம்।
யதாபராத தண்டாநாம் யதாகாலப்ர்போதிநாம்॥ 6

➢ முறைப்படி ஹோமம் செய்யப்பட்ட அக்னியை உடையவர்களும் விருப்பப்படி கௌரவிக்கப்பட்ட யாசகர்களை உடையவர்களும் குற்றத்திற்குத் தக்கப்படி தண்டிப்பவர்களும் காலத்திற்கு தகுந்தபடி அறிவு பெறுகின்றவர்களும்

४. त्यागाय संभृतार्थानां सत्यायमितभाषिणाम्।
यशसे विजिगीषूणां प्रजायै गृहमेधिनाम्॥

- த்யாகாய ஸம்ப்ருதார்தாநாம் ஸத்யாய மிதபாஷிணாம் ।
யஶஸே விஜிகீஷூணாம் ப்ரஜாயை க்ருஹமேதிநாம் ॥ 7

➢ கொடுப்பதற்க்காகவே ஸம்பாதிக்கப்பட்ட செல்வமுடையவர்களும் உண்மைக்காக அளவாக பேசுபவர்களும் புகழின்பொருட்டு (எதிரிகளை) வெல்ல விரும்புவர்களும் ஸந்ததியின் பொருட்டு திருமணம் செய்துகொள்பவர்களும்.

५. शैशवेऽभ्यस्तविद्यानां यौवने विषयैषिणाम्।
वार्द्धके मुनिवृत्तीनां योगेनान्ते तनुत्यजाम् ॥

- ஶைஶவே அப்யஸ்தவித்யாநாம் யௌவநே விஷயைஷிணாம்|
வார்த்தகே முநிவ்ருத்தீனாம் யோகேநாந்தே தநுத்யஜாம்|| 8

➢ பால்ய பருவத்தில் கற்கப்பட்ட கல்வியை உடையவர்களும், வாலிபபருவத்தில் சுகத்தை விரும்புவர்களும் வயதானகாலத்தில் முனிவர்க்ளின் தவத்தை உடையவர்களும் கடைசியில் ஈஶ்வரத்யானத்தினால் உடலை விடுபவர்களும், ஆகிய ரகுவம்ஶ மன்னர்களின் சரித்ரத்தை சொல்வேன். என்று அவர்களின் பெருமைகளை கூறுகின்றார். ஸூரியனின் புதல்வரான வைவஸ்வத மநுவின் வம்சத்தில் திலீபன் எனப் புகழ்பெற்ற மன்னன் தோன்றினான். திலீபன் முன்னோர்கள் சென்ற மார்கத்தை பின்பற்றியே ஆட்சி செய்தான்.இந்த ஜன்மத்தில் உண்டான பயனைக்கொண்டு பூர்வஜன்ம ஸம்ஸ்காரத்தை ஊஹிக்கமுடியும். பூர்வஜன்மத்தில் ஏற்பட்ட அனுபவத்தினால் உண்டான பண்பு ஸம்ஸ்காரம் எனப்படும். அதனைபோல பயனைக்கொண்டே அவனது முயற்சிகள் ஊஹிக்கப்பட்டன. அவனது ராஜ்ய காரியங்கள் சத்ருக்கள் (விரோதிகள்) அறியாதபடி அவ்வளவு ரஹஸ்யமாக இருந்தன. என்பதை, கவி, அழகாக சொல்கிறார்.

६. तस्य संवृतमन्त्रस्य गूढाकारेङ्गितस्य च|
फलानुमेयाः प्रारंभाः संस्काराः प्राक्तना इव||

- தஸ்ய ஸம்வ்ருதமந்த்ரஸ்ய கூடாகாரேங்கிதஸ்ய ச ।
பலாநுமேயா: ப்ராரம்பா: ஸம்ஸ்காரா: ப்ரார்தநா இவ || 20

➢ திலீபன் ராஜ்யத்தில் மக்களும் தேவர்களும் ஸந்தோஷமடைந்தனர். திலீபன் யாகம் செய்வதற்காக பூமியினிடமிருந்து பொருள்களைப் பெற்று யாகம் செய்து இந்திரன் முதலான தேவர்களை மகிழ்வித்தான். இந்திரனும் திலீபன் ராஜ்யத்தில் பயிர்களின் வ்ருத்தியைக் கருதி நல்ல மழையை காலங்களில் பெய்வித்தான். இவ்விருவரும் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொண்டு பூமியையும் ஸ்வர்கத்தையும் காப்பாற்றினார்கள். திலீபன் கடல்வரை நீண்ட இப்பூமியை ஆண்டான். கடற்கரையை கோட்டை சுவராகவும் கடலே அழகாகவும் அவன் ராஜ்யத்திற்கு விளங்கின. அவனுக்கு எதிரிகளே இல்லை ஆதலால் அவன் ஆணைக்கு எதிராணை என்பதே இல்லை. சிறு நகரத்தை ஆள்வதுபோல் அப்பெரும் ராஜ்யத்தை சிரமமின்றி லகுவாக ஆட்சி செய்தான்.தாக்ஷிண்ய குணம் நிரம்பி இருந்த மகதராஜன் வம்சத்தில் பிறந்த ஸுதக்ஷிணை என்கின்ற குணவதியை திலீபன் விவாஹம் செய்து கொண்டான். புத்ர பாக்யமில்லாத தம்பதிகளாக மிகவும் வருந்தி அவ்விருவரும் குலகுருவான வஸிஷ்ட மஹரிஷியை நாடி அவர்தம் ஆஶ்ரமத்திற்கு சென்று அவரை பிறார்த்தித்தனர். புத்ர பாக்யம் இல்லாமைக்கான காரணத்தை அரிய விரும்பினர்

36ம் ஶ்லோகம்முதல் 45ம் ஶ்லோகம்வரை மஹாகவி அவ்விருவரும் ஶ்ரீவஸிஷ்டாச்ரமம் செல்லும்போது வழியில் கண்ட காக்ஷிகளை நேரில்காண்பிப்பதுப்போல் வர்ணிக்கின்றார்

திலீபனும் ஸுதக்ஷிணையும் வஸிஷ்டர் ஆச்ரமத்தை அடைந்த பொழுது, வஸிஷ்டர் ஆச்ரம வர்ணனை மிகவும் அழகாக அமைந்துள்ளது.

யாகம் செய்யும் தீக்ஷிதர்கள், வெளியில் சென்று திரும்பும் போது, வெளியூர் சென்ற தந்தையை அவரது மக்கள் வரவேற்பது போல், அக்னிபகவான் அந்த தீக்ஷிதர்களை வரவேற்பதாக வேதம் கூறுகின்றது.ஆனால் அவ்வக்னிபகவான் கண்ணுக்குப் புலப்படாமல் இறுக்கின்றார். அதேபோல் வஸிஷ்டாச்ரம மஹரிஷிகள் வேறு இடங்களில் இருந்து பலாச, அரசு ஸமித்துக்களை எடுத்துக்கொண்டு வருவதை கண்டனர். ரிஷிபத்னிகள் மான்களுக்கு காட்டுநெல்லை வைத்து அவைகளுக்கு உணவாக அளிப்பர். அவைகள் ரிஷிபத்னிகளின் குழந்தைகள் போல் இருந்தன. மேலும் பாத்தியமைத்து மரங்களுக்கு நீர் ஊற்றுவர். அதை குடிப்பதற்காக பறவைகள் அங்கே கூடும் அழகை ரசித்தனர். சிலமான்கள் நீவாரதான்யங்களை தின்று ஆஶ்ரம மர நிழலில் படுத்து அசைபோடும் அழகைக் கண்டனர்.அவ்விருவரும் ஆஶ்ரமத்தை அடைந்த போது ஆஶ்ரமத்தில் ஹோமம் நடைபெற்றுக்கொண்டு இருந்ததால் அந்த ஹோமபுகை நாற்புறமும் காற்றில் பரவி அங்கே வருபவர்களை பரிசுத்தமாக்கியது. அப்படிப்பட்ட புண்யமான பவித்ரமான வஸிஷ்டாச்ரமத்தை திலீபனும் ஸுதக்ஷிணையும் அடைந்தனர்.

௭. तस्मै सभ्याः सभार्याय गोप्त्रे गुप्तमेन्द्रियाः।
अर्हणामर्हते चक्रुः मुनयो नयचक्षुषे॥

- தஸ்மை ஸப்யா: ஸபார்யாய கோபத்ரே குப்தமேந்த்ரியா:।
அர்ஹணாமர்ஹதே சக்ரு: முநயோ நயசக்ஷுஷே॥ 55

➢ வஸிஷ்டரின் ஆச்ரமத்தில் இருந்த முனிவர்கள் எல்லோரும் ஸப்யர்கள்: அதாவது முக்யமான ஸபையில் இருக்கத்தக்கவர்கள். உலகரீதியும் மர்யாதையும் நன்கு அறிந்தவர்கள். ஆசையை விட்டவர்களாகவும், இந்த்ரியங்களை அடக்கியவர்களாகவும் உள்ளவர்கள். மனைவியான ஸுதக்ஷிணையுடன் வந்திருக்கின்ற திலீப சக்ரவர்த்திக்கு மர்யாதை செய்தனர். ஶாஸ்த்ரங்களினால் பெற்ற அறிவை கண்ணாகக்கொண்டு விஷயங்களை நோக்குகின்றவனான திலீபன், அனைவரின் குறிப்பாக அம் முனிவர்களின் ரக்ஷகனாவான்.

ஸாயங்காலத்தில் தன்னுடைய அனுஷ்டானத்தின் முடிவில் தனது மனைவியான அருந்ததியுடன் அமர்ந்திருப்பவரான, தவத்திற்கு இருப்பிடமான ஶ்ரீவஸிஷ்டமாமுனிவரை, (ஸ்வாஹா) தேவியுடன் இருக்கின்ற அக்னிதேவனைக்காண்பது போல், அவ்விருவரும் வணங்கினார்கள்.

வஸிஷ்ட மஹர்ஷிகளும் அவனை யோகக்ஷேமங்களையும், ராஜ்ய க்ஷேமத்தையும் கேட்டு அறிந்தார். வஸிஷ்டர் செய்யும் யாகத்தால், தேசத்தில் மும்மாரி மழை பெய்வதை திலீபன் கூறினான்.

௮. हविरावर्जितं होतः त्वया विधिवदग्निषु ।
वृष्टिर्भवति सस्यानां अवग्रहविशोषिणां ॥

- ஹவிராவர்ஜிதம் ஹோத: த்வயா விதிவதக்னிஷு।
வ்ருஷ்டிர்பவதி ஸஸ்யானாம் அவக்ரஹ விசோஷிணாம்॥ 62

➢ ஹோமம் செய்கின்றகுருவே! தங்களால் சாஸ்த்ரங்களில் கூறியபடி அக்னிகளில் இடப்பட்ட ஹவிஸ், மழையின்மையால் உலருகின்ற பயிர்களுக்கு மழையாக ஆகின்றது. தங்களது தவத்தின் மேன்மையால் எனது ப்ரஜைகள் (மக்கள்) முழு ஆயுளுடன் வாழ்கின்றனர். அவர்களுக்கு எவ்வகையான ஆபத்துக்களிலிருந்தும் அச்சமில்லை. துன்பமில்லை. ப்ரம்மபுத்ரரான தாங்களால் எனது ராஜ்யமும் நன்கு பாதுகாக்கப்பட்டதாக இருகின்றது. நாங்களும் எவ்வித குறையின்றி இருகின்றோம். இருப்பினும் எங்களுக்கு ஸந்ததி இல்லை என்கின்ற வருத்தம் இருகின்றது

எனக்குப்பின் ராஜ்யபாரம் ஏற்றுக்கொள்ள பிள்ளையில்லாத காரணத்தால் பித்ருகடனை தீர்க்க முடியாதவர்களாக இருகின்றோம். நான் அக்கடனிலிருந்து விடுதலை பெறும்படியான உபாயத்தை தாங்கள் எனக்குச் செய்ய வேண்டும்.

९. इक्ष्वाकूनां दुरापेर्थे त्वदधीना हि सिद्धय:।

- இக்ஷ்வாகூணாம் துராபேர்த்தே த்வததீநா ஹி ஸித்தய:||
- இக்ஷ்வாகு வம்சத்தவர்களுக்கு அடைய முடியாத விஷயத்தில் கார்யஸித்திகள் தங்கள் அனுக்ரஹத்தாலேயே நிறைவேறுகின்றன தங்கள் வசத்திலன்றோ இருப்பனவாக ஆகின்றன. என்று அவரது பாதங்களில் ஸுதக்ஷிணையுடன் மீண்டும் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான்.

१०. इति विज्ञापितो राज्ञा ध्यानस्तिमितलोचन:॥

- இதி விக்ஞாபிதோ ராக்ஞா த்யானஸ்திமிதலோசந:॥ 73
- இவ்வாறு அரசனால் தெரிவிக்கப்பட்ட மஹரிஷி வஸிஷ்டர் த்யானத்தினால் சலனமற்ற கண்களையுடையவராய் ஒரு க்ஷணம் இருந்தார்.த்யானம் செய்து முடித்தப்பின், திலீபனிடம், அரசே! முன்பு ஒருஸமயம் இந்த்ரலோகம் சென்று இந்த்ரனை உபசரித்துவிட்டு, மீண்டும் பூலோகத்திற்கு வரும் வழியில் கற்பக வ்ருக்ஷத்தின் நிழலில் காமதேனு அமர்ந்திருந்து ஓய்வில் இருந்தது.

११. प्रदक्षिणक्रियार्हायाम् तस्याम् त्वम् साधु नाचर:।76

- ப்ரதக்ஷிண க்ரியார்ஹாயாம் தஸ்யாம் த்வம் ஸாது நாசர:|| 76
- ப்ரதக்ஷிணம் செய்யத்தக்க பூஜ்யமான அக்காமதேனுவை நீ ப்ரதக்ஷிணம் செய்யாமல் வந்துள்ளாய். வழியில் பஶு இருக்குமாயின் அது நமது வலதுபுறத்தில் இருக்கும்படி நாம் செல்லவேண்டும் என ஶாஸ்த்ரவிதி. அதனால் வருத்தமடைந்த காமதேனு என்னை ப்ரதக்ஷிணம் செய்யாமல் அலட்சியமாக நீ செல்வதால், என் ஸந்ததியை ஆராதிக்காமல் உனக்கு ஸந்ததி உண்டாகாது என ஶபித்தது. அச்சாபம் உன்னாலும் உன் தேரோட்டியாலும் கேட்கப்படவில்லை. அதனால் உங்களுக்கு ஸந்ததி-பிள்ளைப்பெறு கிடைக்கவில்லை.

१२. प्रतिबध्नाति हि श्रेय: पूज्य पूजा व्यतिक्रम:। 79

- ப்ரதிபத்னாதி ஹி ஶ்ரேய: பூஜ்ய பூஜா வ்யதிக்ரம||
- பூஜிக்கத்தக்கவர்களை பூஜிக்காமல் இருப்பது நன்மையை தடுக்குமல்லவா! அக்காமதேனுவும் தற்போது பாதாள லோகத்தில் உள்ளது. காமதேனுவின் பெண் நந்தினி எனது ஆஶ்ரமத்தில் இருகின்றது. அதை பூஜித்து வா. நந்தினி உனக்கு அருள் புரியும். உன் விருப்பமும் நிறைவேறும். பஶுவிற்கு எல்லாவகையிலும் பணிவிடை செய். அதன் நிழல் போல் நடந்து கொள். உனது. மனைவியான ஸுதக்ஷிணையும் கோஸம்ரக்ஷணத்தில் ஈடுபடட்டும். இவ்வாறு நீ நந்தினியின் அருள் கிடைக்கும் வரை பணிவிடை செய்வாயாக என்றார்.

१३. तथेति प्रतिजग्राह प्रीतिमान् सपरिग्रह:। आदेशं देशकालज्ञ: शिष्य: शासितुरानत:॥ 92

- த்தேதி ப்ரதிஜக்ராஹ ப்ரீதிமான் ஸ பரிக்ரஹ:| ஆதெஶம் தேஶகாலஜ்ஞ்ய: ஶிஷ்ய: ஶாஸிதுராநத||
- இடத்தையும் காலத்தையும் அறிந்தவனும் ஸந்தோஷத்தை அடைந்தவனும் ஶிஷ்யனுமான அரசன் திலீபன். மனைவி ஸுதக்ஷிணையோடு கூடினவனாகவும் வணக்கமுடையவனாகவும் இருந்து கொண்டு குருவான வாஸிஷ்ட மஹரிஷியின் கட்டளையை அவ்வாறே என ஏற்றுக்கொண்டான் வஸிஷ்டாஶ்ரமத்தில் தங்கி அவ்விரவில் ஓய்வெடுத்தனர்

கேள்விகள்

1. ரகுவம்ஶ மஹாகாவ்யத்தை இயற்றியவர் யார்?
2. மஹாகவி காளிதாஸரின் காலம் என்ன? அதை உறுதிபடுத்தியவர் பெயர் என்ன?
3. காளிதாஸரின் மனைவி பெயர் என்ன?
4. ரகுவம்ஶம் பெயர் காரணம் எழுது. எத்தனை ஸர்கங்கள் உள்ளன?
5. எத்தனை அரசர்களைபற்றி கவி எழுதியுள்ளார்?
6. தஶரதசக்ரவர்த்தியின் தந்தை பெயர் என்ன?
7. ஸ்ரீராமனுக்கு பிறகு உள்ள மன்னன் பெயர் எழுது?
8. ரகுவம்ஶத்திற்கு எத்தனை வ்யாக்யானங்கள் உள்ளன?
9. ரகுவம்ஶத்தில் எத்தனை ஸர்கங்கள் உள்ளன?
10. முதல் ஸர்கத்தின் த்யான ஶ்லோகத்தை எழுது?
11. ரகுவம்ஶமன்னர்களின் பெருமைகளை சுருக்கமாக எழுது?
12. திலீபனின் மனைவிபெயர் என்ன?
13. வஸிஷ்டஶ்ரமம் ஒரு குறிப்பு எழுது?
14. வஸிஷ்டமஹரிஷியின் மனைவி பெயர் என்ன?
15. திலீபனின் ப்ரார்த்தனை என்ன?
16. வஸிஷ்டரின் பதில் எழுது?
17. காமதேனுவின் மகள் பெயர் என்ன?
18. நன்மையை தடுப்பது எது? அச்லோக வாக்யத்தை எழுது.

Chapter Four

द्वितीय सर्ग: -- இரண்டாம் ஸர்கம்

நந்தினி - பஶுவின் மஹாத்ம்யம்

வஸிஷ்டர் ஆஶ்ரமத்தில் அடுத்த நாள் காலை ஸுப்ரபாதம் ஆகியது.

१. अथ प्रजानामधिप: प्रभाते जायाप्रतिग्राहित गन्धमाल्याम्।
वनाय पीतप्रतिबद्धवत्साम् यशोधनो देनुमृषेर्मुमोच॥

அதப்ரஜாநாமதிப: ப்ரபாதே ஜாயாப்ரதிக்ராஹி தகந்தமால்யாம்|
வநாயபீதப்ரதிபத்தவத்ஸாம் யஶோதநோ தேனும்ருஷேர்முமோச||1
பிறகு புகழையே செல்வமாக உடையவனும், ப்ரஜைகளுக்கு தலைவனுமான திலீபன், காலையில், மனைவி ஸுதக்ஷிணையினால் பெற்றுக்கொள்ளும்படி செய்யப்பட்ட சந்தனம், புஷ்பம் இவைகளையுடையதும் முதலில் பாலைக் குடித்துப்பின் புகட்டப்பட்ட கன்றையுடைதுமான வஸிஷ்டமுனிவரின் பஶுவான நந்தினியை காட்டிற்குச்செல்ல அவிழ்த்துவிட்டான்.ஸுதக்ஷிணை பதிவ்ரதைகளில் சிறந்தவள். ஆகவே கணவனான திலீபன் நந்தினியுடன் சென்றபொழுது அவளும்உடன்சென்றாள். அவ்வாறுஅவள்பின்தொடர்ந்துசென்றது. ஸ்ம்ருதிநூல்கள், வேதத்தின் பொருளைப் பின்பற்றுவது போல்இருந்தது.

२. श्रुतेरिवार्थंस्मृतिरन्वगच्छत्।

ஶ்ருதேரிவார்த்தம்ஸ்ம்ருதிரன்வகச்சத்||
என்கிறார்மஹாகவி,
வேதத்தில்அவருக்குஉள்ளபக்தியையும்நம்பிக்கையையும்ஆங்காங்கேகாண்பிப்பார். சக்ரவர்த்தியாகியதிலீபன்ருசியானபுற்களின்பிடிகளாலும், சொரிந்துகொடுப்பதாலும், காட்டுஈக்களைஓட்டுவதாலும், அதன் போக்கைதடுக்காதவனாகவும், அப்பஶு தன்னிஷ்டப்படிசெல்லவும், நந்தினியின் ஶிஶ்ருஷையில் மிக்க கருத் துடையவனாக இருந்தான். அப்பஶுவை அதன்நிழல்போல் பின்தொடர்ந்தான். பஶுவைக் காக்க நாணேற்றியவில்லை எப்பொழுதும் தயாராக வைத்திருந்தான். காட்டிலுள்ள இனியஓசைகளை கேட்டுக்கொண்டேஅப்பஶுவை பின்தொடர்ந்தான். ஸூர்யன்அஸ்தமிக்க ஆரம்பித்தபொழுது துளிர்போல் சிவந்தவர்ணமுடைய நந்தினியும் தனதுசஞ்சாரத்தினால் பலஇடங்களையும் பரிஶுத்தமாகச்செய்தபின்ஆஶ்ரமம்நோக்கிதிரும்பியது. ஆஶ்ரமத்தின் எல்லையில்வந்து, வஸிஷ்ட மஹரிஷி கூறியது போல், ஸுதக்ஷிதனை அப்பஶுவை எதிர்கொண்டுஅழைத்து, வலம் வந்து வணங்கி அக்ஷதைகளால் அப்பஶுவின் இரண்டுகொம்புகளுக்கு இடையிலுள்ள பாகத்தில் பூஜித்தாள். கன்றினிடம் செல்லவிரும்பினாலும், அப்பஶு அவர்களின் பூஜையை பொறுமையாக நின்றுஏற்றுக்கொண்டது. பக்தர்கள்செய்யும் பூஜையைப் பெரியோர்கள் ஏற்றுக்கொள்வராயின் அதுஅவர்களது அருள்அனுக்ரஹம்கிட்டுதலுக்கு அடையாளமாகும். விரைவில் பலன்கிடைக்கும் என்பதற்குஶுபஸூசகமாகும்.

३. भक्त्योपपन्नेषु हि तद्विधानाम्प्रसादचिह्नानि पुर: फलानि॥ 22

பக்த்யோபபன்னேஷு ஹி தத்விதாநாம் ப்ரஸாதசின்னானி புர: பலானி||

நந்தினிபூஜையைஏற்றதைக்கண்டுமகிழ்ந்து,
அதன்அருளின்அடையாளமாகஎண்ணிமகிழ்ந்தனர்.
ஸாயம்அனுஷ்டானங்களைமுடித்து,
குருவானவஸிஷ்டமஹரிஷிகளைவணங்கியபிறகுஅப்பஶுவின்அருகிலேயேஅமர்ந்தான். பஶுதூங்கியதைக்கண்டு அவ்விருவரும் அதன்அருகிலேயே தூங்கினர். பிறகுகாலையில் பஶுவின்குரல்கேட்டு, எழுந்து, கோபூஜையைசெய்தனர். இவ்வாறு 21 நாட்கள் கோஶிஸ்ருஷையிலேயே ஈடுபட்டனர். அடுத்தநாள் காலையில் வனத்திற்கு செல்லும்போது, பஶு ஹிமாலயத்தின் ஒருகுகைக்குள் சென்றது. மலையின் அழகில்ஈடுபட்டஅரசன், திடீரென்று பஶுவின்அலறலைக்கேட்டான். அப்போது ஒருசிங்கம் நந்தினிமீது பாய்ந்து அதை உணவாகக்கொள்ள முயன்றது. அரசன் அச்சிங்கத்தைக்கண்டு அதைக்கொல்லபாணத்தைஎடுக்கவலதுகையைஅம்பின்காம்பில்வைத்தபோது, அவன்கை, படத்தில் எழுதப்பட்ட கைபோல் ஸ்தம்பித்து நின்றது. அவனால் அசைக்கக்கூடமுடியவில்லை. ஏற்கனவே கோபத்தை அடைந்ததிலீபன், இச்செய்கையால்அதிகம்கோபம்கொண்டான். கதறினான். அதே ஸமயம்வியப்புடன்இருந்த அவனைநோக்கி, மனிதகுரலில்அச்சிங்கம்பேசியது.

४. कैलासगौरं वृषमारुरुक्षोः पादार्पणानुग्रहपूतपृष्ठम्।
अवेहि मां किङ्करमष्टमूर्तेः कुम्भोदरं नाम निकुम्भमित्रम्॥ 35

கைலாஸகௌரம் வ்ருஷமாருருக்ஷோ: பாதார்பணாநுக்ரஹபூதப்ருஷ்டம்।
அவேஹி மாம் கிங்கரமஷ்டமூர்தே: கும்போதரம் நாம நிகும்பமித்ரம்।।35

நான்ஶிவபிரானுடைய ஸேவகன். என்பெயர் கும்போதரன். ஶிவபெருமான் வ்ருஷபத்தின் மேல் ஏறும்போதுஎனது முதுகில்பாதத்தை வைத்துஏறுகின்றார். அவர்பாதம் படுவதை அருளாகக்கருதுகின்றேன். அதனால் நான்தூய்மை பெறுகின்றேன். ஸ்ரீபரமஶிவனின்கணங்களில் ஒருவனான நிகும்பனின்நண்பன், என்றும்அறிந்துகொள். எதிரில் உள்ள தேவதாருமரம் ஸ்ரீபார்வதி தேவியாருக்கு மிகவும் பிடித்தமரமாகும். அம்மரம் அன்னையாள் வளர்க்கப்பட்டது. அதை ரக்ஷிக்கவே என்னைநியமித்துள்ளனர். இம்மரத்தில்அருகில் வரும் பிராணிகளைக்கொன்று என்பசியைபோக்கிக்கொள்ளஆணையிடப்பட்டுள்ளேன். ஆகவே இப்பஶுவைகொன்று, எனக்கு உணவாகக் கொள்ளப்போகின்றேன் என்றது. சற்றுஆறுதலடைந்த திலீபன், ஆச்சர்யத்துடன் அதைநோக்கி, பின்வருமாறுகூறினான். ஸ்ரீபரமஶிவனும் என்னால் உபாஸிக்கப்படுபவர். எனதுகுரு மஹரிஷிவஸிஷ்டரின் வாக்கையும் ஆக்ஞையையும் கடைபிடிக்கவேண்டியதுஎன்னுடைய கடமை. உனக்கு உணவாக என்னை எடுத்துக்கொண்டு, தாயை எதிர்நோக்கிகாத்திருக்கும் கன்றுக்காக இப்பஶுவைவிட்டுவிடு. அவ்வாறு செய்தால் மரத்தின்அருகில் இருக்கும் என்னை உணவாகக்கொண்டால் பரமேஶ்வரனின்ஆனையும் மீறியதாகாது. மஹரிஷியின்பஶுவும் காப்பாற்றப்பட்டதாகும். எனவே கருணைசெய் என்றான் பலவாறாக திலீபனின் மனதை மாற்ற முயற்சித்து சிங்கம் திலீபனின் உறுதியை பாராட்டியது. திலீபன்சிங்கத்திடம் மறுபடிகூறினான். என்னைத்தின்பதால் உனக்கு உணவுகிடைக்கின்றது. மஹரிஷிக்கு எத்தனைகோடி பஶுக்களை தானமாக அளித்தாலும் காமதேனுவின் மகளானஇந்தநந்தினிக்கு ஈடாகாது. குருவின்கட்டளை இப்பஶுவைரக்ஷிப்பதற்காக நியமிக்கப்பட்டேன். இப்பஶுவின் விடுதலைக்காக நான் கொடுக்கும்பொருள்எனதுஉடலே. மஹரிஷியின் யாகாதிகார்யமும் குறையாது நடைபெற இப்பஶுஉதவும். இப்பஶுவை இழந்துஎன் குருவின் எதிரில் நிற்க நான் விரும்பவில்லை நீ ஶிவஸேவகன் நான்வஸிஷ்ட மஹரிஷியின் ஸேவகன் எவ்வாறு நீ தேவதாருமரத்தைகாப்பாற்றுகின்றாயோ,

அவ்வாறே இப்பஶுவை காப்பாற்றவேண்டியது என்கடமை. ஸேவகனின் கஷ்டத்தை ஸேவகனாகிய நீயும்அறிவாய் அல்லவா!ஆகவேபிடிவாதம்பிடிக்காமல் என்னைஎடுத்துக்கொண்டு, இப்பஶுவைவிடுதலை செய்வாயாக என்றான். திலீபனின் குருபக்தியைமெச்சியது சிங்கம். திலீபனின் கைகளும்செயல்புரியதொடங்கின. வில்லைபூமியில்வைத்து, தன்னைஉணவாகசிங்கத்திற்குஅர்பணிக்க அதன் அருகில்சென்றான். உடனேசிங்கம் தன்மேல் பாயும்என எதிர்பார்த்தான். ஆனால்தேவர்கள் அவன்மேல்புஷ்ப மழையாக கொட்டினார்கள். தன்எதிரில்

५. उत्तिष्ठ वत्सेत्यमृतायमानम्वचो निशम्योत्थितमुत्थित: सन्।
ददर्श राजा जननीमिवस्वाम्गामग्रत: प्रस्त्रविणीम्नृसिंहम्॥ 61

உத்திஷ்ட வத்ஸேத்யம்ருதாயமாநம்
வசோ நிஶம்யோத்திதமுத்தித:ஸன்|
ததர்ஶ ராஜாஜனனீமிவஸ்வாம்
காமக்ரத: ப்ரஸ்த்ரவிணீம் ந்ருஸிம்ஹம்||61

குழந்தாய்எழுந்திரு என்றுஉண்டானஅம்ருதம்போன்றவார்தையைகேட்டு, அரசனான திலீபன் எழுந்தவனாக, எதிரில்பாலைப்பெருக்குகின்ற பஶுவை தன்னுடைய தாயைக்காண்பதுபோல் கண்டான். சிங்கத்தைக்காணவில்லை. மஹரிஷியின் ப்ரபாவத்தால் என்னிடத்தில் யமனும் கூட அடிக்க ஶக்தியுடையவனல்லன். என்னால் உண்டாகப்பட்ட மாயையால் பரீக்ஷை செய்யப்பட்டாய். குருபக்தியாலும், என்னிடமுள்ள கருணையாலும் உன் விஷயத்தில் நான் மிகவும் ப்ரீதி அடைந்துள்ளேன்.

६. न केवलानां पयसां प्रसूतिम् अवेहि मां कामदुघां प्रसन्नाम्॥ 63

ந கேவலானம் பயஸாம் ப்ரஸூதிம் அவேஹி மாம் காமதுகாம் ப்ரஸன்னாம்||

என்னை பாலுக்குமாத்ரம் காரணமாக எண்ணாதே. ஸந்தோஷம் அடைந்த என்னை நீ விரும்பியதை கறப்பவளாக அறிந்துகொள். நான் எதையும் தரமுடியும் என்றாள் நந்தினி விரும்பி வந்தவர்களின் விருப்பத்தை எல்லாம் நிறைவேற்றிவைக்கும் திலீபன் தனக்கு ஸந்ததி உண்டாக பிறார்த்தித்து கைகளைகுவித்து நந்தினியிடம் வரம் கேட்டான். நந்தினியும் மகிழ்ந்து தனதுபாலை (பத்ரபுடே) இலையாலான பாத்ரத்தில் கறந்துகுடி என அவனுக்கு கட்டளையிட்டது. மஹரிஷியின் அனுமதி பெற்று அவ்வாறு செய்வதாக கூறினான்.

பிறகு ஆச்ரமம் அடைந்து நந்தினியையும் மஹரிஷி வஸிஷ்டரையும் வணங்கி கன்றுக்கும் வஸிஷ்டரின் ஹோமத்திற்கும் பாலை எடுத்துவைத்துவிட்டு மீதமுள்ள பாலை பருகினான். வஸிஷ்டமஹரிஷியால் ஸந்தோஷமாக அனுக்ரஹிக்கப்பட்ட இந்த தம்பதிகள் மீண்டும் ஆச்ரமத்தில் இருந்து ராஜதானியை (தலைநகரை) அடைந்தனர். பிறகு அரசன் மந்திரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட ராஜ்யத்தை மீண்டும் ஏற்றுகொண்டான். ஸுதக்ஷினையும் காலக்ரமத்தில் கர்பத்தை தரித்தாள்.

७. नरपतिकुल भूत्यै गर्भमाधत्त राज्ञी ॥

நரபதிகுல பூத்யை கர்பமாதத்த ராஜ்ஞீ || 75

கேள்விகள்

1. திலீபனின் "கோ" (பசு) ஸேவையை பற்றி எழுது?

2> எத்தனை நாட்கள் கோஸேவை செய்தான்?

3> சிங்கம் தன்னை எவ்வாறு அறிமுகப்படுத்திக்கொண்டது?

4> அந்த ச்லோகத்தை மட்டும் எழுது?

5> திலீபன் எவ்வாறு பசுவை காப்பாற்றினான்?

6> நந்தினி அளித்த வரம் என்ன?

Chapter Five

மூன்றாம் ஸர்கம் तृतीयसर्गः

ரகு மஹாராஜா பராக்ரமம்

ஸுதக்ஷிணை கர்பந்தரித்தும் திலீபன், கருவுற்றிருக்கும் பெண்களுக்கு வேண்டிய பும்ஸவனம், ஸீமந்தம் முதலிய சடங்குகளை, தன் செல்வத்திற்கும், உதாரத்தன்மைக்கும், மனைவியிடமுள்ள அன்பிற்கும் மன உத்ஸாகத்திற்கும் தக்கவாறு நன்கு செய்தான், என்பதை

1. यथाक्रमं पुंसवनादिकाः क्रियाः धृतेश्च धीरः सदृशीर्व्यधत्त सः। (10)

யதாக்ரமம் பும்ஸவநாதிகா: க்ரியா: த்ருதேஶ்ச தீர: ஸத்ருஶீர்வ்யத்த ஸ:|| 10

மஹாகவி அழகாக க்ருஹஸ்த தர்மங்களை விவரிக்கின்றார் மேலும் ஜ்யோதிஷ ஶாஸ்த்ரப்படி, தக்கஸமயத்தில் ஸுதக்ஷிணை அழகான ஆண் மகனை பெற்றதை பின்வருமாறு கூறுகின்றார்.

ग्रहैस्ततः पञ्चभिरुच्चसंश्रयैः असूर्यगैः सूचित भाग्यसंपदम्।
असूत पुत्रं स्मये शचीसमा त्रिसाधना शक्तिरिवार्थमक्षयम्॥ १३

க்ரஹைஸ்தத: பஞ்சபிருச்ச ஸம்ச்ரயை: அஸூர்யகை: ஸூசித பாக்யஸம்பதம்|
அஸூத புத்ரம் ஸமயே சசீஸமா த்ரிஸாதநா சக்திரிவார்த்தமக்ஷயம்|| 13

இந்திராணிக்கு ஸமமான அந்த திலீபனின் மனைவி ஸுதக்ஷிணை, தக்க காலத்தில் உச்சஸ்தானங்களை அடைந்துள்ளவைகளும், ஸூர்யனை அடையாமலும் ஶக்தி குன்றாதவைகளும் ஆன ஐந்து க்ரஹங்களினால் உணர்த்தப்பெற்ற அதிர்ஷ்டத்தையுடைய புத்ரனை, பெற்றாள்.

இவ்வாறு ஐந்துக்ரஹங்கள் நின்ற நிலையே பிறந்த குழந்தை பெரிய அத்ருஷ்டமுடையவன் என்பதை உணர்த்தியது. ஸ்ரீ வால்மீகி மஹர்ஷியும் ஸ்ரீ ராமர் பிறந்த போது ஐந்து க்ரஹங்கள் உச்சநிலையில் இருந்தன என்று, பாலகாண்டம் 18ம் ஸர்கம் 8ம் ச்லோகத்தில்

2. ततश्च द्वादशे मासे चैत्रे नावमिके तिथौ।
   नक्षत्रेऽदितिदैवत्ये स्वोच्चसस्थेषु पञ्चसु ॥

ததஶ்ச த்வாதஶே மாஸே சைத்ரே நாவமிகே திதௌ|
நக்ஷத்ர அதிதி தைவத்யே ஸ்வோச்ச ஸம்ஸ்தேஷு பஞ்சஸு||
என்று குறிப்பிட்டுள்ளார். ரகுவம்சத்தவனாயிற்றே ஸ்ரீராமன்-

செல்வத்தாலும் பெரும் படையினாலும் அரசர்களுக்கு உண்டாகும் பலம் ப்ரபுசக்தி எனப்படும்.

சாஸ்த்ரங்களில் கறைதேர்ந்த மந்திரிகளின் ஆலோசனையினால் உண்டாகின்ற பலத்திற்க்கு மந்த்ரசக்தி எனப்படும். அரசனின் சரீரபலம், மனோபலம், உத்ஸாஹம், சத்ருக்களை அழித்து வெல்ல வேண்டும் என்கின்ற க்ஷத்ரியகுணம். முதலியன "உத்ஸாஹசக்தி"எனப்படும். இம்மூன்று சக்திகளும் ஒவ்வொருநாடாளும் மன்னனுக்கும் அவசியமாகும். இம்மூன்று சக்திகளும் ஒருங்கே அக்குழந்தையிடம் இருப்பதாக பிறவியலேயே அதன் சாமுத்ரிகா லக்ஷணத்தால் தெரிவதாக மஹாகவி குறிப்பிடுகின்றார்.

குழந்தை பிறந்த செய்தி கேட்டதும், திலீபன் பீஜதானங்களையும். மற்ற அனைத்து தானங்களையும் சாஸ்த்ரங்க்ளில் கூறியபடி செய்தான்

ஒவ்வொரு மனிதனும் தான் பிறக்கும் போது தேவர்களும், மஹரிஷிகளுக்கும், அவன் வம்சத்தின் மூதாதையர்களுக்கும் கடன் பட்டவனாகவே பிறக்கின்றான்.

அவரவர்களின் வேதாத்யயனத்தினால் ரிஷிகளின் கடனும், யாகம் முதலியன செய்வதால் தேவர்களிடம்பட்ட கடனும் தீருகின்றது. மூதாதையர்களிடம் ஏற்பட்ட கடன், பிள்ளைப்பேறு ஏற்பட்டால்தான் தீரும். அப்போது முக்கடனிலிருந்தும் விடுபட்டவன் ஆகின்றான்.

அரசனான திலீபன் தற்போது ஆண்பிள்ளையை பெற்றதால் மூதாதையர்கள் எனப்படும் பித்ரு கடனில் இருந்தும் விடுபட்டான்.

இராஜ்யத்தில் ஸந்ததி ஏற்பட்டால், அக்கால வழக்கப்படி, சிறைக் கைதிகள் அனைவருமே விடுதலை செய்யப்படுவர். ஆனால் திலீபன் இராஜ்யத்தில் சிறைகள் எப்போதுமே திறந்த வண்ணமே இருந்தன. ஏனெனில் குற்றம் செய்பவர்கள் ஒருவர் கூட அவன் இராஜ்யத்தில் இல்லை. ஆனால் திலீபன் மட்டும், தனக்கு குழந்தை பிறந்ததால், பித்ருக்கள் கடனிலிருந்து விடுதலை பெற்றான்.

3. ऋणाभिधानात्स्वयमेव केवलं तदा पितॄणां मुमुचे स बन्धनात् २०

ருணாபிதானாத் ஸ்வயமேவ கேவலம் ததா பித்ரூணாம் முமுசே ஸ பந்தனாத்|| 20

4. श्रुतस्य यायादयमन्तमर्भकः तथा परेषां युधि चेति पार्थिवः।
अवेक्ष्य धातोर्गमनार्थमर्थवित् चकार नाम्ना रघुमात्मसंभवम् ॥ २१

ஶ்ருதஸ்ய யாயாதயமந்தமர்பக: ததா பரேஷாம் யுதி சேதி பார்த்திவ:|
அவேக்ஷ்ய தாதோர்கமனார்த்தமர்த்தவித் சகார நாம்நா ரகுமாத்மஸம்பவாம்|| 21

சொல்லின் பொருளை அறிந்த அரசனான திலீபன் இந்த சிறுவன் சாஸ்த்ரங்களின் எல்லையை அடைவான், என்றும், அப்படியே போரில் எதிரிகளின் எல்லைகளையும் அடைவான், என்பதால் लघि என்கிற (லகி) தாதுவின் செல்லுதல் (அடைதல்) என்ற பொருளைக் கண்டு புதல்வனை ரகு என்று பெயர் வைத்தான். பிறகு உரிய காலத்தில் சௌளம், உபநயனம் முதலிய வைதிக ஸம்ஸ்காரங்களை அக்குழந்தைக்கு செய்தான். நல்ல சாஸ்த்ர கலைஞர்களைக் கொண்டு, ரகுவிற்கு பல விதமான வித்யைகளை போதித்தான். பிறகு விவாஹமும் செய்வித்தான். திலீபனும் ஸுதக்ஷிணையும் மிக்க மகிழ்ந்தவர்களாய் ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தனர். ப்ரஜைகளும் மிக்க மகிழ்ச்சியோடு இருந்தார்கள்.

திலீபன் 99 அஶ்வமேத யாகங்களைச் செய்து நூறாவது யாகத்திற்க்காக குதிரையை அவிழ்த்து விட்டான். ரகுவின் தலைமையில் வீரர்கள் பலர் அக்குதிரையை பின் தொடர்ந்தனர். அச்சமயத்தில் இந்திரன் அக்காவலர்கள் கண்ணுக்குப் புலனாகாமல் அங்கு வந்து குதிரையை கவர்ந்து சென்றான்.

இந்திரனுக்கு ஶதக்ரது எனப்பெயர். திலீபன் நூறாவது அஶ்வமேத யாகம் செய்தால், அவனுக்கு இந்திர பதவி வந்து சேர்ந்துவிடும். அதனால் இந்திரன் யாகத்திற்கு இடையூறு செய்வது வழக்கம். நந்தினியின் அனுக்ரஹத்தால் ரகு, இந்திரன் கவர்ந்து செல்வதைக்கண்டான். ரகுவிற்கும் இந்திரனுக்கு பலவிதமான வாக்குவாதங்களுடன் பயங்கரமான யுத்தமும் ஏற்பட்டது. ரகுவின் வீரவாதமே பாணமாக இருந்து இந்த்ரன் மனதைத் தாக்கியது. ரகுவின் சொல்லம்பு இந்திரனின் ஹ்ருதயத்தைப் பிளந்தது. இந்திரன் வஜ்ராயுதத்தால் ரகுவைத் தாக்கினான். ஆனால் ரகு வஜ்ராயுதத்தால் ஏற்பட்ட வலியை பொறுத்துக் கொண்டு, அதிக கோபத்தோடும் காம்பீர்யத்தோடும் மிக அதிகமான இந்திரனைத் தாக்கினான். நற்குணங்கள், விரோதிகள், நண்பர்கள், நடுநிலையிலுள்ளவர்கள் என அனைவரையுமே கவருமன்றோ! ரகுவின் போர்த்திறன் இந்திரனை மகிழச்செய்தது. எனது வஜ்ராயுதத்தை தாங்கிய தாக்கிய முதல் மாவீரன் நீ ஒருவனே! ரகு!

குதிரையைத்தவிர உனக்கு என்னவரம் வேண்டுமோ! அதைக்கேள். உன் போர்திறமை என்னை மகிழ்வித்து விட்டது. உடனே ரகுவும்,

5. अमोच्यमश्वम् यदिमन्यसे प्रभो ततः समाप्ते विधिनैव कर्मणि।
अजस्त्रतीक्षप्रयतः स मद्गुरुः क्रतोरशेषेण फलेन युज्यताम्॥ 65

அமோச்யமஶ்வம் யதிமன்யஸே ப்ரபோ தத: ஸமாப்தே விதினைவ கர்மணி|
அஜஸ்த்ரதீக்ஷாப்ரயத: ஸ மத்குரு: க்ரதோரஶேஷேண பலேந யுஜ்யதாம்|| 65

ப்ரபுவே குதிரையை விடத்தகாததாக நினைகின்றேயானால் அப்பொழுது எப்பொழுதும் யாகதீக்ஷையினால் பரிசுத்தரான என் தந்தை முறைப்படியே யாகமானது முடியும்பொழுது யாகத்திற்கு எந்தப்பலன் உண்டோ, முழுவதுமான அந்தப்பலனுடன் கூடியவராக ஆகவேண்டும், என்று அருள் செய்வாயாக, மேலும் யாக ஸபையில் அமர்ந்திருக்கும் என் தந்தையிடம், நான் அங்கு செல்வதற்குள், உன் தூதன் மூலம் இங்கு நடந்த அனைத்து செயல்களையும் சொல்லும்படி பிறார்த்திக்கின்றேன் என்றான் ரகு இந்திரனிடம்

6. तथेति कामं प्रतिशुश्रवान् रघोर्यथागतं मातलिसारथिर्ययौ॥ 67

ததேதி காமம் ப்ரதிஶுஶ்ரவான் ரகோர்யதாகதம் மாதலி ஸாரதியயெள|| 67

மாதலியை ஸாரதியாக உடைய இந்திரனும் அப்படியே ஆகட்டும் என்று கூறி சென்றான்.

அனைத்தையும் கேட்டறிந்த திலீபன், ரகுவிடம் அரசுரிமையை ஒப்படைத்து விட்டு, தன் வம்சத்தினரின் பழக்கப்படியே வானப்ரஸ்தராக காட்டில் தவம் செய்ய, மஹரிஷிகள் வசிக்கும் காட்டிற்கு சென்றான்.

चतुर्थः सर्गः நான்காம் ஸர்கம்

1. स राज्यं गुरुणा दत्तं प्रतिपद्यादिकं बभौ।
दिनान्ते निहितम् तेजः सवित्रेव हुताशनः॥

ஸ ராஜ்யம் குருநா தத்தம் ப்ரதிபத்யாதிகம் பபெள|
திநாந்தே நிஹிதம் தேஜ: ஸவித்ரேவ ஹுதாஶந:||

ரகு தந்தையினால் கொடுக்கப்பட்ட அரசைப் பெற்று பகலின் முடிவில் ஸாயங்காலத்தில் ஸூரியனால் தன்னிடம் வைக்கப்பட்ட ஒளியை அடைந்து அக்னி ப்ரகாசிப்பது போல மிகவும் பிரகாசமாக விளங்கினான். திலீபன் இராஜ்யத்தைவிட ரகுவின் அரசாட்சியை மக்கள் மிகவும் நேசித்தனர்.

சில மாதங்களில் சரத்காலம் வந்த்து. படைகளின் ஆற்றலும் மந்திரிகளின் ஒத்துழைப்பும் ரகுவிற்குசரத்காலம் யுத்தம் செல்வதற்கு வேண்டிய ஊக்கத்தையும் அளித்தது. யுத்தம் செய்ய புறப்படும் முன், ஶாஸ்த்ர விதிகளின்படி வாஜிநீராஜனம் என்றும் ஹோமத்தை செய்தான். அப்போது அக்னிபகவானே தனது ஜ்வாலை என்கின்ற கைகளால் ரகுவிற்கு வெற்றியை எடுத்து அளிப்பவன் போல் காணப்பட்டான். குதிரை முதலிய ஸகல ஸேனைகளுக்கும், மந்திரி, புரோஹிதர், படைகலன்கள் முதலிய அனைத்திற்கும் வெற்றிவானாக சூடி வர ஆரத்தி எடுத்து அனுப்புதல் க்ஷத்ரிய பரம்பரை வழக்கமாகும் வயதுமுதிர்ந்த பெண்கள். யுத்தயாத்ரை தொடங்கிய பொழுது ரகுவின் மேல் நெற்பொரியை தூவினர்

2. अवाकिरन् वयोवृद्धास्तं लाजैः पौरयोषितः॥
அவாகிரன் வயோவ்ருத்தாஸ்தம் லாஜை: பௌரயோஷித:|| 27
प्रथमं प्राचीम् ययौ - ப்ரதமம் ப்ராசீம் யயௌ||
முதலில் கிழக்கு திசையை நோக்கி சென்றான். அங்குள்ள பல தேசங்களை வெற்றிகொண்டு கீழ் கடலின் ஸமீபத்தை அடைந்தான். அவன் வெற்றியடையந்த நாடுகளும் மன்னர்களும்.

1. ஸும்ஹர்கள்
2. வங்கநாடு
3. கலிங்கம்
4. பாண்டிய நாடு
5. கேரள நாடு
6. பாரசீகம்---யவனர்கள்
7. ஸிந்துநதிதீரம் தங்கி இருந்த ஹூணர்கள் எனப்படும் ஒரு கூட்டத்தினர்
8. காம்போஜர்கள்
9. பிறகு ஹிமாலயத்தில் காட்டுவாசி வேடுவர்கள்
10. காமரூபம்–தற்போது அஸ்ஸாம்.

इति जित्वा दिशो जिष्णुः न्यवर्तत रथोद्धतम्।
रजोविश्रामयन् राज्ञाम् छत्रशून्येशु मौलिषु॥ 85
இதி ஜித்வா திஶோ ஜிஷ்ணு: ந்யவர்தத ரதோத்த்தம்|
ரஜோ விஶ்ராமயன் ராக்ஞாம் சத்ர ஶூன்யேஷு மௌலிஷு||
ஜயஶீலனான ரகு இவ்வாறு திசைகளை எல்லாம் வென்று சிற்றசர்களின் குடைகளற்ற கிரீடங்களில் தேரினால் கிளப்பப்பட்ட புழுதியை படியும் படி செய்து கொண்டு தன் தேசத்திற்கு திரும்பினான். ரகு சக்ரவர்த்தி அனைத்து ராஜாக்களையும் வென்றவன். அவன் ஒருவனே குடையுடன் இருக்காலம் என்பதுக்ஷத்ரிய தர்மம். பல அரசர்கள் சூழ ரகு தன் நாட்டை அடைந்தான். பிறகு ரகு விஶ்வஜித் எனும் யாகத்தை செய்து விஶ்வஜித் எனும் பட்டத்தை பெற்றான்.
स विश्वजितमाजह्रे यज्ञं सर्वस्वदक्षिणम्।
आदानं हि विसर्गाय सतां वारिमुचामिव॥ 86
ஸ விஶ்வஜிதமாஹ்ரே யக்ஞம் ஸர்வஸ்வதக்ஷிணம்|
ஆதாநம் ஹி விஸர்காய ஸதாம் வாரிமுசாமிவ||
மேகம் நீரை எடுத்துத் திரும்பவும் மழையாக அளிக்கின்றது. அது நல்லோர்கள் பிறரிடமிருந்து பொருள் பெற்று அவற்றைப் பலருக்கும் தந்து வருகின்றனர். தாங்கள் அனுபவிப்பதில்லை, பல அரசர்களை வென்று பெற்ற செல்வம் முழுவதையும், விஶ்வஜித் எனும் யாகத்தில் அனைத்து செல்வங்களையும் தக்ஷிணையாக் கொடுத்தான்.
பிறகு வெகு நாட்களாகவே தன்னுடன் இருக்கும், தான் வெற்றிக்கண்ட அரசர்களை, அவரவர்களின் மனைவிகளின் துன்பத்தை போக்கக்கருதி, தங்கள் தங்கள் நகரத்திற்கு திரும்பிசெல்ல அனுமதித்தான். அனைத்து அரசர்களின் கூட்டம், ரகுவை ஶிரம் தாழ்த்தி வணங்கிற்று. விஶ்வஜித் என்றும் ஸம்ராட் எனவும் ரகு பெருமையாகப் பேசப்பட்டான்.

கேள்விகள்

1. ரகு பிறந்த நேரம் க்ரஹங்களின் நிலை என்ன?
2. ஸ்ரீமத்ராமாயணத்தில் ஸ்ரீராமரின் க்ரஹ நிலை ஶ்லோகத்தை எழுது?
3. ப்ரபு-மந்த்ர-உத்ஸாஹ-ஶக்தி-ஒரு குறிப்பு எழுது?
4. மூன்று கடன்கள்-ஒரு குறிப்பு எழுது?
5. ரகு-பெயர் விளக்கம் எழுது?(ஶ்லோகத்துடன்)
6. ரகு இந்திரனிடம் என்ன பிறார்த்தித்தான்?
7. நான்காம் ஸர்கம் முதல் ஶ்லோகம் எழுது?
8. ரகு வென்ற நாடுகளின் பெயர்களை எழுது?
9. விஶ்வஜித் யாகம் ஶ்லோகத்துடன் ஒரு குறிப்பு எழுது?
10. வென்ற அரசர்களை ரகு என்ன செய்தான்?

Chapter Six

पञ्चमः सर्गः ஐந்தாம் ஸர்கம்

குருதக்ஷிணை ப்ரபாவம், அஜன் - இந்துமதி விவாஹம்

1. तमध्वरे विश्वजिति क्षितीशं निश्शेषविश्राणितकोशजातम्।
उपात्तविद्यो गुरुदक्षिणार्थी कौत्सः प्रपेदे वरतन्तुशिष्यः॥ 1
தமத்வரே விஶ்வஜிதி க்ஷிதீஶம் நிஶ்ஶேஷ விஶ்ராணித கோஶஜாதம்।
உபாத்தவித்யோ குருதக்ஷிணார்த்தீ கௌத்ஸ: ப்ரபேதே வரதந்து ஶிஷ்ய:॥
விஶ்வஜித் என்னும் யாகத்தில் மிச்சமில்லாமல் கொடுக்கப்பட்ட நிதிக்குவியல்களை உடைய அந்த அரசனான ரகுவை, கற்கப்பட்ட வித்யைகளை உடைய வரும் வரதந்து மஹரிஷியின் ஶிஷ்யருமான கௌத்ஸர் குரு தக்ஷிணையை விரும்பியவராக அடைந்தார். கௌத்ஸர் என்னும் வித்யார்த்தி வரதந்து என்னும் மஹானிடம் ஶிஷ்யராக சேர்த்து அனைத்து வித்யைகளையும் கற்றுக்கொண்டார். அவருக்கு குரு தக்ஷிணை கொடுப்பதாக பிறார்த்தித்து கேட்டுக் கொண்டார். தன் வ்ருத்தாங்களை மஹாராஜா ரகுவிடம் சொன்னார்.

2. समाप्तविद्येन मया महर्षिः विज्ञापितो अभूद्गुरुदक्षिणायै।
समे चिरायात्खलितोपचाराम् तां भक्तिमेवगणय पुरस्तात्॥ 20
ஸமாப்த வித்யேந மயா மஹர்ஷி: விக்ஞாபிதோ அபூத் குரு தக்ஷிணாயை। ஸமே சிராயாஸ்த்கலிதோபசாராம் தாம் பக்திமேவகணாய புரஸ்தாத்॥
வித்யாப்யாஸத்தை முடித்த என்னால் (கௌத்ஸரால்) முனிவரான வரதந்து என்னும் ஆசார்யார், குருதக்ஷிணை பெறுவதின் பொருட்டு விண்ணப்பம் செய்யப்பட்டவராக ஆனார். ஆனால் அவர்(குரு) வெகுகாலமாக தவறாத பணிவிடையையுடைய அந்த என் பக்தியையே முதலில் தக்ஷிணையாக எண்ணினார்.

3. निर्बन्धसंजातरुषार्थकार्श्यम् अचिन्तयित्वा गुरुणाहमुक्तः।
वित्तस्य विद्यापरिसंख्यया मे कोटीस्चतस्त्रो दश चाहरेति॥ 21
நிர்பந்தஸஞ்ஜாதருஷார்த்த கார்ஶ்யம் அசிந்தயித்வா குருணாஹமுக்த:।
வித்தஸ்ய வித்யா பரிஸங்க்யயா மே கோடீஸ்சதஸ்த்ரோ தஶ சாஹரேதி॥
தக்ஷிணை வேறு வேண்டாமென்று அவர் கூறியபோதும் நான், ஏதாவது பெறவேண்டுமென அவரை வற்புறுத்தினேன். அதனால் கோபம்கொண்டு பணம் பெறுவதில் உள்ள கஷ்டத்தை யோசிக்காமல் . பதினான்கு கோடிபவுன் கொண்டு வரும் படிகட்டளையிட்டார்.
வித்யாஸ்தானங்கள் 14

4. अङ्गानि वेदाश्चत्वारो मीमांसा न्यायविस्तरः।
पुराणं धर्मशात्रं च विद्या ह्येतास्चतुर्श॥
அங்கானி வேதாச் சத்வாரோ மீமாம்ஸா ந்யாயவிஸ்தர:।

புராணம் தர்மஶாத்ரம் ச வித்யா ஹ்யேதாச் சதுர்தஶ॥
என்று ஶ்ரீமநு ஸ்ம்ருதியிலும்,

5. पुराण न्याय मीमांसा धर्मशास्त्र अङ्गमिश्रिता:।
वेदा: स्थानानि विद्यानां धर्मस्य च चतुर्दश॥
புராண ந்யாய மீமாம்ஸா தர்ம ஶாத்ர அங்கமிஶ்ரிதா:।
வேதா: ஸ்தாநாநி வித்யாநாம் தர்மஸ்ய ச சதுர்ஶ॥
என்று ஶ்ரீயாக்ஞவல்க்ய மஹரிஷி ஸ்ம்ருதியிலும், ஶ்ரீபராஶர மஹரிஷிகளால் எழுதப்பட்ட விஷ்ணு புராணத்தில்,

6. अङ्गानि वेदाश्चत्वारो मीमांसा न्यायविस्तर:।
पुराणं धर्मशात्रं च विद्या ह्येताश्चतुर्दश॥
அங்காநி வேதாச் சத்வாரோ மீமாம்ஸா ந்யாயவிஸ்தர:।
புராணம் தர்மஶாத்ரம் ச வித்யா ஹ்யேதாச் சதுர்ஶ:॥

என்றும் வித்யாஸ்தான்ங்கள் மொத்தம் - 14 என நிர்ணயித்துள்ளார்கள்.

1. ரிக்வேதம்
2. யஜுர்வேதம்
3. ஸாமவேதம்
4. அதர்வவேதம்

ஆறு அங்கங்கள்

1. சிக்ஷை- வேதத்தின் மூக்கு
2. வ்யாகரணம்-வேதத்தின் வாய்
3. சந்தஸ்- வேதத்தின் பாதம்
4. நிருக்தம்- வேதத்தின் காது
5. ஜ்யோதிஷம்- வேதத்தின் கண்
6. கல்பம்- வேதத்தின் கை

1. மீமாம்ஸா
2. ந்யாயம்
3. புராணம்
4. தர்மஶாஸ்த்ரம்

என பதினாநான்கு ஆகும் இவைகளைத்தவிர, 1.ஆயுர்வேதம், 2.கந்தர்வ்வேதம், 3.தநுர்வேதம், 4.அர்த்தஶாஸ்த்ரம் என்ற நான்கையும் சேர்த்து 18 வித்யா ஸ்தானமாகும் கூறுவது வழக்கம். இவைகளில் உலகில் உள்ள அனைத்து வித்யைகளும் அடங்கியுள்ளன என்பது நமது பாரதீய வித்யைக்குண்டான மிகப்பெரிய கௌரவமாகும்.

ஶ்ரீவிஷ்ணு புராணத்தில்,

7. आयुर्वेदो धनुर्वेदो गान्धर्वश्चैव ते त्रय:।
अर्थशात्रं चतुर्थं तु विद्याह्यष्टादशैव ता:॥
ஆயுர்வேதோ தநுர்வேதோ காந்தர்வஶ்சைவ தேத்ரய:।
அர்த்தஶாஸ்த்ரம் சதுர்த்தம் து வித்யாஹ்யஷ்டாதஶைவ தா:।
என்று ஶ்ரீபராஶர மஹரிஷிகள் உபதேசித்துள்ளார்

இவைகளை எல்லாம் சேர்த்து "ஶாஸ்த்ரம்" என்பர் பொதுவாக 14
வித்யாஸ்தானங்கள் என்பதை மனதில் கொண்டு ஸ்ரீவரதந்து மஹரிஷிகள்.
வித்யைகளின் ஒவ்வொன்றுக்கும் கோடிப்பொன் (பவுன்-தங்கம்) வீதம். 14
கோடிப்பொன் தரும்படி கேட்டார் போலும் என்பது வ்யாக்யான
கர்த்தாக்களின் முடிவு. அதாவது எப்படியாவது குருதக்ஷிணை தருவதை
தவிர்க்க வேண்டும் என்பதே குருவின் ஆழ்ந்த குறிக்கோள். இவ்வாறு
அபரிமிதமாக கேட்டால் கௌத்ஸர், குருதக்ஷிணை கொடுக்கமாட்டாரல்லவா!
ஆனால் ஶிஷ்யன் விடுவானா! குருவாக்கை நிறைவேற்ற ஸங்கல்பம்
கொண்டு, மஹாராஜா ரகுவை வேண்டி வந்தான்.
அப்போது விஶ்வஜித் யாகத்தில் அனைத்து செல்வங்களையும் ராஜ்ய
பொக்கிஷங்களையும், ஸர்வஸ்வ தக்ஷிணையாக அளித்து விட்டதால்,
மண்பாத்ரத்தில் அநுஷ்டானம் செய்து கொண்டு இருந்தான். ஆகவே ரகு
மன்னனை வற்புறுத்த மனமில்லாமல் திரும்ப செல்ல எண்ணினார்.
அப்போது ரகு எனது அக்னிஹோத்ரசாலையில் இரண்டு, மூன்று நாட்கள்
பொறுத்திருங்கள். ரகுவிடம் குருதக்ஷிணை வேண்டி வந்தவர், அதை
பெறாமல் வேறு ஒருவரிடம் சென்றார், என்ற அபகீர்த்தி எனக்கு எப்போதுமே
இல்லாதது, இனிமேலும் உண்டாக வேண்டாம். அனைத்து மன்னர்களின்
செல்வங்களை முன்பே எடுத்துக்கொண்டு விட்டதால் குபேரனிடமிருந்து
தங்கத்தை கொண்டுவர விரும்பினான். ஆனால் ரகு குபேரனை வெல்வதற்கு
புறப்படுவதற்கு முன்பே, அவனது பொக்கிஷ நிதி அறையில் பொன்மாரி
பெய்து இருந்தது.

8. हिरण्मयीं कोषगृहस्य मध्ये वृष्टिम् शशंसु: पतितां नभस्त:। 29
ஹிரண்மயீம் கோஷக்ருஹஸ்ய மத்யே வ்ருஷ்டிம் ஶஶம்ஸு: பதிதாம்
நபஸ்த:॥
குபேரனிடமிருந்து பெற்ற அப்பொற்குவியல் முழுவதையும் ரகு
கௌத்ஸருக்கு அளித்தான்.

9. जनस्य साकेतनिवासि स्तौ द्वावप्यभूतामभिनन्द्यसत्वौ॥
गुरुप्रदेयाधिक निस्पृहोर्थी नृपोर्थिकामादधिकप्रदश्च॥ 31
ஜநஸ்ய ஸாகேத நிவாஸிநஸ் தௌ த்வாவப்யபூதாமபிநந்த்யஸத்வௌ।
குருப்ரதேயாதிக நிஸ்ப்ருஹோர்த்தீ ந்ருபோ அர்திகாமாததிக ப்ரதஶ்ச॥ 31
குருவிற்கு கொடுக்க வேண்டியதைக் காட்டிலும் அதிகமான பொருளில்
ஆசையில்லாத யாசகரும் (கேட்கவிரும்புவரும்), அவரின் விருப்பத்தினைக்
காட்டிலும் அதிகம் கொடுக்கின்ற அரசனுமாகிய அவ்விருவரும்,
அயோத்தியில் வஸிக்கும் ஜனங்களால் கொண்டாடத்தகுந்த
பெருதன்மையுடையவர்களாக இருந்தார்கள். கௌத்ஸர் மிகவும் மகிழ்ந்து
ரகுவை கொண்டாடினார். அவரின் ஆசீர்வாதத்தை ரகு எதிர்பார்க்க,

10. आशास्यमन्यत् पुनरुक्तभूतम् श्रेयांसि सर्वाण्याधिजग्मुषस्ते।
पुत्र लभस्वात्मकुणानुरूपम् भवन्तमीड्यं भवत: पितेव॥ 34
ஆஶாஸ்யமன்யத் புநருக்தபூதம் ஶ்ரேயாம்ஸி
ஸர்வாண்யாதிஜக்முஷஸ்தே।
புத்ர லபஸ்வாத்மகுணாநு ரூபம் பவந்தமீட்யம் பவத: பிதேவ॥
எல்லா நன்மைகளையும் அடைந்திருக்கும் உமக்கு ஆசீர்வதிக்கத்தக்க வேறு
எதுவும் கூறியது கூறல் போல் ஆகும். ஆகையால் புகழத்தகுந்த

உம்மை,உம்முடைய தந்தை புத்ரனாக அடைந்த்து போல், உமது குணங்களுக்குத் தகுந்த குமாரனை அடைவீராக என்று வாழ்த்தி, தன்குருவான வரதந்து ஆஶ்ரமம் நோக்கி சென்றார், கௌத்ஸர். ரகுவும் முனிவரின் அசீர்வாத பலத்தால், ஒரு பிள்ளையை ப்ரஹ்ம முஹூர்த்தத்தில் பெற்றான். ப்ரஹ்ம முஹூர்த்தத்தில் பிறந்த காரணத்தால் அம்மகனுக்கு ப்ரஹ்மதேவரின் பெயர்களுள் ஒன்றான அஜன் என்பதை பெயராக வைத்தான்.

அஜனும் தந்தையைப் போலவே காலக்ரமத்தில் அனைத்து வித்யைகளையும் கற்று, இளவரசனாக ஆவதற்கும் தகுதியுள்ளவனாக ஆனான். அப்போது விதர்பதேஶ அரசன் போஜன், தன் ஸஹோதரியான இந்துமதியின் ஸ்வயம் வரத்திற்கு ஏற்பாடு செய்திருந்தான். அஜனை அழைத்து வரவும் தூதுவன் ஒருவனை ரகுவிடம் அனுப்பினான். ரகுவும், அஜனுடன் மிகப்பெரிய ஸேனையையும் சேர்த்து விதர்பநாட்டிற்கு ஸ்வயம்வரத்தில் கலந்து கொள்ள அனுப்பினான். அப்போது செல்லும் வழியில் ஓர் இரவு நர்மதா நதியின் கீரையில் சேனைகளோடு தங்கினான்.

காலையில் நீராட நர்மதைக்கு சென்றபோது அங்கே, நீரில் யானை ஒன்று இருப்பதைக் கண்டான். காட்டு யானையின் மதவாசனையை முகர்ந்த மாத்திரத்தில் அஜனின் யானைகள் மிரண்டன. யானைப்பாகர்கள் அவைகளை அடக்க முயன்றும் பலன் அளிக்கவில்லை. குதிரைகள் கட்டு அறுத்துக் கொண்டு ஓடின. அஜனின் ஸேனைக் கூடாரம் ஒரே குழப்பத்தை அடைந்த்து. தர்ம ஶாஸ்த்ரங்களையும், க்ஷத்ரிய தர்மங்களையும் நன்கு அறிந்த அஜன், யுத்தம் செய்யும்காலம் தவிர பிற ஸமயங்களில் யானையைக் கொல்லுதல் கூடாது என்பதால், ஒரு பாணத்தினால் காட்டு யானையின் மத்தகத்தில் மெல்ல அடித்தான். பாணம் பட்ட க்ஷணத்தில் யானை கந்தர்வனாக மாறி அஜனை வாழ்த்தியது.

11. मतङ्गशापादवलेपमूलात् अवाप्तवानस्मि मतङ्गजत्वम्।
अवेहि गन्धर्वपतेस्तनूजं प्रियंवदं मां प्रियदर्शनस्य॥ 53

நான், ப்ரியதர்ஶனர் என்ற கந்தர்வ ராஜரின் புதல்வன். ப்ரியம்வதன் எனப்பெயர். என் கர்வத்தால் மதங்க முனிவரின் ஶாபத்திற்கு ஆளானேன் மதம் கொண்ட என்னை காட்டுயானையாக ஶபித்தார். பின் கருணை நிறைந்தவராக, என் வேண்டுகோளுக்கு இணங்க, இக்ஷ்வாகு வம்ஶத்தில் தோன்றிய அஜனுடைய பாணம் உன் மதங்கத்தில் பட்ட மாத்ரத்திலேயே, நீ கந்தர்வ ஶரீரத்தைப் பெறுவாய் என ஶாபவிமோசனம் அருளினார். வெகு நாட்களாக உமது தர்ஶனத்தை வேண்டி நின்றேன். இன்று பெருந்தன்மை வாய்ந்த உம்மால் எனது ஶாபம் நீங்கப் பெற்றேன். இதற்கு ப்ரத்யுபகாரமாக,கந்தர்வனை தேவதையாகக் கொண்டதும், அஸ்த்ரத்தை ப்ரயோகிப்பவருக்கு ஜயமும், விடுவதற்கும், அடக்குவதற்கும் வெவ்வேறு மந்த்ரங்களைக் கொண்டதுமான ஸம்மோஹநம் என்ற ப்ரஸித்தி பெற்றதுமான என்னுடைய அஸ்த்ரத்தை உமக்கு மகிழ்ச்சியுடன் அளிக்கின்றேன். பெற்றுக் கொள்ள வேண்டும் என பிறார்த்தித்தான். அஜனும் நர்மதா நதியின் ஜலத்தினால் ஆசமனம் செய்து விட்டு வடக்கு நோக்கியவனாய் இருந்து கொண்டு அத்திவ்ய அஸ்த்ரத்தை, கந்தர்வனிடமிருந்து பெற்றுக் கொண்டான். பிறகு அஜன் விதர்ப தேசத்தை அடைந்தான். ஸ்துதி பாடகர்கள் காலையில் அஜனை ஸுப்ரபாதம் சொல்லி துயிலெழுப்பினர்

षष्ठ:सर्ग:-ஆறாம் ஸர்கம்

அஜன் ஸ்வயம் வர மண்டபத்திற்கு சென்றான். அங்கு பல நாட்டு அரசர்கள் அமர்ந்திருப்பதைக்கண்டான். அஜனின் அழகிலும் காம்பீர்யத்திலும் மயங்கிய அவர்கள், இந்துமதி அஜனைத்தான் ஸ்வயம் வரத்தில் கணவனாக தேர்ந்தெடுப்பாள் என முடிவெடுத்தனர். ஸபையோர் அனைவருமே அஜனையை பார்த்துக் கொண்டு இருந்தனர். மங்கள வாத்யங்கள் முழங்க இந்துமதி கையில் மாலையுடன், ஸ்வயம்வர மணடபத்திற்குள் நுழைந்தாள். அனைத்து அரசர்களும் இந்துமதியின் தேஜஸில் மயங்கினர். அனைத்து இராஜ்ய லக்ஷணங்களுடன் கூடினவானக விளங்கினாள். அவருடன் தோழியாக வந்துள்ள வாயிர்காப்பவளான ஸுந்நதா என்பவள்,அனைத்து அரசர்களின் முழுவிவரங்களையும் அறிந்து இருந்தால், ஒவ்வொரு அரசராக அறிமுகம் செய்து வைத்தாள். அவர்கள்,

1.பரந்தபர் எனப்படும் மகததேச அரசர்.
2.அங்கதேசஅரசர்
3.அவந்திதேசமன்னன்
4.கார்த்தவீரியன் வம்ஶத்தில் வந்தப்ரதீபன் எனபெயர்பெற்றஇளவரசர்.
5.சூரஸேனதேசமன்னன் ஸுஷேணன் நீபவம்சத்தவன்.
6.கலிங்கதேசமன்னன் ஹேமாங்கதன்
7.பாண்டியநாட்டுமன்னன்.

இவர்களைஅவள்விரும்பிமணக்காததற்குகாரணமாக, அவளை வேறு ஒருவருனுக்காக படைத்திருக்கும்பொழுது அவள் எவ்வாறு இவர்களில்ஒருவரைதேர்ந்தெடுக்கமுடியும் ? என்கிறார், மஹாகவிகாளிதாஸர். அதற்கு, கடலை நோக்கிச்செல்லுகின்ற நதியானது, வழியிலே எதிர்படுகின்ற மலையை விட்டுநீங்கிச்செல்வதுபோல , இந்துமதி அனைவரையும் தாண்டி அஜன்மன்னனிடம் வந்தாள் , என்கிறார் அஜனுக்கும் மனதில் ஸந்தேஹம் தோன்றியது. இந்துமதிதன்னைவரிப்பாளா? என்றுஎண்ணினான்.

तं प्राप्य सर्वावयवानवद्यम् व्यावर्ततान्योपगमात् कुमारी।
न हि प्रफुल्लं सहकारमेत्य वृक्षान्तरं काङ्क्षति षट्पदाली॥69

தம் ப்ராப்ய ஸர்வாவயவாநமேத்யம் வ்யாவர்ததான்யோபகமாத் குமாரீ|
ந ஹி ப்ரபுல்லம் ஸஹகாரமேத்ய வ்ருக்ஷந்தரம் காங்க்ஷதி ஷட்பதாலீ|

இந்துமதி எல்லா அங்கங்களிலும் குற்றமற்ற அவ்வஜனை அடைந்து வேறு அரசனிடம் செல்வதிலிருந்து நின்று விட்டாள். ஏனெனில் வண்டுக்களின் கூட்டம் மலர்ந்த ஒட்டு மாமரத்தை அடைந்தபின் வேறு மரத்தை விரும்புகிறதில்லை. தோழி ஸுநந்தை அஜனின் பெருமைகளையும், இக்ஷ்வாகு வம்ஶ பெருமைகளையும், இந்துமதியின் கருத்தை அறிந்து சற்று விரிவாகவே கூறினாள். மேலும் இக்ஷ்வாகு போன்ற மாமன்னர்களின் வீர,தீர,பராக்ரமங்களை எல்லாம் ஒன்றாக அமைந்த ரகுவின் பெருமைகளைக் கூறி ஒவ்வொரு மன்னர்களும் ஒருவருக்கொருவர் பல வகையிலும் உயர்ந்தவர்கள் என்று கூறினாள்.

இதனைக் கேட்ட இந்துமதி, அஜமஹாராஜனிடம் விருப்பம் இருப்பதாக அஜனை கணவனாக ஏற்பதை, தன் பார்வையாலேயே தெரிவித்தாள். அந்த ஸ்வயம் வரா மண்டபத்தில், அனைத்து மாமன்னர்களும் பார்த்துக் கொண்டு இருக்கும் பொழுது, க்ஷத்ரிய தர்மப்படி, மக்களின் ஆனந்த வெள்ளத்தினிடையே, மங்களகரமான பொடியினால் வெண்சிவப்பான மாலையை, ஸுநந்தையைக் கொண்டு, அஜனுக்கு இந்துமதி அணிவித்தாள் அஜன் இந்துமதி விவாஹம் மிக விமர்சையாக் கொண்டாடப் பட்டது

கேள்விகள்

1.குரு, ஶிஷ்யர்களின் பெயரை எழுது.
2.கௌத்ஸர் எதற்காக ரகுவிடம் சென்றார்.
3.14 வித்யாஸ்தானங்கள் யாவை?
4.மநுஸ்ம்ருதி, விஷ்ணுபுராண ஶ்லோகங்களை எழுது.
5.யாக்ஞவல்க்யமஹரிஷி ஸ்ம்ருதியில் என்னகூறப்பட்டுள்ளது. ஶ்லோகத்துடன் எழுது
6.குருதக்ஷிணை எவ்வளவு கேட்டார்?ஏன்?
7.மேலும்4வித்யாஸ்தானங்களின் பெயரை எழுது. அவைகள் எங்கு கூறப்பட்டுள்ளன?
8.ரகு எவ்வாறு கௌத்ஸருக்கு பொன்கொடுத்தார்>?
9.கௌத்ஸர் அளித்த ஆசீர்வாதம் என்ன? அந்த ஶ்லோகத்தைஎழுது.
10.ரகுவின்புதல்வன்பெயர்என்ன?
11.கந்தர்வஶாபவிமோசனம். ஒருகுறிப்புஎழுது.
12.கந்தர்வன்பெயர்என்ன?அவன்என்னஅஸ்த்ரம் அஜனுக்கு கொடுத்தான்.
13.இந்துமதியின் தோழிபெயர்என்ன?அவள்அறிமுகப்படுத்தியமன்னர்கள்யார்-யார்?
14.இந்துமதி யாரை மணந்தாள்?

सप्तम: सर्ग: ஏழாம்ஸர்கம்.

रतिस्मरौ नूनमिमावभूताम् राज्ञां सहस्त्रेषु तथाहि बाला।
गतेयमात्म प्रतिरूपमेव मनो हि जन्मान्तरसङ्गतिज्ञम्॥ 15

ரதியும் மன்மதனுமே இந்துமதியும் அஜனுமாகப் பிறந்தனர். இஃது உண்மை. ஏனெனில் இப்பெண் அரசர்களின் ஆயிரங்களில் தனக்குத் தகுந்தவனையே அடைந்தாள். மனம் பூர்வஜன்மத்தின் தொடர்பை அறியக் கூடியதல்லவா? என்று விதர்பநாட்டு பட்டண மக்கள் ஒருவருக்கொருவர் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தனர். पूर्वप्रज्ञा பூர்வ ப்ரக்ஞா என்பது உபநிஷத் வாக்கு. இவ்வாறு வெகு விமர்சையாக க்ஷத்ரிய தர்மப் படியும் வேதோக்தமாகவும் விவாஹம் மிகவும் விமர்சையாக ஆனபிறகு, தன் நாட்டிற்கு செல்ல கிளம்பினான்.

அப்போது ஸ்வயம் வரத்தில் தங்களுக்கு இந்துமதி கிடைக்காததால் அரசர்கள், இந்த தம்பதியினர் வரும் வழியில் அவர்களை தாக்கினர். அஜனும் கந்தர்வன் அளித்த ஸம்மோஹன அஸ்த்ரத்தால் அனைவரையும் தூங்கச் செய்துவிட்டு, வெற்றி சங்கநாதம் கொண்டு, தன் வீரர்களுடன், இந்துமதியோடு கூட, தன் அயோத்தி நகரம் சென்றடைந்தான்.

அஜன் அயோத்தி வருமுன்பே விஷயங்களைக் கேட்டு அறிந்த ரகு மஹாராஜன், வெற்றியுடையவனாகவும், சிறந்த மனைவியுடன் கூடியவனாகவும், திரும்பிய அவனை, கொண்டாடி அவனிடத்தில் இராஜ்யம், மற்றும் குடும்ப பாரங்களை ஒப்படைத்து விட்டு, மோக்ஷமார்கத்தில் பற்று உடையவனாக ஆனான். ஏனெனில், குலத்தை தாங்கக் கூடிய புத்ரன் இருக்கும் பொழுது, ஸூர்ய வம்ஶத்து அரசர்கள், க்ருஹஸ்த தர்மத்தை அனுஷ்டிப்பதின் பொருட்டு, வீட்டில் இருப்பது இல்லை.

वार्द्धके मुनिवृत्तीनाम्-1-8

வார்த்தகே முனிவ்ருத்தீனாம்

வயதான காலத்தில் முனிவர்களின் தபஸ்ஸை உடையவர்களும், என்று ஸூர்யகுலவம்ஶ மன்னர்களின் தர்மம் கூறப்பட்டுள்ளதை கவனிக்க வேண்டும்.

Chapter Seven

अष्टम: सर्ग: - எட்டாவது ஸர்கம்.

ரகுவின் விதேஹமுக்தி, இந்துமதி மறைவு, அஜனின் துக்கம்

अथ तस्य विवाहकौतुकं ललितं बिभ्रत एव पार्थिव:।
वसुधामपि हस्तगामिनीम् अकरोदिन्दुमतीमिवापराम्॥ 1

அத தஸ்ய விவாஹகௌதுகம் லலிதம் பிப்ரத ஏவ பார்த்திவ:।
வஸுதாமபி ஹஸ்த காமினீம் அகரோதிந்து மதீ மிவாபராம்॥

ரகு தன் மகனுக்கு விவாஹம் முடிந்தவுடனேயே அரசுரிமையையும் அளித்தான். விவாஹத்தின் போது வலதுகையில் மங்கள நூலை அணிவிப்பார்கள். (கங்கனம்) மணம் முடிந்த மூன்றாவது அல்லது எட்டாவது நாளில் அக்கங்கணத்தை நீக்குவார்கள். அதை நீக்குவதற்கு முன்பே, அஜனை ரகு ராஜ்யாபிஷேகம் செய்து வைத்தான். பூமியும் அஜனை அடைவதில் ஆசையுடையதாக இருந்ததால், மற்றொரு இந்துமதி போல என கவி விஶேஷமாக கூறுகின்றார்.

अहमेव मतो महीपतेरिति सर्व: प्रकृतिष्वचिन्तयत्।
उदधेरिव निम्नगाशतेष्वभवत् नास्य विमानना क्वचित्॥ 8

அஹமேவ மதோ மஹீபதோரிதி ஸர்வ: ப்ரக்ருதிஷ்வசிந்தயத்।
உத்தேரிவ நிம்நகாஶதேஷ்வபவத் நாஸ்ய விமாநநா க்வசித்॥

ஜனங்களில் எல்லோரும் நானே அரசனுக்குப் ப்ரியமானவன், என ஒவ்வொருவரும் நினைத்தனர். ஸமுத்ரத்திற்கு நூற்றுக்கணக்கான நதிகளிடத்தும் பக்ஷபாதமின்மைப் போல, எவரிடத்திலும் அவமதிப்பான எண்ணம் அஜனுக்கு இல்லை. ஜனங்கள் அஜனிடம் மிகவும் அன்பும், மரியாதையும் உடையவர்களாக இருந்தனர். ரகு, மன உறுதியுள்ள அஜனது ஆட்சியில் குடிமக்கள் ஸுகமாக வாழ்கின்றனர் எனவும், ஜனங்களின் மத்தியில் அவன் அன்பினால் இடம் பெற்றுள்ளான் என அறிந்து, புதல்வரிடம் ராஜ்யத்தை ஒப்படைத்து, விருப்பப்படியே நாட்டின் எல்லையிலேயே ஆஶ்ரமம் அமைத்துக் கொண்டு, ஸ்வர்கத்திலும், விஷய ஸுகங்களிலும் ஆசையற்றவனாக, ஸன்யாஸ ஆஶ்ரமத்தை ஏற்றுக்கொண்டு, மற்ற முனிவர்களைப் போல, தல வாழ்க்கையை மேற்கொண்டான்.

यतिपार्थिवलिङ्गधारिणौ ददृशाते रघुराघवौ जनै:।
अपवर्गमहोदयार्थयो: भुवमंशाविव धर्मयोर्गतौ॥ 16

யதிபார்த்திவ லிங்க தாரிணௌ தத்ருஶாதே ரகுராகவௌ ஜனை:।
அபவர்க மஹோதயார்த்தயோ: புவமம்ஶாவிவ தர்மயொர்கதௌ॥

ப்ரவ்ருத்தி தர்மம், நிவ்ருத்தி தர்மம் என வேத க்ரந்தங்களில், தர்மம் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தர்ம,அர்த்த,காமம் இவைகளைக் கருதிச் செய்யப்படுவது ப்ரவ்ருத்தி தர்மமாகும். இவைகளையே பயனைக்கருதாது ஈஶ்வரார்பணமாக செய்யப்படுவது மோக்ஷத்தை விரும்பி செய்யப்படுவது நிவ்ருத்தி தர்மமாகும். இவ்விரண்டு தர்மங்களும் நேரில் உருவெடுத்து வந்தது போல், ஸந்யாஸியான ரகுவையும், சக்ரவர்த்தியான அஜனையும், மக்கள் கருதினர். ஸன்யாஸியின் சின்னங்களையும் (காஷாயம்,தண்டம்,கமண்டலு) அரசனது சின்னங்களையும் (மகுடம், செங்கோல், வெண்குடை முதலியன) மோக்ஷம். இவ்வுலகிலுள்ள நன்மைகள் இவைகளைப் பயனாக் கொண்ட இருவகை தர்மங்களின் பூமியை அடைந்துள்ள இரண்டு பகுதிகளைப் போன்று ஜனங்களால் கருதப்பட்டனர். பிறகு எல்லா உயிர்களிடத்தும் ஸம நோக்கம் கொண்ட

பற்றற்றவனான ரகு, தன் மகனின் விருப்பப்படி சில வருஷங்களை கழித்து, ஒன்றிய த்யானத்தினால் ப்ரக்ருதிக்கு புறம்பான அழிவற்ற பரமாத்மாவை அடைந்தான். ஜீவன்முக்தனான ரகு, விதேஹ முக்தியை அடைந்தான், என்று வ்யாக்யான காரர்கள் புகழ்கின்றனர்.

योगेनान्ते तनुत्यजाम् யோகேநாந்தே தநுத்யஜாம் (1-8)

என்று இக்ஷ்வாகுவம்ஶ மன்னர்களின் பாரம்பர்ய தர்மத்தை ஒட்டி, ரகு ஜீவப்ரஹ்ம ஐக்ய ஞானத்தினால், ஶரீரத்தை, பாம்புசட்டையை உதறுவது போல், விட்டான்.

श्रुतदेह विसर्जन:पितु: स्चिरमश्रूणि विमुच्य राघव:।

विदधे विधिमस्य नैष्ठिकम् यतिभि: सार्धमनग्निमग्निचित्॥ 25

ஶ்ருதேஹ விஸர்ஜந: பிது: சிரமஶ்ரூணி விமுச்ய ராகவ:।

விததே விதிமஸ்ய நைஷ்டிகம் யதிபி: ஸார்தமநக்னிமக்னிசித்॥

ஆஹிதாக்னியான அஜன் தந்தையின் ஶரீர த்யாகத்தை கேள்வியுற்றவனாக, வெகுநேரம் கண்ணீரை பெருக்கியபின் ரகுவிற்கு ஸன்யாஸ தர்மபடி அக்னி இல்லாத உத்தரக்ரியைகளை, மற்ற ஸன்யாஸிகளுடன் இருந்து கொண்டு செய்தான். உலக பற்றை விட்ட ஸன்யாஸிகளின் உடலை எரிக்காமால் புதைக்க வேண்டுமென்று ஶாஸ்த்ரம் கூறுகின்றதால், யதிஶ்ரேஷ்டனான ரகுவின் உடலை அஜன் புதைத்து அதிஷ்டானம் அமைத்து பூஜிக்கலானான். ஶாஸ்த்ரத்தை ப்ரமாணமாகக் கொண்டல்லவா, மஹாகவி காளிதாஸர், ரகுவம்ஶம் மற்றும் இதர காவ்ய, நாடகங்களையும் இயற்றியுள்ளார். ஸந்யாஸிகளுக்கு உத்தரக்ரியை பற்றி வேதங்களிலும், மற்ற ஸ்ம்ருதிகளிலும் கூறப்பட்டுள்ளது.

सर्वसङ्गनिवृत्तस्य ध्यानयोगरतस्य च। न तस्य दहनं कार्यं नैव पिण्डोदकक्रिया।

निदध्यात् प्रणवेनैव बिले भिक्षो: कलेबरम्। प्रोक्षणं खननं चैव सर्वं तेनैव कारयेत्।

ஸர்வஸங்க நிவ்ருத்தஸ்ய த்யாந யோக ரதஸ்ய ச

ந தஸ்ய தஹநம் கார்யம் நைவ பிண்டோதகக்ரியா।

நிதத்யாத் ப்ரணவேநைவ பிலெ பிக்ஷோ: கலேபரம்

ப்ரோக்ஷணம் கநநம் சைவ ஸர்வம் தேனைவ காரயேத்॥

ஸந்யாஸிகளின் உடலை புதைக்க வேண்டும் என்பதற்கு மேற்படி ஸ்ம்ருதி வாக்யம் ப்ரமாணமாகும். அதைபின்பற்றி காளிதாஸரும், அஜன், ரகுவின் உடலை அக்னி இல்லாமல்अनग्निम् அநக்னிம் என்று குறிப்பிடுகின்றனர்.யோகத்தினால் ஸித்திபெற்று உடலை விடுபவர்கள், தாமே முக்தியடைகின்றனர்.

ब्रह्मवित् ब्रह्मैव भवति ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி ब्रह्मैवसन् ब्रह्माप्येति ப்ரஹ்மைவஸன் ப்ரஹ்மாப்யேதி. न तस्य प्राणा: उत्क्रामन्ति अत्रैव समवलीयते।

ந தஸ்ய ப்ராணா: உத்க்ராமந்தி அத்ரைவ ஸமவலீயதே।

போன்ற உபநிஷத் வாக்யங்களின் ப்ரமாணங்களை குலகுருவான வஸிஷ்டர் போன்ற மஹரிஷிகள், தந்தையின் பிரிவால் கலக்கமுற்று கண்ணீரைப் பெருக்கும் அஜனிடம் பலவாறாக கூறினர். ஸந்யாஸிகளுக்கு மரணம் என்பது உயர்ந்த நிலையை அடைவதற்கான வழியாகும். அவர்கள் எப்போதுமே முக்தியை அடைந்தவர்கள். ஶரீரத்தைதான் விட்டுள்ளனர். நம்மைப்பிரிந்து விட்டனரே என நாம் வருந்தலாகாது.மேலும் ஆசௌசம் போன்ற தீட்டுகளும், அவரின் பந்துகளுக்கும், அவரின் வீட்டிற்கோ கிடையாது. ஸந்யாஸிகளின் ஸமாதி காரியங்களில் கலந்து கொள்பவர்களுக்கு யாகங்களின் கடைசி தினத்தில் செய்யப்படும் அவப்ருத ஸ்நான பலன் கிடைக்கும். மேலும் ஸமாதியடைந்த ஸந்யாஸிகளின் புதல்வர் ஸரியான முறையில் ஶ்ராத்தம் முதலிவற்றைச் செய்துதான், அத்தகையோர் நற்கதிபெற வேண்டுமென்பதில்லை. அவர்கள் தங்களின் யோக

ஶக்தியினாலேயே நற்கதி அடைந்துவிடுவார்கள். ஆனால் அஜன் தன் தந்தையிடத்தில் அதிக பக்தியுள்ளவனாக இருக்கின்றமையால் தன் கடமையாகிய ஶ்ராத்தம் செய்தல் முதலியவற்றை முறைப்படி செய்தான்.

अकरोत् स तदौर्ध्वदैहिकम् पितृभक्त्या पितृकार्यकल्पवित्। 26

அகரொத் ஸ ததெளர்த்வ தைஹிகம் பித்ரு பக்த்யா பித்ரு கார்ய கல்பவித்॥

பித்ருக்ரியைகளின் செய்முறையை அறிந்த அஜன் தந்தையினிடத்துள்ள பக்தியினால் ரகுவினுடைய உத்தரக்ரியைகளை ஶ்ரத்தையாக செய்தான். ஸந்யாஸிகளுக்கு அந்த உத்தரக்ரியைகள் அவஶ்யம் இல்லாவிட்டாலும், அவரின் ஸந்ததிகள் கட்டாயம், ஶ்ராத்தம் ஆராதனை முதலியவைகளை, தங்கள் வம்ஶ க்ஷேமத்திற்காக ஶ்ரத்தையுடன் செய்தல் வேண்டும் என்பது மஹரிஷிகள், வேதோக்தப்ரகாரமாக, கட்டளை இட்டுள்ளார்கள். அதன் ப்ரகாரம் அஜன் அனைத்தையும் செய்தான். ஸ்ரீ ஸுமந்து என்கின்ற முனிவரும், ஸந்யாஸிகளான யதிகளின் உயிர் நீத்தலை பற்றி வருந்தக் கூடாது, என்பதை கூறியுள்ளார்.

परिव्राजि विपन्ने तु पतिते चात्मवेदिनि। कार्योनशोको ज्ञातीनामन्यथा दोषभागिनः॥

பரிவ்ராஜி விபந்நே து பதிதே சாத்மவேதிநி

கார்யோ ந ஶோகோ ஞாதீநாமன்யதா தோஷபாகிந:॥

பித்ருகார்யங்களை ஶ்ரத்தையாக செய்தால், அக்ருஹத்தில் ஶுப விஶேஷங்கள், ஸந்ததிகள் வளர்ச்சி என பல நல்லகார்யங்கள் உடனே காலக்ரமத்தில் நடைபெறும். அஜன், தன் தந்தையும், குருவான யதிஶ்ரேஷ்டர் ரகுவின் அந்திம கார்யங்களை வஸிஷ்டர் முதலிய மாமுனிவர்களின் வழிகாட்டுதல் படி செய்ததால், அஜனுக்கு ஓர் ஆண்பிள்ளை பிறந்தது.

दशरश्मिशतोपमद्युतिं यशसा दिक्षु दशस्वपि श्रुतम्।

दशपूर्वरथं यमाख्यया दशकण्ठारिगुरुं विदुर्बुधाः॥ 29

ஆயிரம் கதிர்களையுடைய ஸூரியனுக்கு ஸமமான பொலிவை உடையவனும், புகழினால், பத்து திசைகளிலும் ப்ரஸித்தி பெற்றவனும், பத்து தலைகளையுடைய ராவணனின் பகைவனான ஸ்ரீராமனுடைய தந்தையுமாகிய எந்த மகனை பெயரினால் தஶ என்ற சொல்லை முன்னே உடைய ரதனாக தஶரதன் என்று அறிஞர்கள் அறிகின்றனரோ, அத்தகைய மகனை இந்துமதி பெற்றாள். தஶரதன் பிறந்தது முதல் மிகவும் ஆனந்த மடைந்தனர் அஜனும் இந்துமதியும் அஜனின் பெருமையை கவி அழகாக வர்ணிக்கின்றார்.

बलमार्त भयोपशान्तये विदुषां सत्कृतये बहुश्रुतम्।

वसु तस्य विभोः न केवलम् गुणवत्तापि परप्रयोजना॥ 31

பலமார்த பயோபஶாந்தயே விதுஷாம் ஸத்க்ருதயே பஹுஶ்ருதம்।

வஸு தஸ்ய விபோ: ந கேவலம் குணவத்தாபி பரப்ரயோஜனா॥

அஜன் தனக்கென வாழாமல், பிறர்க்குரியவனாகவே இருந்தான். தன் செல்வங்களையே மட்டுமின்றி தனது நற்குணங்களையும் பிறர் நன்மைக்கே பயன் படுத்தினான். மெலிந்தோரின் அச்சத்தைப் போக்குவதற்கு தன் பலத்தை உபயோகித்தானே அல்லாமல் பிறரை துன்புறுத்துவற்காக இல்லை. அதேபோல் அதிகமாக படித்ததால் செருக்குறாமல் கற்றோரின் பெருமையை அறிந்து அவர்களுக்கு தகுந்த மதிப்பை அளித்தான். இவ்வாறு பல நற்குணங்களுடனும், தன் மனைவி இந்துமதி, குழந்தை தஶரதன் முதலியோருடனும், அஜன் மிகவும் ஸௌக்யமாகவும், தேஶமக்களை தன் பிள்ளையைப் போலவும் கருதி அரசாட்சி செய்து கொண்டும், மன அமைதியுடனும் வாழ்நாளை கழித்தான்.

ஒரு ஸமயம் அஜன், இந்துமதியுடன் நகரத்திற்கு வெளியில் உள்ள தோட்டத்திற்கு மன மகிழ்ச்சிக்காக சென்றான். ஆகாயமார்கமாக நாரத மஹரிஷிகள் கோகர்ண க்ஷேத்ர பரமேஶ்வரனை தரிசிப்பதற்காக கையில் வீணையுடனும், பகவத்கான பரவசத்துடனும்

சென்று கொண்டு இருந்தார். அந்த வீணையின் நுனியில் தேவலோக புஷ்பமாலை ஒன்று இருந்தது. புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட வீணையில் இருந்து அம்மாலை காற்றின் வேகத்தால் இந்துமதியின் மீது விழுந்தது. அந்த புஷ்பமாலையை பார்த்த அந்த க்ஷணத்திலேயே இந்துமதியின் உயிர் பிரிந்தது.

உறுதியான மனமுடையவனாயினும், அஜன் இந்துமதி இறந்த துக்கத்தைப் பொறுக்காமல் கண்ணீர்விட்டு புலம்பினான். அப்போது தஶரதனுக்கு இரண்டாவது வயதாகும். அதை கவி प्रतिपच्चन्द्रनिभ: ப்ரதிபச்சந்த்ர நிப:| ஶுக்லபக்ஷ ப்ரதமை (த்விதீயை) சந்திரனைப் போன்ற புதல்வன் என்கிறார். ப்ரதிபத் என்பது ப்ரதமையாயிய்னும், அன்று சந்திரன் காணப்பட்டது ஆகவே த்விதீயை எனப் பொருள் கொள்ள வேண்டும் என்று வ்யாக்யானகாரர்களின் முடிவு.

பல வாறாக அழுது புலம்பும் அஜனை கட்டுப்படுத்த யாராலும் இயலவில்லை. பிறகு பலரின் வேண்டுகோளுக்கிணங்கி, இந்துமதியின் அந்திம ஸம்ஸ்காரங்களை அந்த உத்யான வனத்திலேயே செய்தான். பிறகு மனைவி இன்றி, இழந்த சோகத்துடன் அயோத்திக்குள் சென்றான். அப்போது நகரத்தினர் அனைவரும் கண்ணீர் பெருக்கினர். யாகத்திற்காக ஸங்கல்பித்துக் கொண்டு விட்டதால், குருவான வஸிஷ்ட மாமுனிவர், தன் ஞானத்ருஷ்டியால் அனைத்துயும் அறிந்தார். தீக்ஷாகாலத்தில் யாக ஸ்தலத்தை விட்டு செல்வது இயலாததாகையால், தன் ஶிஷ்யன் மூலம் அஜனை தேற்றினார். அப்போது இந்துமதியின் வரலாற்றைத் தெரிவித்தார். ஸ்ரீத்ருணபிந்து மஹரிஷியின் தவத்தை குலைக்க இந்திரன், ஹரிணீ என்கின்ற அப்ஸரஸை அனுப்பினான். மஹரிஷி இதை உணர்ந்து அவளை மனுஷ்ய ஸ்த்ரீயாக ஆவாயாக என ஶபித்தார்.

भगवन् परवानयं जन: प्रतिकूलाचरितं क्षमस्व मे।

इति चोपनतां क्षितिस्पृशं कृतवाना सुरपुष्पदर्शनात्॥ 81

பகவந் பரவாநயம் ஜந: ப்ரதிகூலாசரிதம் க்ஷமஸ்வ மே|

இதி சோபநதாம் க்ஷிதிஸ்ப்ருஶம் க்ருதவாநா ஸுரபுஷ்பதர்ஶநாத்|| 81

ஶாபத்தை செவியுற்ற ஹரிணீ முனிவரிடம் இச்செயல் நான் வேண்டுமென்று செய்த தவறன்று நான் இந்திரனின் அடிமை. அவர் கட்டளைப்படி நடந்தேன். என்னை மன்னிக்க வேண்டும் என்று அடிபணிந்து வேண்டினாள்.

முனிவரும். நீ மானிடப் பெண்ணாகப் பிறக்க வேண்டியவள். ஸ்வர்கலோக புஷ்பத்தை நீ எப்போது காணப்பெருவாயோ அப்பொழுது உன் ஶாபம் நீங்குமென ஶாபவிமோசனமும் அருளிச் செய்தார்.

அவளே விதர்பதேஶத்தில் பிறந்து, உனக்கு மனைவியான இந்துமதி. தேவமலரைக் கண்டதும். தன் ஸ்வரூப ஸ்தானமான தேவலோகத்தை அடைந்தாள். ஆகவே நீ வருந்த வேண்டாம். இதை மறக்க முயற்சித்து இராஜ்ய பரிபாலனம் செவ்வனே செய்துவா என கட்டளையிட்டார்.

உன் ஶாஸ்த்ர அறிவைக் கொண்டு. மனதின் துக்கத்தை ஜயிப்பாயாக. தைர்யத்தைக் கொள்ள வேண்டும் என்று அன்பான ஶாஸ்த்ரோக்தமான ஆறுதல் அருளினார். என்னதான் ஆறுதல்களை கேட்டாலும். அரண்மனைவளாகத்தில் (கட்டிடங்களில்) வளரும் ஆலமரம், அரசமரம் போன்று. அம்மரமே அக்கட்டிட சுவரை இரண்டாகப்பிளப்பது போல. அந்த இந்துமதியின் துயரம். அவனது மனதை இரண்டாக பிளந்ததுபோல் இருந்தது.

प्लक्षप्ररोह इव सौधतलं बिभेद।

ப்லக்ஷ ப்ரரோஹ இவ ஸௌததலம் பிபேத|| 93

ஆலமரத்தின்வேர்சிறிதேயாயினும். மிகப்பெரியகட்டிடங்களையும்பிளந்துவிடுகின்றது காலக்ரமத்தில்அல்லவா' அதைப்போல் இந்துமதியின் பிரிவுத்துயர் அஜனின்

இதயத்தைத்தாக்கி அவனைநோயில்தள்ளியது. உண்ணாநோன்பை கைக்கொண்டான். (கட்டிடங்களில்மரங்கள்வளராமல்அடிக்கடிகவனிக்கவேண்டும்.)

காலக்ரமத்தில்தஶரதனுக்கு பட்டம்சூட்ட எண்ணினான் . தஶரதனைஅரசனாக்கிவிட்டு, கங்கையும், ஸரயூநதியும் சேரும்புண்யதீர்தத்தில் மூழ்கி அஜன்உயிர்நீத்தான் . தேவருள்ஒருவனாகஆனான்.

கேள்விகள்.

1. அஜன், விரோதிகளைஎவ்வாறுஜயித்தான்?
2. அஜனின் நற்குணங்களைஎழுது.
3. ரகு எவ்வாறு உடலைநீத்தான்.
4. ஸந்யாஸிகளின் விதேஹமுக்தி-ஒருகுறிப்புஎழுதுக.
5. ஸ்ரீஸுமந்துமுனிவரின் ஸ்ம்ருதிவாக்யம்எழுது.
6. தஶரதன்பெயர்காரணம்எழுது.
7. இந்துமதி பற்றி ஒருசிறுகுறிப்பு எழுது.
8. அஜனின் மனம்எவ்வாறு இருந்தது.
9. அஜன்-இந்துமதிவரலாறு எந்தஸர்கத்தில் ரகுவம்ஶத்தில் உள்ளது.

Chapter Eight

नवम: सर्ग: ஒன்பதாவது ஸர்கம்.

ஸ்ரீகாளிதாஸ ராமாயணம்.

அஜனுக்குப்பிறகு தஶரத சக்ரவர்த்தி, தன் முன்னோர்கள் போலவே பலயாகங்களை செய்து கொண்டு, அயோத்தி மாநகரை தலைநகராகக் கொண்டு, மிகவும் நேர்மையாக ஆட்சி செய்து வந்தார். பட்சபாத தன்மைஇல்லாமை, கொடை, துஷ்டர்களைத் தண்டித்தல் போன்ற குணங்களினாலே, முறையே யமனையும், குபேரனையும், வருணனையும் ஒத்திருந்து, சூர்யனைப்போல ப்ரகாஶமாக இருந்தார். தேவேந்திரனை தேவர்கள் எவ்வாறு பக்தியுடனும், பயத்துடனும் வணங்குவரோ, அவ்வாறே சிற்றரசர்கள் தஶரது பாதங்களில் வணங்கினர்.

1. तमलभन्त पतिं पतिदेवता: शिखरिणामिव सागरमापगा:।

मगधकोसलकेककय शासिनाम् दुहितरो अहितरोपित मार्गणम्॥17

தமலபந்த பதிம் பதிதேவதா: ஶிகரினாமிவ ஸாகரமாபகா:।

மகதகோஸலகேகய ஶாஸிநாம் துஹிதரோ அஹித ரோபித மார்கணம் ॥

கோஸல மன்னரின் புதல்வியான கௌஸல்யை, மகத நாட்டரசர் மகள் ஸுமித்ரை, கேகயநாட்டு மகள் கைகேயி, இம்மூவரும், மலைகளின் பெண்களான நதிகள் ஸமுத்ரத்தை கணவனாக அடைந்தது போல், தஶரதருக்கு மனைவியாக அமைந்தனர்.

ஒருஸமயம் மந்திரிகளின் அனுமதியைப் பெற்று வேட்டையாட காட்டிற்கு சென்றார். வேட்டையாடுவதால், மனதிற்கு நிம்மதியும், உடலுக்கு களைப்பைக் சகித்துக் கொள்ளுதல் என்னும் சக்தியும், பயத்தினாலும், கோபத்தினாலும் பிராணிகளுக்கு உண்டாகின்ற செயல்கள்பற்றிய அறிவும், ஓடுகின்ற மிருகங்களை அடிப்பதின் பழக்கத்தால், யுத்தகாலத்திற்கும் உபயோகமாகின்றது, என்கிற பலகாரணங்களால் அரசர்கள் வேட்டையாடுதலில் ஈடுபடுவர்.

தஶரதர் காட்டிலிலுள்ள புஷ்பங்கள் துளிர்களிவைகளாலான மாலையினால் இருகக்கட்டிய ஶிகையுடனும், மரத்தின் இலைபோல் பச்சை நிறமுள்ள கவசத்துடனும் குதிரை மீதேறி மான்கள் திரிகின்ற காட்டில் ஸஞ்சரித்தார். பலதுஷ்ட ம்ருங்களை ஓடி ஆடி வேட்டையாடினார். வேட்டையில் மிகவும் ஈடுபாட்டுடன் சென்று ஓர் இரவு அவ்வனத்திலேயே தங்கினார்.

காட்டில் விடியற்காலையில் யானை கூட்டத்தின் காதடிப்பு சத்தத்தினால், ஸுப்ரபாதம் பாடப்படுவது போல் கேட்டு எழுந்தார். பிறகு ஒரு மானை பின் தொடர்ந்து தமஸா நதிகரையை அடைந்தார். குதிரையின் மீது வேகமாக சென்றதால் பணியாளர்கள் அவரை பின் தொடரமுடியவில்லை. தனித்தே சென்றார். அந்த தமஸாநதிதீரம் முனிவர்கள் நிறைந்த ஆஶ்ரமங்களை உடையது.

2. श्रमफेनमुचा तपस्वि गाढाम् तमसाम् प्राप नगतीं तुरङ्कमेण॥ 72

ஶ்ரமபேநமுசா தபஸ்வி காடாம் தமஸாம் ப்ராப நகதீம் துரங்கமேண॥

தமஸாநதியின் ஜலத்தில் குடத்தில் நீர் நிரம்பும் ஸப்தம் கேட்டது. அவ்வொலியை யானையின் பிளிறுதலாக எண்ணி யானை அருகில் உள்ளதென நினைத்து ஒரு அம்பை எய்தார். அவ்வம்பின் சிறப்பு யாதெனின் பொருள் கண்ணுக்குப் புலப்படாவிடினும் ஸப்தத்தை கேட்டு. அங்குசென்று அடிக்கும் திறன் வாய்ந்தது. ஸப்தவேதி என்று சொல்வர். இங்கே கவி

3. शब्दपातिनं इषुं विससर्ज॥73 ஶப்தபாதிநம் இஷும் விஸஸர்ஜ॥என்கிறார்.

யானைகளை யுத்தகாலங்கள் அல்லாது மற்றஸமயங்களில் கொல்லக்கூடாது என்பது தர்மஶாஸ்த்ரம். க்ஷத்ரியதர்மமும் கூட

4. नृपतेः प्रतिषिद्धमेव तत् कृतवान् पङ्क्तिरथो विलङ्घ्य यत्।

अपथे पदमर्पयन्ति हि श्रुतवन्तोपि रजोनिमीलिताः॥ 74

கஜஶாத்ரம் தெரிந்து இருந்தும், தஶரதர் அம்பை விட்டதற்கு காரணமாக, கவி அறிவாளிகளும் ரஜோகுணம் மேலிடும் பொழுது பிழை செய்வதுண்டு என்கின்றார். புழுதி கண்ணில் விழுந்து பார்வையை மறைப்பதுபோல் ரஜோகுணம் தஶரதனின் அறிவாகிய கண்ணை மறைத்தது. ஒரு க்ஷணம் செய்யதகாததை செய்ததின் விளைவு, அவரது ஆயுட்காலத்தையே கொண்டு சென்றது. மிக்க நுட்பமான புத்தியுள்ளவர்களுக்குக் கூட நுட்பமான தவறுகள்-அபராதம் காணவும்படுகின்றது.

5. सुनिपुणानामपि सूक्ष्मोपराधः दर्शनात्॥

ஸுநிபுணாநாமபி ஸூக்ஷ்மோ அபராத: தர்ஶநாத்॥

என்பது ஸ்ரீஶங்கரபகவத்பாதாள் ஸூத்ரபாஷ்ய வாக்யமாகும். ब्र-सू-भा-4.3.5.14.

தமது அம்பு வீழ்ந்த இடத்தில் இருந்து ஆ! தந்தையே என குரல் கேட்டதும் தஶரதர் மனிதனை அடித்துள்ளோம் என உணர்ந்தார். தமது பாணம் ஒரு ரிஷி குமாரனின் மார்பில் புதைந்துள்ளதைக் கண்டார். உடனே நதியின் கரைக்குச் சென்று, ரிஷி குமாரனை தன் மடியில் கிடத்திக் கொண்டு அவன் குடும்ப கதையை கேட்டறிந்தார்.

அவனை தூக்கிக் கொண்டு, கண்பார்வையற்ற அவனது தாய் தந்தையரின் இருப்பிடம் சேர்ப்பித்து, நற்குடியில் பிறந்த தஶரதர், தாம் செய்த பாவச் செயலை எண்ணி வருந்தி, அவர்களிடம் கூறினார். அறியாமல் இச்செயல் ஏற்பட்டாலும் தன் தவறுக்கு க்ஷமாப்ரார்த்தனை செய்து கொண்டார். ரிஷி குமாரனின் தந்தையான முனிவர், அரசே எங்களது அந்தியகாலத்தில் எவ்வாறு புத்ரஶோகத்தினால் மரிக்கின்றோமோ, அவ்வாறே நீரும் வயோதிகப்பருவத்தில் புத்ர ஶோகத்தினால் மரிப்பீராக என தஶரதருக்கு ஶாபம் அளித்தார்.

மஹான்களின் ஶாபமும், நன்மையிலேயே முடியும் என நன்கு உணர்ந்திருந்த தஶரதர், பிள்ளைப் பேறு இல்லாதவனான எனக்கு, தங்கள் ஶாபத்தால் பிள்ளைபேறு உண்டு என்று தீர்மானமாயிற்று. அதனால் ஸந்தோஷ மடைகின்றேன்.

6. शापो अप्यदृष्ट तनया नन पद्मशोभे। सानुग्रहो भगवतामयि पातितोऽयम्॥ 80

ஶாபோ அப்யத்ருஷ்ட தநயா நந பத்மஶோபே।

ஸாநுக்ரஹோ பகவதாமயி பாதிதோ அயம்॥

மகனின் முகமாகிய ஶோபையைக் காணாத என் விஷயத்தில் தங்களால் வீழ்த்தப்பட்ட இச்சாபமும் ஒரு அருளுடன் கூடியதே. என்கின்றார் தஶரதர். தன் மகனுடன் ஒரே சிதையில் உடன் கட்டை விரும்புகின்றோம் என அவர்கள் கூற, அதற்கான ஏற்பாடுகளை செய்தார். தன்னை எரிகின்ற வடவாக்னியைத் தன்னுள் கொண்டுள்ள கடல் போல், தஶரதரும், நினைப்பினும் வருத்தம் தருகின்ற அச்சாபத்தை தன் மனத்திலேயே, எவருக்கும் கூறாமல், அடக்கி வைத்திருந்தார்.

दशम: सर्ग: பத்தாவது ஸர்கம்

இந்திரனைப் போன்ற தேஜஸுடையவரும், மிகுந்த செல்வமுடைய வருமான தஶரதருக்கு முனிவரின் ஶாபம் பெற்றபின், சிறிது குறைந்த பதினாயிரம் ஆண்டுகள் சென்றன். மகப்பேறு ஏற்படவில்லை ரிஷ்யஶ்ருங்க முனிவரைக் கொண்டு புத்ரகாமேஷ்டி இஷ்டியைச் செய்தார். அச்சமயம் ராவணனால் துன்புறுத்தப்பட்ட தேவர்கள் மஹாவிஷ்ணுவை அடைந்து பிறார்த்தித்தனர்.

1. नमो विश्वसृजे पूर्वं विश्वं तदनु बिभ्रते।
अथ विशवस्य संहर्त्रे तुभ्यं त्रेधा स्थितात्मने॥ 16
நமோ விஶ்வஶ்ருஜே பூர்வம் விஶ்வம் ததநு பிப்ரதே|
அத விஶ்வஸ்ய ஸம்ஹர்த்ரே துப்யம் த்ரேதா ஸ்திதாத்மநே||
ஆக்கல், காத்தல், அழித்தல் என மூவகை கார்யங்களை ப்ரம்மா, விஷ்ணு, ருத்ரனாக முறையே உலகைக்காக்கின்ற, இப்படி மூவகைத் தன்மைகளைக் கொண்ட மூன்று உருவங்களுடன் விளங்குகின்ற உமக்கு நமஸ்காரம்.

2. अमेयो मितलोकस्त्वम् अनर्थी प्रार्थनावहः।
अजितो जिष्णुरत्यन्तम् अव्यक्तो व्यक्तकारणम्॥ 18
அமேயோ மிதலோகஸ்த்வம் அநர்த்தீ ப்ரார்தநாவஹ|
அஜிதோ ஜிஷ்ணுரத்யந்தம் அவ்யக்தோ வ்யக்தகாரணம்||
நீர் உலகத்தோரால் அளவிடக்கரியவர். ஆனால் உலகத்தை அளந்தவர். வேண்டினோர்க்கு வேண்டியதை அளிக்கும் உமக்கு வேண்டியது ஒன்றுமில்லை. உம்மையாரும் ஜயிக்க முடியாது உலகத்தை நீர் ஜயிப்பவர். உருவத்தை உடைய இவ்வுலகிற்கு காரணமான நீர் நுண்ணிய உருவம் கொண்டவர்.

3. हृदयस्थमनासन्नमकामं त्वां तपस्विनम्।
दयाळुमनघस्पृष्टं पुराणमजरं विदुः॥ 19
ஹ்ருதயமநாஸந்நமகாமம் த்வாம் தபஸ்விநம்|
தயாலுமநகஸ்ப்ருஷ்டம் புராண மஜரம் விது:||19
உம்மை ஹ்ருதயத்தில் இருப்பவராகவும்,இருப்பினும் அருகில் இல்லாதவராகவும், ஆசையற்றவராகவும் தவம் புரிபவராகவும் பிறர் துயரை நீக்க ஆசையுள்ளவராகவும், துயரத்தால் தீண்டப்படாதவராகவும், பழைமையுடையவராகவும், முதுமை இல்லாதவராகவும் அறிவார்கள்.

4. सप्तसामोपगीतं त्वां सप्तार्णवजलेशयम्।
सप्तार्चिमुखमाचरव्युः सप्तलोकैक संश्रयम्॥ 21
ஸப்தஸாமோபகீதம் த்வாம் ஸப்தார்ணவஜலேஶயம்|
ஸப்தார்சிமுகமாசரக்யு: ஸப்தலோகைக ஸம்ஶ்ரயம்|| 21
ஏழு வகை ஸாமங்களில் துதிக்கப்படுபவர் தாங்கள். ரதந்தரம், பருஹத்ஸாம வாமதேவ்யம், வைரூப்யம், பாவமாநம், வைராஜம் சாந்த்ரமஸம், போன்ற ஏழுஸாமங்கள் என வ்யாக்யான காரர்களின் குறிப்பு ஏழு கடல் நீரில் சயனிப்பவராகவும், அக்னியை வாயாக உடையவராகவும், ஏழு உலகங்கட்கும் ஒரு ஒப்பற்ற அடைக்கலமாகவும் பெரியோர் தொன்று தொடங்கி உம்மை பிறார்த்துகின்றனர்.

5. अनवाप्तमवाप्तव्यं न ते किञ्चन विद्यते।

लोकानुग्रह एवैको हेतुस्ते जन्मकर्मणोः॥31
அநவாப்தமவாப்தவ்யம் ந தே கிஞ்சந வித்யதே|
லோகாநுக்ரஹ ஏவைகோ ஹேதுஸ்தே ஜன்மகர்மணோ:||
இதுவரை அடையப்படாதது, அடையப்பட வேண்டியது உமக்கு ஒன்றும் இல்லை. உலகத்திற்கு நலம் செய்தல் என்ற ஒன்றுமட்டும் உமது பிறப்பிற்கும் செயலுக்கும் காரணமாக அமைந்துள்ளது. இவ்வாறு 16 முதல் 33 ஶ்லோகங்கள் வரை தேவர்கள் பகவானை ஸ்தோத்ரம் செய்தனர். பகவானும் ஸந்தோஷமடைந்து தேவர்களை நோக்கி! இலங்காதிபதி ராவணின் செயல்கள் அனைத்தையும் அறிவோம். எல்லைமீறி சென்று விட்டது. ஆனால் ப்ரஹ்ம தேவரிடம் எட்டுவகை ஸ்ருஷ்டியிலிருந்து தனக்கு கொல்லப்படாமையை வரமாக பெற்றுள்ளான். தாங்கள் எல்லோரின் பிறார்தனைக்கு இணங்கி. தஶரதர் மகனாக தோன்றுவோம். மனக்கலக்கத்தை விட்டு விடுங்கள், என்று அருளினார். புத்ரகாமேஷ்டி யாகத்தின் முடிவில், தஶரதர் ஒரு திவ்யபுருஷன் பொற்கலசத்தில் திவ்ய பாயஸத்துடன் தோன்றியதைக் கண்டு வணங்கினார். அந்ததிவ்ய புருஷன் கூறியபடி, கௌஸல்யைக்கு கைகேயிக்கு ஸரிபாதியாக பாயஸத்தைக் கொடுத்தார். பிறகு அவ்விருவிரும், ஸுமித்ரைக்கு, தங்கள் தங்கள் பாகத்திலிருந்து பாதி பாதியை, அளித்தனர். இதனால் கௌஸல்யைக்கும், கைகேயிக்கும் தலா கால்பாகமும், ஸுமித்ரைக்கு அரை பாகமும் கிடைத்தது. அனைவரும் தஶரதர் அனுமதிபெற்று பருகினர். விஷ்ணு ஒருவரே நான்கு வடிவங்களுடன் அம்மூவரின் கர்பத்தில் இருந்தார்.

6. ततः पद्मपलाशाक्षः कृत्वात्मानं चतुर्विधम्।
पितरं रोचयामास तदा दशरथं नृपम्॥
என்று ஸ்ரீமத்ராமாயனமும் கூறிகின்றது.

ஸ்ரீராமஜனனம்.

7. अथाग्र्यमहिषि राज्ञः प्रसूतिसमये सती।
पुत्रं तमोपहं लेभे नक्तं ज्योतिरिवौषधिः॥ 66
ஜ்யோதிர்லதை இரவில் இருளைப்போக்கும் ஒளியைப் பெறுவது போல், பிறகு நற்குண முடையவரும், அரசரின் முதல் மனைவியுமான கௌஸல்யை, ப்ரஸவஸமயத்தில் தந்தையின் சோகமாகிற இருளை அழிக்கின்ற மகனைப்பெற்றாள்.

8. राम इत्यभिरामेण वपुषा तस्य चोदितः।
नामधेयं गुरुश्चक्रे जगत्प्रथम मङ्गलम्॥ 67
ராம இத்யபி ராமேண வபுஷா தஸ்ய சோதித|
நாமதேயம் குருச்சக்ர ஜகத்ப்ரதம மங்களம்|| 67
அழகிய உடலில் தூண்டப்பட்ட தந்தையான தஶரதர், அம்மைந்தனுக்கு உலகத்திற்குச் சிறந்த மங்களமான ராமன் என்ற பெயரை வைத்தார்.

9. कैकेय्यास्तनयो जज्ञे भरतो नाम शीलवान्।
जनयित्रीमलंचक्रे यः प्रश्रय इवश्रियम्॥ 70
கைகேய்யாஸ்தநயோ ஜக்ஞே பரதோநாம ஶீலவான்|
ஜநயித்ரீமலம் சக்ரே ய: ப்ரஶ்ரய இவ ஶ்ரியம்||
கைகேயிக்கு பரதன் என்ற மகன் பிறந்தான். விநயம் என்கின்ற குணமானது செல்வத்தை அழகாக ஆக்குவதுப் போல் இருந்தான்.

10. सुतौ लक्ष्मणशत्रुघ्नौ सुमित्रा सुषुवे यमौ।
सम्यगाराधिता विद्या प्रबोधविनयाविव॥ 71

ஸுதௌ லக்ஷ்மணஶத்ருக்னௌ ஸுமித்ரா ஸுஷுவே யமௌ|

ஸம்யகாராதிதா வித்யா ப்ரபோத விநயாவிவ||

நன்றாக மகிழ்விக்கப்பட்ட கற்கப்பட்ட படிப்பானது உண்மை அறிவையும் புலடைக்கத்தையும் கொடுப்பது போல, ஸுமித்ரை லக்ஷ்மணன், ஶத்ருக்னன் என பிரஸித்தி பெற்ற இரட்டைக் குழந்தைகளை பெற்று, தஶரதனை மகிழ்வித்தாள். அதனால் தேவர்களும் மகிழ்ந்தனர்.

11. குமாரா: க்ருத ஸம்ஸ்காரா: - குமாரா: க்ருத ஸம்ஸ்காரா: 78

என்பதால், குழந்தைகளுக்கு தஶரதர் ஜாதகர்ம நாமகரணம் என சடங்குகளை காலத்தில் செய்தார்.

12. समानेपि हि सौभ्रात्रे यथोभौ रामलक्ष्मणौ।

तथा भरतशत्रुघ्नौ, प्रीत्या द्वन्द्वं बभूवतु:॥ 81

ஸமானேபி ஹி ஸௌப்ராத்ரே யதோபௌ ராமலக்ஷ்மணௌ|

ததா பரதஶ்த்ருக்னௌ ப்ரீத்யா த்வந்த்வம் பபூவது:||81

ராமலக்ஷ்மணர்கள் நால்வரும் தங்களுக்குள் ஸம்மான அன்பு பூண்டு இருந்தாலும், ராமனும் லக்ஷ்மணனும், பரதனும், ஶத்ருக்னனும் அதிகம் இரட்டையர்களாக பரஸ்பரம் அன்புபாராட்டி சேர்ந்து இருந்தனர். நான்கு குழந்தைகளுடன் தஶரதர் மிகவும் இன்பமாக மகிழ்ச்சி கடலில் திளைத்தார்.

एकादश: सर्ग: - பதினோராவது ஸர்கம்

कौशिकेन सकिल क्षितीष्वर: राममध्वरविद्यातशान्तये।

काकपक्षधरमेत्य याचित: तेजसाम् हि न वय: समीक्ष्यते॥ 1

விஶ்வாமித்ர முனிவர் தான் செய்யும் யாகத்தைக் காப்பதற்காக ஸ்ரீராமனை வேண்டினார். ராமரை அனுப்ப தஶரதர் தயங்கிய பொழுது வஸிஷ்ட மஹரிஷியின் வாக்கின்படி விஶ்வாமித்ரருடன், அவரின் யாகத்தைக் காக்க லக்ஷ்மணனையும் சேர்த்து அனுப்பி வைத்தார். வெளியூருக்கு செல்லும் போது பெரியோரை வணங்கி செல்ல வேண்டும் என்பதற்கிணங்கி, ராம லக்ஷ்மணர் தந்தையான தஶரதரை வணங்கி, பிறகு தாய்மார்கள், வஸிஷ்டர் மற்றும் பெரியோர்களை வணங்கி புறப்பட்டனர்.

तौ बलातिबलयो: प्रभवत: विद्ययो: पथि मुनिप्रदिष्टयो:।

मम्लतुर्न मणिकुट्टिमोचितौ मातृपार्श्व परिवर्तिनाविव॥ 9

தௌ பலாதிபலயோ: ப்ரபாவத: பதி முனிப்ரதிஷ்டயோ:|

மம்லதுர் ந மணிகுட்டிமோசிதௌ மாத்ரு பார்ஶ்வ பரிவர்தினாவிவ|| 9

இரத்னங்கள் இழைத்த தரையில் நடந்து பழகிய அவ்விருவரும் விஶ்வாமித்ர முனிவரால் உபதேசிக்கப்பட்ட பலை-அதிபலை என்கின்ற மந்த்ரங்களின் ப்ரபாவத்தினால் தாயின் அருகில் உள்ளவர்கள் போல் வழியில் களைப்பை அடையவில்லை.

क्षीत्पिपासे न ते राम भविष्येते नरोत्तम।

बलामतिबलां चैव पठत: पथि राघव॥

க்ஷீத்பிபாஸே ந தே ராம பவிஷ்யேதே நரோத்தம|

பலாமதிபலாம் சைவ படத: பதி ராகவ||

என்று ஸ்ரீவால்மீகிராமாயணம் பாலகாண்டம் 22-17 ஶ்லோகமாகும். பிறகு ராவணனுக்கு இனி வரப்போகும் வீழ்ச்சியாக, விஶ்வாமித்ர மஹரிஷியின் அனுமதியின் பேரில் ஸ்ரீராமர் தாடகை என்கின்ற அரக்கியை வதம் செய்தார். விஶ்வாமித்ரரின் ஆஶ்ரமத்தை அடைந்த ராமலக்ஷ்மணர்கள், அவரின் யாகத்தை கண்ணை இமை காப்பது போல் காத்தனர். ஸித்தாஶ்ரமம் என ப்ரஸித்தி அவரின் ஆஶ்ரமத்தில், யாகத்தை கெடுக்க வந்த மாரீசனை கடலில் அமுக்கியும், ஸுபாஹுவை அழித்தும், யாகத்தை வெற்றிகரமாக நடைபெற உதவினர்.

பிறகு விஶ்வாமித்ரர் ஸ்ரீராமலக்ஷ்மணர்களை மிதிலை ஜனகமஹாராஜனிடம் உள்ள ஶிவதனுஸை காண்பிக்க அழைத்துச் சென்றார். ஶிவதனுஸை நாணேற்றுபவர் ஸீதாதேவியை மணக்கலாம் என ஜனகர் நிபந்தனை செய்து இருந்தார். பல மன்னர்கள் வந்தும் அம்மாதிரி செய்ய இயலாமல் திரும்பினர். வழியில் கௌதம முனிவரின் ஆஶ்ரமத்தில் ஶிலா வடிவில் இருந்த அஹல்யைக்கு ஶாப விமோசனம் செய்தருளினார். ஸ்ரீராமரின் பாத துகள்கருக்கே இச்சக்தி இருக்கு மாயின், அவரின் அருளுக்கு எல்லையுண்டோ?

ஸ்ரீராமலக்ஷ்மணர்கள், விஶ்வாமித்ர மஹரிஷியுடன் மிதிலைக்குள் வந்து விட்டதை அறிந்த ஜனகமஹாராஜன் பூர்ணகும்ப மரியாதைக் கொடுத்து வரவேற்றான். ஸ்ரீராமரால் ஶிவதனுஸை நாணேற்ற முடியுமோ என ஜனகர் எண்ணினார். ஆனால் ஸ்ரீராமர், விஶ்வாமித்ரரை வணங்கி, தநுஸை இலகுவாக எடுத்து எவ்வித ப்ரயத்னமுமின்றி, நாணேற்றினார். அவ்வில் பயங்கர ஶப்தத்துடன் முறிந்தது. ஜனகர் தன் பெண்ணான ஸீதையை, ஸ்ரீராமருக்கு கொடுக்க ஸம்மதித்து, அயோத்திக்கு தூதவர்களை அனுப்பி, தஶரதர் மற்றும் அவரின் பட்டத்துராணிகளை மிதிலைக்கு வரும்படி செய்தி அனுப்பினார்.

தஶரதரும் தன் பிள்ளையான ஸ்ரீராமருக்கு தகுந்த பெண்ணைத் தேடிக்கொண்டு இருக்கும் போது ஜனகரின் தூதுவர் வந்து நற்செய்தியை கூறினார். இங்கே கவி புரோஹிதர் சென்றதாக கூறிகின்றார். உடனே ஏராளமான ஸைன்யங்களுடன் மிதிலையை நோக்கி சென்றார். ஜனகரும் தஶரதரும் விஶ்வாமித்ரர், வஸிஷ்டர், முன்னிலையில் விவாஹத்தை மிகச் சிறப்பாக நடத்தினர்.

ஸ்ரீராமருக்கு ஸீதையையும், லக்ஷ்மணருக்கு ஸீதையின் தங்கை ஊர்மிளாவையும், குஶத்வஜரின் பெண்களான, மாண்டவியை பரதருக்கும், ஶ்ருத கீர்த்தியை ஶத்ருக்னருக்கும் விவாஹம் செய்து கொடுத்தனர். பிறகு புதுமண தம்பதிகளுடன் அயோத்திக்கு சென்றனர். வரும் வழியில் பரஶுராமரை தரிசித்து, அவர் தம் ஆஸிகளையும் பெற்றனர். பிறகு அயோத்திநகர் வந்து சேர்ந்தனர்.

கேள்விகள்

1. தஶரதரின் மனைவிகள் யாவர்? ஶ்லோகத்துடன் எழுது.
2. தமஸா நதிகரையின் என்ன நடந்த்து?
3. ரிஷிகுமாரனின் தாய்தந்தையர் என்ன ஶாபம் அளித்தனர்.
4. ஶாபமே அனுக்ரஹமாக மாறியது எவ்வாறு.
5. புத்ரகாமேஷ்டி யாகத்தை நடத்தியவர் யார்.
6. தேவர்கள் பகவானை ஸ்துதி செய்த ஶ்லோகக்களில் இரண்டை எழுது.
7. தேவபாயஸம் எவ்வாறு பிரித்து அளிக்கப்பட்டது.
8. குழந்தைகளின் பெயரையும், அவர்களின் தாய்மார்கள் பெயரையும் எழுது.
9. யாகம் யாரால் செய்யப்பட்டது. அதைக்காக்க அவர் என்ன செய்தார்.
10. வழியில் களைப்பை போக்கிய மந்த்ரங்கள் என்ன? அதை உபதேஸித்தவர் யார்?
11. ஸீதா கல்யாணம். சிறு குறிப்பு எழுது.
12. நான்கு ஸகோதரர்களின் மனைவிகளின் பெயர்களை எழுது.
13. அயோத்தி செல்லும் வழியில் யாரைப் பார்த்தனர்?

Chapter Nine

द्वादश: सर्ग: - பன்னிரண்டாம் ஸர்கம்

ஸ்ரீ காளிதாஸ ராமாயணம்

அயோத்திநகர் வந்த சில வருஷங்களில், தஶரதர் ஸ்ரீராமருக்கு பட்டாபிஷேகம் செய்ய முடிவெடுத்தார். மந்தரை என்கின்ற கூனியின் மூலம் விவரம் அறிந்த கைகேயி, பரதனுக்கு முடிசூட்டவும், ஸ்ரீராமர் 14 ஆண்டுகள் காடு செல்லவும் வரம் பெற்றாள். தஶரத மன்னன் எவ்வளவு மன்றாடியும் மறுத்து விட்டாள். தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்பதை வாழ்க்கையில் கடைபிடித்த ஸ்ரீராமர், லக்ஷ்மணன் ஸீதையுடன் காடு சென்றார். பல வருஷங்களுக்குமுன் அளிக்கப்பட்ட ஶாபத்தால், தஶரதன் உயிர் நீத்தான். மாமன் வீட்டிற்கு சென்று இருந்த பரதஶத்ருக்னர்கள் உடனடியாக அயோத்தி திரும்பினர். பரதன், தாயான கைகேயின் செயல்களை கேட்டறிந்து கடுமையாக பேசி, நொந்து கொண்டான். குஹனுடைய நட்பை பெற்ற ஸ்ரீராமர் பரத்வாஜாஶ்ரமத்தில் சிறிது நாட்கள் தங்கி, பின் சித்ரகூட வணத்திற்கு சென்று தங்கினார். பரதன் சித்ரகூட வனத்தில் ஸ்ரீராமரை தரிஸித்து, மீண்டும் அயோத்திக்கு வரும்படி பிறார்த்திக்க, ஸ்ரீராமர் மறுத்தார். பிறகு அவரின் பாதுகைகளைப்பெற்று நந்திகிராமத்தில் இருந்து கொண்டு ஸ்ரீராமர் வரும்வரை தபஸில் இருந்தார். நந்திகிராமத்தில் பாதுகா பட்டாபிஷேகமும் செய்தார். ஸ்ரீராமர் அயோத்திக்கு திரும்பி வரும்வரை, பரதனின் மேற்பார்வையில் ஸ்ரீராமபாதுகா ராஜ்யமாக அயோத்தி விளங்கியது. ஸ்ரீராமலக்ஷ்மணர்கள், விராதனைக் கொன்று, அகஸ்த்ய மாமுனிவர் ஆக்ஞைபடி பஞ்சவடி சென்றனர். அங்கே ராவணன் தங்கை சூர்பணகை ஸ்ரீராமலக்ஷ்மணர் ஸீதையை அரக்ககுணத்தால் பேசி தாக்கினாள். லக்ஷ்மணர் ஸ்ரீராமரின் சொல்படி, அவளின் மூக்கையும், காதுகளையும் அறுத்து விகாரமடையும்படி செய்து விரட்டினார். ஜனஸ்தானத்தை அடைந்த சூர்பணகை, தன் ஒன்றுவிட்ட ஸஹோதரன் கரண், தூஷணர்களிடம் தெரிவிக்க, மிக பயங்கரமான யுத்தம், கரதூஷணர்கள் ஸ்ரீராமரிடம் யுத்தம் தொடுத்தனர். ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் அவர்களை அடியோடு ஒழித்து கட்டினார். காட்டில் வசிக்கும் தபஸ்விகளான முனிவர்கள் மகிழ்ந்தனர்.

இதனால் அதிர்ச்சி அடைந்த சூர்பணகை, ராவணனிடம் சென்று முறையிட்டாள். மாரீசன் உதவியுடன் ஸீதையை கவர்ந்து சென்றான் ராவணன். ஜடாயு என்ற கழுகு கடும் போர் செய்தும், தனது திவ்யாஸ்த்ரத்தால் ஜடாயுவின் இறக்கைகளை வெட்டி வீழ்த்தினான். ஜடாயு ஸ்ரீராமர் வந்ததும் அனைத்தையும் தெரிவித்து, மோக்ஷம் அடைந்தது. தந்தையின் நண்பனான ஜடாயுவின் மோக்ஷம் ஸ்ரீராமலக்ஷ்மணர்களை பாதித்தது. அவர்களே ஜடாயுவிற்கு அந்திம ஸம்ஸ்காரங்களை செய்தனர்.

பிறகு ஸீதையை, மிக்க வருத்தத்துடனும், புலம்பல்களுடன், காடுமுழுக்க தேடி சென்றனர். கபந்தன் என்பவனை கொன்று, ஶாபத்திலிருந்து அவனை விடுவித்து, அவன் மூலம் ஸுக்ரீவன், என்கிற வானர அரசனின் வ்ருத்தாந்தங்களைக் கேள்வியுற்று, ஸுக்ரீவனிடம் நட்புகொண்டனர்.

स हत्वा वालिनं वीर: तत्पदे चिरकाङ्क्षिते।

धातो:स्थान इवादेशम् सुग्रीवं सन्यवेशयत्॥ 58

ஸ ஹத்வா வாலிநம் வீர: தத்பதே சிரகாங்க்ஷிதே।

தாதோ: ஸ்தாந இவாதேஶம் ஸுக்ரீவம் ஸன்யவேஶயத்॥

ஸுக்ரீவனின் அண்ணனான வாலியைக் கொன்று, ஸுக்ரீவனை வானரர்களின் அரசனாக அபிஷேகம் செய்வித்தார். வானரர்கள் ஸுக்ரீவனின் ஆணையை சிரமேற்கொண்டு நான்கு திக்குகளிலும் ஸீதையைத் தேடி சென்றனர்.

प्रवृत्तावुपलब्धायां तस्या: संपाति दर्शनात्।

मारुति: सागारं तीर्ण: संसारमिव निर्मम:॥ 60

தென்திசை சென்ற ஹநுமார் முதலான வானர வீரர்கள் ஜடாயுவின் அண்ணனான ஸம்பாதியின் மூலம், லங்கையில் ஸீதை இருப்பதை அறிந்தனர். ஆசை துறந்த ஒருவன் பிறவிக்கடலைக் கடப்பது போல், தென் கடலைக் கடந்து லங்கையை ஹநுமார் அடைந்தார்.

(ஸ்ரீமத் வால்மீகி ராமாயணபிரகாரம் கிஷ்கிந்தா காண்டம் ஸம்பூர்ணம்)

दृष्टा विचिन्वता तेन लङ्कायाम् राक्षसीवृता।

जानकी विषवल्लीभि: परीतेव महौषधि:॥ 61

த்ருஷ்டா விசிந்வதா தேந லங்காயாம் ராக்ஷஸீவ்ருதா।
ஜானகீ விஷவல்லீபி: பரீதேவ மஹௌஷதி:॥

லங்கையில் தேடுகின்ற ஹனுமாரால் அரக்கியரால் சூழப்பட்டுள்ள ஸீதை விஷக்கொடிகளால் சூழப்பட்டுள்ள ஸஞ்ஜீவினிக் கொடிபோல் பார்க்கப்பட்டாள்.

तस्यै भर्तुभिज्ञानमङ्गुलीयम् ददौ कपि:।

प्रत्युद्गतामिवानुष्णैस्तदानन्दाश्रुबिन्दुभि:॥ 62

தஸ்யை பர்த்துபிஜ்ஞாநமங்குலீயம் ததௌ கபி।
ப்ரத்யுத்கதாமிவானுஷ்ணைஸ் ததா நந்தாஶ்ரு பிந்துபி॥

தாம் ராமரிடமிருந்தே வந்தவர் என்கின்ற நம்பிக்கையை உண்டாக்குவதற்காக ஸ்ரீராமரது மோதிரத்தை ஸீதையினிடம் ஹனுமார் கொடுத்தார். அதைக்கண்ட உடனே ஸீதை ஆனந்தக்கண்ணீர் விட்டாள். ஹனுமார் வந்துள்ள செய்தியைக் கேட்ட ராவணன், அவரை பிடித்து இழுத்து வந்தான். ஸ்ரீராமரின் தூதுவன் என்பதை பெருமையாகத் தெரிவித்த ஹனுமார் ஸீதையை ராமரிடம் அனுப்ப புத்திமதி கூறினார். ராவணன், ஹநுமாரின் வாலில் தீ வைக்க, அதைக் கொண்டு ஹநுமார் லங்காநகரத்தை எரித்தார். பிறகு ஸ்ரீராமரிடம் வந்து சேர்ந்தார். ஸ்ரீராமரிடம் दृष्टादेवीति காணப்பட்டாள் தேவி ஸீதை என்று தெரிவித்து ஸீதாதேவியால் அடையாளமாகக் கொடுக்கப்பட்ட சூடாமணியையும் விநயமாக அளித்தார். ஸீதையின் செய்தியைக் கேட்ட ராமர் லங்கையை சுற்றியுள்ள கடலை, ஒரு சிறு அ கழாக கருதி, எளிதாக கடக்க, வானரங்களைக் கொண்டு அணையைக் கட்டு வித்தார்.

स सेतुं बन्धयामास प्लवगैर्लवणाम्भसि।

रसातलादिवोन्मग्नं शेषं स्वप्नाय शार्ङ्गिण:॥ 70

ஸ ஸேதும் பந்தயாமாஸ ப்லவகைர் லவநாம்பஸி।
ரஸாதலாதிவோன்மக்னம் ஶேஷம் ஸ்வப்நாய ஶார்ங்கின:॥

ஶரணாகதனாக வந்த ராவணனின் தம்பி விபீஷணனை ஏற்றுகொண்டு, லங்காதிபதியாகவே கடற்கரையில் பட்டம் சூட்டினார். அணையைக் கடந்து ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் பெரும் வானர ஸேனையுடன் லங்கைக்கு சென்று, மிக பயங்கரமான யுத்தத்தைச் செய்தனர். இந்த்ரஜித் நாகபாசங்களால் ஸ்ரீராம லக்ஷ்மணர்களை கட்டினான். கருடன் வரவே, ஒருக்ஷணத்தில் கட்டு அவிழ்ந்து, மீண்டும் பெரும் யுத்தம் நடைபெற்றது. லக்ஷ்மணன், இந்த்ரஜித் என ப்ரஸித்தி பெற்ற, ராவணனின் மகனான மேகநாதனைக் கொன்றான். பிறகு ஸ்ரீராமர், ராவணனின் தம்பியான கும்பகர்ணனைக் கொன்றார்.

निर्ययावथ पौलस्त्य: पुनर्युद्धाय मन्दिरात्।
अरावणमरामम् वा जगदद्येति निश्चित:॥ 83

நிர்யயாவ:த பௌலஸ்த்ய: புநர்யுத்தாய மந்திராத்।
அராவணமராமம் வா ஜகதத்யேதி நிஶ்சித:॥

பிறகு ராவணன், இன்று உலகம் ராவணனற்றதாகவோ, ராமனற்றதாகவோ ஆகும், என ச்சயத்தவனாக மறுபடியும் யுத்தம் செய்வதற்காக அரண்மனையிலிருந்து வெளி வந்தான்.

ராவணன் திக்பாலகர்களை எல்லாம் வென்றவன். தன்தலைகளை ஒவ்வொன்றாக அறுத்து அக்னியில் ஹோமம் செய்து ஶிவபிரானை மகிழ்வித்தவன். கைலாஸ மலையையே பெயர்த்து எடுத்து, ஸாமகானத்தினால் பரமேஶ்வரனை மகிழ்வித்தவன். இத்தகைய வீரமுள்ள ராவணனை நேரில் கண்டபொழுது, தமக்குத் தகுந்த பகைவனே எதிரிலே வந்துள்ளான் என ஸ்ரீராமர் அறிந்து அவனது பராக்ரமத்தை மனதில் மிகவும் போற்றினார். அவனுக்கு ஒரு கௌரவத்தையும் அளித்தார். இருப்பினும் யுத்தத்தில் வெற்றி ஒருவருக்கே என்கின்ற நிலையில், ஸ்ரீராமர் ப்ரம்மாஸ்த்ரத்தால் ராவணனை வீழ்த்தினார். தேவர்கள் ஸ்ரீராமர் மீது புஷ்பமாரி பொழிந்தனர். அக்னிதேவன் ஸீதையின் தூய்மையை எடுத்துக் கூற ஸ்ரீராமர் அவளை ஏற்று, விபீஷணனை லங்கையில் முடிசூட்டியபின், ஸுக்ரீவாதியருடன் புஷபக விமானத்தில் ஏறி அயோத்தி கரை மீண்டார்.

त्रयोदश: सर्ग: பதிமூன்றாம் ஸர்கம்.

புஷ்பக விமானத்தில், ஸீதைக்கு ஸ்ரீராமர், தாம் வந்த அனைத்து அரண்ய இடங்களையும் காண்பித்தார். ஸ்ரீராமர் எந்த எந்த இடங்களைக் காண விரும்பினாரோ அந்தந்த இங்களில் அவர் விருப்பமறிந்து தானே சென்றது. அவ்விமானத்தின் அதிசயத்தைப் பார்பாயாக என ஸீதா தேவிக்கு ஸ்ரீராமர் சொன்னார். "ஜனஸ்தானத்தில் மனநிம்மதியுடன் முனிவர்கள் மீண்டும் ஆஶ்ரமம் அமைத்து வாழ்கின்றனர். உன்னைத்தேடி வரும்போது, இந்த இடத்தில் தான் உன்பாதசிலம்பு வீழுந்து கிடந்தது. செடி கொடிகள், எனக்கு தெரிவிக்க விரும்பின. அதைநான் புரிந்துகொண்டேன். மால்யவான் மலை சிகரத்தில் கண்ணீர் பெருக்குடன் தேடினோம். பம்பா நதியைப்பார். இதோ இதுதான் பஞ்சவடீ. இங்கேதான் கோதாவரீதீரத்தில் ஆச்ரமத்தில் உன் மடிமீது நான் தூங்கினேன். இதுதான் நகுஷனை இந்த்ரபதவியிலிருந்து இறக்கி, பாம்பாக்கிய, அகஸ்த்ய மாமுனிவரின் ஆஶ்ரமம். இதுதான் ஸுதீக்ஷ்ண முனிவரின் ஆஶ்ரமம். எனக்கு மர்யாதை செய்வதற்காக, இரண்டு கைகளையும் தூக்கி நமஸ்கரிப்பதைப் பார்பாயாக.

இதுதான் ஆஹிதாக்னியான சரபங்கர் ஆஶ்ரமம். இங்கு எப்போது அக்னிபகவானுக்கு ஆஹுதிகள் கொடுக்கப்பட்ட வண்ணம் இருக்கும். இதுதான் சித்ரகூட மலை. இங்கே அழகான மந்தாகினி நதி ஓடுவதைக் காண் வெகு தொலைவில் உள்ளதால் மெல்லியதாகக் காணப்படுகின்றது. அத்ரி மாமுனிவர் தவம் இருக்கும் ஆஶ்ரமம் இது அவரின் மனைவி அநஸூயை. ஸப்தரிஷிகள் ஸ்நானம் செய்வதற்காக கங்காநதியை ப்ரவஹிக்கும்படிச் செய்தார் கங்கை யமுனை நதியின் ஸங்கமத்தைக்காண் அடுத்து இதோபார், இங்கேதான்

குஹனுடன் நட்பு கிடைத்த ஶ்ருங்கிபேரபுரம் எனும் நகரம். ராமர் ஸீதைக்கு இவ்வாறு கூறி முடிக்கவும், அயோத்தியும் நெருங்கியது.

ஹனுமாரால் விவரம் அறிந்த பரதன், ஶ்ரீராமரை எதிர்கொண்டு அழைக்க தயாரானான். ஶ்ரீராமர் ஸபரிவாரங்களுடன் கீழே இறங்க வேண்டும் என நினைப்பதை. அறிந்து புஷ்பக விமானமும் கீழே இறங்கியது. ஸ்படிககற்களாலான படிகட்டுகளின் வழியே ஶ்ரீராமர் தரையில் இறங்க ஸுக்ரீவன் கைநீட்டியதை ஏற்றுக் கொண்டு, ஶ்ரீராமர் இலகுவாக தரையில் இறங்கினர் விபீஷணன் முன் சென்று வழிகாட்டினான். தம் குலகுருவாகிய வஸிஷ்ட மாமுனிவரை வணங்கி, பரதனை ஆரத்த முவி கண்ணீர்மல்கி ஶ்ரீராமரை வணங்கினான். பிறகு பரதனுக்கு ஶ்ரீராமர் தன்னுடன் வந்த அனைவரையும் அறிமுகம் செய்து வைத்தார்.

चतुर्दश: सर्ग:- பதிநான்காம் ஸர்கம்.
ஶ்ரீராமபட்டாபிஷேகம்

ஶ்ரீராமலக்ஷ்மணர்கள், ஸீதையுடன் தங்கள் தாய்மார்களான கௌஸல்யை. ஸுமித்ரை கைகேயி முதலியவர்களை வணங்கினார். குழந்தைகள் பட்ட கஷ்டங்களை நினைத்து, தாய்மார்கள் தைர்யமிழந்து அழத்தொடங்கினார். கண்ணீர் மழைபோல் கொட்டியது. பிறகு ஶ்ரீராமர் அனைவரையும் ஸமதானப்படுத்தினர். பிறகு ஶ்ரீராமருக்கு பட்டாபிஷேகம் மிக விமர்சையாகச் செய்யப்பட்டது.

अथाभिषेकं रघुवंशकेतो: प्रारब्धमानन्द जलैजर्नन्यो:।
निर्वर्तयामासुरमात्यवृद्धा: तीर्थाहृतै: काञ्चनकुम्भतोयो: 7

அதாபிஷேகம் ரகுவம்ஶகேதோ: ப்ராரப்த மாந்நத ஜலைர்ஜனன்யோ:।
நிர்வர்தயாமாஸு ரமாத்யவ்ருத்தா: தீர்த்தாஹ்ருதை: காஞ்சன கும்பதோயை:॥

பிறகு தாய்மார்களின் ஆனந்த பாஷ்பங்களினால் ஆரம்பிக்கப்பட்ட ராமருடைய பட்டாபிஷேகத்தை வயதுமுதிர்ந்த மந்திரிகள் கங்கை, யமுனை, ஸரயூ, கோதாவரி முதலிய புண்ய தீர்த்தங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட தங்க குடங்களிலுள்ள ஜலங்களினால், ஶ்ரீராமரின் ஸிரஸில் அபிஷேகம் செய்தார்கள். ஶ்ரீராமபட்டாபிஷேகம், ஶ்ரீமத்வால்மீகி ராமாயணத்தில் யுத்தகாண்டத்தில் 131ம் ஸர்கத்தில் 59ம் ஶ்லோகம் முதல் 126ம் ஶ்லோகம் ஸர்க கடைசி வரை விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஶ்ரீமத்ராமாயண பாராயண பலனும் அவைகளில் உள்ளன.

सौमित्रिणा सावरजेन मन्दम् आधूतवालव्यजनो रथस्थ:।
धृतातपत्रो भरतेन साक्षात् उपायसंघात इव प्रवृद्ध:॥ 11

ஸௌமித்ரிணா ஸாவரஜேந மந்தம் ஆதூதவால வ்யஜநோ ரதஸ்த:।
த்ருதாதபத்ரோ பரதேந ஸாக்ஷாத் உபாய ஸம்காத இவ ப்ரவ்ருத்த:॥11

தம் தம்பியான ஶத்ருக்னனுடன் லக்ஷ்மணன் மெதுவாகச் சாமரம் வீசினான். பரதன் அரசர்க்குரிய வெண்குடை பிடித்தான். ரதத்தில் வீரர்களான மூன்று ஸஹோதரர்

களினிடையிலே இருந்த ஸ்ரீராமர், கண்களுக்கு புலப்படுஶ ஸாம, தான, பேத தண்டம் என்கின்ற நான்கு உபாயங்களின் தொகுதி போல் காணப்பட்டார். இக்கருத்தையே நால்வரும் விவாஹ காலத்தில் இருந்த காட்சியை வர்ணிக்கும் போது,

सामदानविधि भेद निग्रहा: इव बभु:॥ ஸாமதான விதி பேத நிக்ரஹா: இவ பபு:॥

(11-55)

ஸாம, தான, பேத தண்டம் என்கின்ற நான்கு உபாயங்கள் போல் விளங்கினர், என்கிறார் மஹாகவி காளிதாஸர். ஸீதாதேவியை நன்கு அலங்கரிக்கபட்டவளாகச்செய்து, அவளின் மாமியார்கள் அழைத்து வந்தனர். "தந்தையின் வாக்கை ஸத்யமாக்கி, அவரை ஸ்வர்கதில் இருக்க செய்தப் பெருமை கைகேயிக்குதான்" என்று ஸ்ரீராமர் கைகேயியை கொண்டாடி வணங்கி, அவளின் கண்ணீரைத் துடைத்தார்.

முனிவர்களை தக்கவாறு கௌரவித்தபிறகு, ஸ்ரீராமர், விபீஷணன், ஸுக்ரீவன் முதலிய எல்லோரும் தக்க ஸன்மானங்களை ஸீதாதேவியைக் கொண்டே கொடுக்கச் செய்தார். பிறகு அவர்கள் தம்தம் நாட்டிற்கு செல்ல அனுமதி அளித்தார். புஷ்பக விமானத்தையும் குபேரனிடம் திருப்பி அனுப்பினார்.

पुष्पकं विमानंच भूय: कैलासनाथोद्वहनाय अन्वमंस्त॥ 20

புஷ்பகம் விமானம் ச பூய: கைலாஸ நாதோத்வஹநாய அன்வமம்ஸ்த॥ 20

தாய்மார்கள் அனைவரிடமும் ஒரே அன்பாக பாரபட்சமில்லாமல் இருந்தார். ஸீதாதேவியும் தாய்மை ஸ்தானத்தை அடையவளாக இருந்தாள் ஸ்ரீ ராமர் ஜனங்களின் க்ஷேமத்தையே முக்ய குறிக்கோளாக கொண்டு ரகு வம்ஶ மன்னர்களின் குணாதிசயங்கள் அனைத்தும் ஒன்றாகவே இருக்கும்படி காணப்பட்டார். நகர ஜனங்களின் அபிப்ராயத்தையும், அவர்கள் என்ன பேசுகின்றார்கள் என்பதையும் அவ்வப்போது தெரிந்து கொண்டார். ஒரு ஸமயம் भद्र: பத்ரன் எனப்படும் வேவுகாரனிடதில் ஜனங்கள் பேசிக்கொள்வதைக் கேட்டார். நிர்பந்ததுடன் கேட்கபட்டதால் அவனும்,

निर्बन्ध पृष्ठ: स जगाद सर्वम् स्तुवन्ति पौराश्चरितं त्वदीयम्।

अन्यत्र रक्षोभवनोषितायाः परिग्रहान्मानवदेव देव्या:॥ 32

நிர்பந்த ப்ருஷ்ட: ஸ ஜகாத ஸர்வம் ஸ்துவந்தி பௌராஶ்சரிதம் த்வதீயம்।

அன்யத்ர ரக்ஷோபவநோஷிதாயா: பரிக்ரஹான் மானவதேவ தேவ்யா॥ 32

"அரசே, ராக்ஷஸனுடைய க்ருஹத்தில் வஸித்த ஸீதையை எற்று கொண்டதை தவிர மற்ற விஷயங்களில் உம்முடையதான எல்லா செய்கைகளையும் நகர ஜனங்கள் புகழ்கின்றாற்கள் என்று சொன்னான். இதைக்கேட்டதும் ஸ்ரீராமர் மனம் ஊசலாடியது."என்னைப்பற்றிய அவதூறை அலஷ்யம் செய்து ஸீதையை அரண்மனையிலேயே வைத்துக் கொள்வது தகுந்ததா? சிறிதும் குற்றமற்ற மனைவியான, கற்பவதியான ஸீதையை துறந்து அபகீர்த்தியை நீக்கிக் கொள்வது உசிதமானதா? என்கின்ற இவ்விரண்டினுள் எதைக் கொள்வது என நிச்சயிக்க முடியாமல் ஸ்ரீராமர் தவித்தார். மனம் கலங்கினார். தன் தம்பிகளை வரவழைத்து அவர்களிடம் கலந்து கொண்டார்.

இக்ஷ்வாகு குலத்தில் பிறந்த நான், குலத்திற்கு பெருமை சேர்க்கவே விரும்பிகிறேன். எப்பொதுமே ஶுத்தமாய் இருப்பது நமது குலம். ஆதலால் ஜனங்களால் கூறப்படும் அந்நிந்தையை போக்குவதற்காக, எனக்கு புத்ரன் பிறப்பு ஸமீபத்தில் இருக்கும் பொழுதும் அதை நினையாது, தந்தையான தஶரதரின் ஆனையால் முன்பு பூமியை நான் த்யாகம் செய்த்துபோல், இப்போது ஏற்பட்டுள்ள களங்கத்தைப் போக்க ஸீதையை, அவள் விரும்பியபடியே காட்டில் மீண்டும் விட விரும்புகின்றேன். ஸீதை பரிஶுத்தமானவள் என்று நான் அறிந்தும் ஜனநிந்தையை பெரிதென நினைக்கின்றேன்.

अवैमि चैनाममघेति

अन्तरात्मा च मे वेत्ति सीतां शुद्धां यशस्विनीम्।

ततो गृहीत्वा वैदेहीमयोध्यामहमागत:॥ (உத்தரகாண்டம் 45-10)

அவைமி - சைநாமநகேதி

அந்தராத்மா ச மே வேத்தி ஸீதாம் ஶுத்தாம் யஶஸ்விநீம்

ததொ க்ருஹித்வா வைதேஹீமயோத்யாமஹமாகத: உ.கா.–45-10

என்று ஸ்ரீமத்ராமாயணம் உத்தரகாண்டத்தில் ஸ்ரீராமர் வாக்காகும். மிககொடிய பிடிவாத முடையவர் என்பதை அறிந்த சகோதரர்கள் மௌனமாகவே இருக்கும்படி ஆயிற்று. லக்ஷ்மணனை தனியாக்க் கூப்பிட்டு, ஸீதா தேவியை த்யாகம் செய்வதை ரஹஸ்யமாகவே செய்ய எண்ணினார்.

காட்டிற்கு செல்ல வேண்டுமென ஸீதா தேவி விரும்பியதையே வ்யாஜமாகக் கொண்டு வால்மீகி முனிவரின் ஆஶ்ரமம் அருகே விட்டு விட்டு வருவாயாக என ஆணைபிறப்பித்தார். ஶுமந்திரரை ஸாரதியாகக் கொண்டு, தேரில் லக்ஷ்ணமர் ஸீதையை அழைத்துக் கொண்டு, கங்கையை கடந்துச் சென்றனர், படகில் கங்கையின் மறுகரை சென்றது துக்கம் தாளாது லக்ஷ்மணன் ஸ்ரீராமரின் கட்டளையை ஸீதா தேவியிடம் தெரிவித்தான். தரையில் வீழ்ந்த ஸீதா, இச்செய்தியை கேட்டு, புரண்டாள். அழுதாள். பூமாதேவியின் புதல்வி ஆதலால், "அம்மா" என பூமாதேவியை அழைத்தாள். பிறகு ஸ்ரீராமர் பேரில் கோவப்படாமல்",தான் பாவம் செய்தவள் துக்கத்தை அனுபவிக்கவே பிறந்துள்ளேன்" என்று தன்னையே நொந்து கொண்டாள்.லஷ்மணன் ஸ்ரீ ராமர் ஆ ணைப்படி செய்ய கடமை பட்டுள்ளேன். க்ஷமிக்க வேண்டும் அதோ அருகில் தெரிகின்றதே ஸ்ரீ வால்மீகி ஆஶ்ரமம் எனக் கூறினான். லஷ்மணனை தேற்றிய ஸீதை

कल्याणबुद्धेरथवा तवायं नकामचारो मयि शङ्कनीय:।

ममैव जन्मान्तरपातकानाम् विपाक विस्फूर्जथुरप्रसह्य:॥ 62

கல்யாண புத்தேரத்வா தவாயம் நகாமசாரோ மயி ஶங்கநீய:।

மமைவ ஜன்மாந்தர பாதகாநாம் விபாக விஸ்பூர்ஜதுரப்ரஸஹ்ய:॥

எப்பொழுதும் சுபமான புத்தியை உடைய தாங்கள் என்னை தியாகம் செய்தது. வேண்டுமென்று ம னம் போனவாறு செய்த கார்யமாக கருதப்படக்கூடாது. நான் முற்பிறவியில் செய்த தீவினைப்பயனே இப்பொழுது இடியோசை போன்று தோன்றியுள்ளது. ஸ்ரீ ராமரிடம் தாங்கள் கீழ்கண்டவாறு சொல்ல வேண்டும்.

"தங்கள் ஸந்ததியை நான் சுமக்காவிட்டால் பிறரை ஆஶ்ரயித்து உயிர் வாழ்வதை விரும்பாது, இப்பொழுதே உயிரை அலக்ஷியம் செய்து முடித்திருப்பேன். உமது ப்ரஜைகளில் தவசியான என்னையும் காப்பற்ற வேண்டும். மறு ஜ ன்மத்தில் தங்களையே நன் கணவராக பெறுவதற்கும், இத்தகைய பிரிவு நேராதிருக்கவும் நான் பஞ்சாக்னி மத்தியில் தவம் செய்வேன் என்றாள். லஷ்மணரும் அப்படியே ஸ்ரீ ராமரிடம் தெரிவிப்பதாகக்கூறி ஸீதையை தனியாக விட்டு புறப்பட்டார்.

லக்ஷ்மணன் சென்றதும் ஸீதா வாய்விட்டு ஓவென்று கதறினாள் தர்பை ஸமித்துகளை கொண்டு செல்ல வந்திருந்த வால்மீகி பெண் ணின் அழுக்குரல் கேட்டு, ஸீதை இருக்குமிடம் வந்தார். ஞானத்ருஷ்டியால் அனைத்தையும் அறிந்த வால்மீகி உன் தந்தை ஸ்தானத்தில் நான் இருக்கிறேன் வருந்தாதே. உன் தந்தை வீட்டிற்கு வந்ததாக எண்ணிக்கொள்.

तवोरुकीर्तिः श्वशुरः सखा मे सतां भवोच्छेदकरः पिता ते।
धुरि स्थिता त्वं पतिदेवतानाम् किं तन्न येनासि ममानुकम्प्या॥ 74

தவோரு கீர்த்தி: ஶ்வஶுர: ஸகா மே ஸதாம் பவோச்சேதகர: பிதாதே|
துரி ஸ்திதா த்வம் பதிதேவதாநாம் கிம் தந்ந யேநாஸி மமாநு கம்ப்யா||

விசாலமான கீர்த்தியுடைய உன் மாமனார் தஶரத சக்ரவர்த்தி என் ஸ்நேகிதர். உன் பிதா ஜனக மஹாராஜா மோக்ஷத்தை விரும்பும் நல்ல மனிதர்களுக்கு ஞான உபதேசங்களினால் ஸம்ஸார துக்கத்தை நீக்குகின்றவராக இருக்கின்றார். நீ பதிவ்ரதைகளுக்கெல்லாம் முதலில் இருக்கின்றாய். எனவே எல்லா வகையிலும் நீ என் இரக்கத்திற்கு உரியவளாக இருக்கின்றாய். உன்னிடம் குற்றம் ஒன்றும் இல்லை.

ஸீதையும் வால்மீகி மஹரிஷியை வணங்கி, அவரின் ஆஶ்ரமத்திற்கு சென்றாள். அங்குள்ள தாபஸ பெண்கள் ஸீதையை வரவேற்று அவள் வசிப்பதற்கு ஓர் பர்ணசாலையை அமைத்தனர். ஸீதை தமஸா நதியில் ஸ்நானம் செய்து கொண்டு, தன் கணவரின் ஸந்ததியை காப்பாற்றுவதற்காக, பழம் முதலியவற்றை ஆஹாரமாகக்கொண்டு தன் உடலை ர க்ஷித்தாள். ஸீதா விஷயங்களை லஷ்மணர் ஸ்ரீ ராமரிடம் தெரிவித்தார். ஸ்ரீராமரும் ஜனநிந்தைக்குப் பயந்து ஸீதையை அனுப்பினாரே அன்றி தன் மனத்திலிருந்து நீக்கவில்லை. ஸீதையும் இதை உணர்ந்து ஸ்ரீராமர் த்யானமாகவே வால்மீகி ஆஶ்ரமத்தில் தபஸில் ஈடுபட்டாள்.

கேள்விகள்.

1. கைகேயியின் வரம் என்ன?
2. ஸ்ரீ ராமரின் நண்பன் யார்
3. பாதுகாபட்டாபிஷேகம் எங்கே நடைபெற்றது?
4. பஞ்சவடியில் அவர்கள் சந்தித்த அரக்கி யார்?
5. சூர்பனகை என்ன செய்தாள்?
6. ராவணனிடம் போரிட்ட கழுகு பெயர் என்ன?
7. வானரர்களின் தலைவனாக இருந்தவர் பெயர் என்ன?
8. ஜடாயுவின் அண்ணன் பெயர் என்ன?
9. லங்கையில் தேடியது யார்?
10. ஸீதையை பார்த்த ஶ்லோகத்தை எழுது?
11. ராமர் அடையாளமாக எதைக் கொடுத்தார்?
12. ஸீதை அடையாளமாக எதைக் கொடுத்தாள்?
13. ராவணன் தம்பிமார்கள் பெயர்கள் என்ன?
14. ராவணன் பெருமைகள் எழுது?
15. ராமர் ராவணனை எப்படி வீழ்த்தினார்?
16. ஸ்ரீ ராமர் எதில் அயோத்தி திரும்பினார்?
17. ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகம் ஶ்லோகத்துடன் சிறு குறிப்பு தருக?
18. வேவுகாரன் பெயர் என்ன? அவன் என்ன சொன்னான்?
19. ஸீதையை காட்டிற்கு அழைத்து சென்றவர் யார்? எங்கே விட்டார்?
20. வால்மீகி மஹர்ஷி ஸீதைக்கு எவ்வாரு ஆறுதல் கூறினார்?

Chapter Ten

पञ्चदशस्सर्गः - பதினைந்தாம் ஸர்கம்

குசன்-லவன்-பிறப்பு

ஸ்ரீராமர் ஸீதையை ஸ்ரீவால்மீகி ஆஶ்ரமத்தில் விட்ட பிறகு, வேறு விவாஹம் செய்துகொள்ளவில்லை. ஸீதையை போன்ற தங்கபதுமையை வைத்துக்கொன்டு யாகங்கள் செய்தார். இதை கேள்வியுற்ற ஸீதையும் தன்மேல் ஸ்ரீராமர் வைத்துள்ள அன்பை உணர்ந்து மனம் தேறி இருந்தாள். மன அமைதி இல்லாமல் ஸ்ரீ ராமர் ராஜ்யபரிபாலனம் செய்து வந்தார். ஒரு காட்டில் தவம் புரியும் முனிவர்கள் ஸ்ரீ ராமரிடம் வந்து, காட்டில் லவணன் என்னும் அரக்கன் அடிக்கடி துன்பம் விளைவிப்பதாக கூறிணார்கள். ஸ்ரீ ராமரும் சத்ருக்கனை, அவர்களுக்கு பாதுகாப்பாக அனுப்பி, லவணனை அழிக்கச்சொன்னார். லவணனை ஸ்ரீ ராமர் ஆணைப்படி சத்ருக்கனன் லவணனை அழித்தான். சத்ருக்னன் ஓரிரவு வால்மீகி ஆஶ்ரமத்தில் தங்கினான். வால்மீகி மஹரிஷி அவனை நன்கு உபசரித்தார். அப்பொழுது ஸீதை இரண்டு குமாரர்களை இரட்டையர்களாக ஈன்றாள்.

तस्यामेवास्य यामिन्याम् अन्तर्वत्नी प्रजावती।

सुतावसूत संपन्नौ कोशदण्डाविव क्षितिः॥ 13

தஸ்யாமேவாஸ்ய யாமின்யாம் அந்தர்வத்னீ ப்ரஜாவதீ|

ஸுதாவஸூத ஸம்பன்னௌ கோஶதண்டாவிவ க்ஷிதி:||

அதே ராத்திரியில் (சத்ருக்னன் தங்கியிருந்த இரவிலேயே) கர்பிணியும் அந்த சத்ருக்னின் ஸஹோதரர் பத்னியுமான ஸீதை பூமியானது பூர்ணமான ஐஶ்வர்யத்தையும் ஸேனையையும் ஈவதுபோல, இரண்டு குமாரர்களை ஈன்றாள். இதனால் ஸந்தோஷமடைந்த சத்ருக்னன் மிக்க மகிழ்ச்சி அடைந்தான். லவணனை கொன்ற பிறகு, சத்ருக்னன் அங்கே யமுனை நதிதீரத்தில் "மதுரா" எனும் நகரை நிர்மாணித்தான்.

उपकूलं स कालिन्द्याः पुरीं पौरुषभूषणः।

निर्ममे निर्ममोऽर्थेषु मधुरां मधुराकृतिः॥ 28

உபகூலம் ஸ காளிந்த்யா: புரீம் பௌருஷபூஷண|

நிர்மமே நிர்மமோர்த்தேஷு மதுராம் மதுராக்ருதி||

பராக்ரமத்தை ஆபரணமாகக் கொண்டவனும், உலக வஸ்துக்களில் ஆசை அற்றவனும், அழகிய ரூபமுடையவனுமன அவன் (சத்ருக்னன்) யமுனா நதிக்கரையில் மதுராபுரியை நிர்மாணம் செய்தான். அந்நகரம் மிக சோபையுடன் விளங்கிற்று. அடுத்த அவதாரத்தில் ஸ்ரீராமர் தான் ஸ்ரீ கிருஷ்ணராக அங்கே பிறந்தார்.

सखा दशरथस्यापि जनकस्य च मन्त्रकृत्।

संचस्कारोभयप्रीत्या मैथिलेयौ यथाविधि॥ 31

ஸகா தஶரதஸ்யாபி ஜநகஸ்ய ச மந்த்ரக்ருத்|

ஸம்சஸ்காரோபய ப்ரீத்யா மைதிலேயௌ யதாவிதி||

தஶரதருக்கும் ஜனகருக்கும் ஸ்நேஹிதரும் மந்தரங்களை கண்டவருமான வால்மீகி அந்த இரட்டைக் குழந்தைகளுக்கும் ஶாஸ்தரப்படி ஜாதகர்மா முதலிய வைதிக கார்யங்களை செய்து பரிசுத்தர்களாக செய்தார்.

सतौ कुशलवोन्मृष्ट गर्भक्लेदौ तदाख्यया।
कवि: कुशलवावेव चकार किल नामत:॥ 32
ஸ தௌ குசலவோன்ம்ருஷ்ட கர்பக்லேதௌ ததாக்யயா|
கவி: குசலவாவேவ சகார கில நாமத:||
ஆதிகவி வால்மீகி மாமுனிவர், தர்பத்தினாலும் பஸுவின் வால் ரோமத்தினாலும் துடைக்கபட்ட கர்பத்தின் நனைவையுடைய ஸீதையின் குமாரர்களை பெயர் வைக்கும் விஷயத்தில் அவைகளின் (குச, லவ) பெயர்களாலேயே குசன், லவன் என்று செய்தார் அவ்வாறே பெயரிட்டு மகிழ்ந்தார்.

साङ्गं च वेदमध्याप्य किंचिदुत्क्रान्त शैशवौ।
स्वकृतिं गापयामास कविप्रथम पद्धतिम्॥ 33
ஸாங்கம் ச வேதமத்யாப்ய கிஞ்சிதுத் க்ராந்த ஶைஶவௌ|
ஸ்வக்ருதிம் காபயாமாஸ கவி ப்ரதம பத்ததிம்||
சிறிது கடந்த குழந்தைப்பருவத்தை உடைய அவ்விருவர்களையும் அங்கங்களோடு கூடிய வேதத்தை ஓதும்படி செய்து, கவிகளுக்கு முதல் மார்கமான தாம் இயற்றிய ஸ்ரீமத்ராமாயணத்தை பாடும்படி செய்தார். லவனும் குசனும் தாயின் முன்னால் இனிமையாகப் பாடி, ராமர் பிரிவினால் வருந்துகின்ற தாயின் துக்கத்தைப் போக்கினார்கள். ஸ்ரீபரத, சத்ருக்னன், லக்ஷ்மணனுக்கும் ஒவ்வொருவருக்கும் இரட்டைக்குழந்தைகள் பிறந்தனர்.
பரதன் குமாரர்கள் பெயர்: தக்ஷன், புஷ்கலன்.
லக்ஷ்மணன் குமாரர்கள் பெயர்: அங்கதன், சந்தரகேது.
சத்ருக்னன் குமாரர்கள் பெயர்: சத்ருகாதி, ஸுபாஹு

शत्रुघातिनि शत्रुघ्न: सुबाहौ च बहुश्रुते।
मधुराविदिशे सून्वो: निदधे पूर्वजोत्सुक:॥ 36
ஶத்ருகாதிநி ஶத்ருக்ன: ஸுபாஹௌ ச பஹுஶ்ருதே|
மதுராவிதிஶே ஸுன்வோ: நிததே பூர்வஜோத்ஸுக:||
ஸ்ரீராமருடன் வஸிக்க விரும்பிய சத்ருக்னன் மதுரை, விதிசை என இரண்டு நகரங்களையும் பாதுகாக்கும்படி தன் புத்ரர்களான சத்ருகாதியையும் ஸுபாஹுவையும் நியமித்தான். ஸ்ரீமத் ராமாயண குசலவர்கள், ஸ்ரீவால்மீகியின் ஆக்ஞைப்படி அயோத்தியில் பல இடங்களில் இனிமையாக பாடினார்கள். ஸ்ரீராமரின் முன்பு அயோத்யா அஶ்வமேத யாகமண்டபத்தில் பாடினார்கள். ஸ்ரீராமர் கண்ணீர் மல்க அக்குழந்தைகளின் அழகைக் கண்டார். பாட்டில் தன்னை மறந்தார். ஸபையே ஆனந்தபாஷ்பத்துடன் அசைவற்று இருந்தது. ஸ்ரீராமர் அவர்களிடம் மிக்க அன்புடன்

गेये को नु विनेता वाम् कस्य चेयं कृति: कवे:।
इति राज्ञा स्वयं पृष्टौ तौ वाल्मीकिमशंसताम्॥ 69
கேயே கோ நு விநேதா வாம் கஸ்ய சேயம் க்ருதி: கவே:|
இதி ராக்ஞா ஸ்வயம் ப்ருஷ்டௌ தௌ வால்மீகிமஶம் ஸதாம்||
ஸங்கீதத்தில் உங்களுக்கு யார் உபாத்யாயர்? நீங்கள் பாடிய இந்த கானம் எந்த கவியின் காவ்யம். என்று அரசரான ஸ்ரீராமராலே கேட்கப்பட்ட அவ்விருவர்களும் வால்மீகி மஹரிஷிகளை குருவாகவும், ஆதிகவியாகவும். சொன்னார்கள். அதனால் மகிழ்ந்த ஸ்ரீராமர் தமது ராஜ்யம் முழுவதையுமே வால்மீகிக்கு அர்பணம் செய்தார். ஆனால் வால்மீகி மஹரிஷிகள். குசலவர்கள். ஸ்ரீராமரின் இரட்டைக் குழந்தைகள் என்றும். தன் ஆஶ்ரமத்தில் ஸீதை ப்ரஸவித்தாள் என்றும். அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் பிறார்த்தித்தார்

பிறகு ஆஶ்ரமத்திலிருந்து ஸிஷ்யர்கள் மூலம் ஸீதாதேவியை வரவழைத்தார். நகர ஜனங்கள் ஸீதையை ஏற்றுக்கொள்ள வேண்டும், பிறகு தாம் ஏற்றுகொள்வதாக ஸ்ரீராமர் கூற, அடுத்த நாளில் ஜனங்களின் மத்தியில் ஸீதை குழந்தைகளுடன் நின்றாள். ஸீதையைக் கண்டவுடனேயே ஜனங்கள் அவள் பரிஸுத்தமானவள் என அறிந்து கொண்டார்கள். இத்தகைய பதிவ்ரதைக்கு கொடுமை புரிந்தோமே என தலையை குனிந்தவர்களாக ஸீதையை பார்க்க அஞ்சினர்.

உன் பாதிவ்ரத தர்மத்தை நிரூபிப்பாயாக என வால்மீகி கூற, அவர் தந்த புண்ய தீர்த்தத்தை ஆசமனம் செய்தபின், தன் தாயான பூமிதேவியிடம் பிறார்த்தித்தாள்.

वाङ्मन: कर्मभि: पत्यौ व्यभिचारो यथा न मे।

तथा विश्वंभरे देवि मामन्तर्धातुमर्हसि॥ 81

வாங்மந: கர்மபி: பத்யௌ வ்யபிசாரோ யதா ந மே।

ததா விஶ்வம்பரே தேவி மாமந்தர் தாதுமர்ஹஸி॥

வாக்கினாலும் மனத்தாலும் கார்யத்தினாலும் கணவன் விஷயத்தில் எனக்கு குற்றமானது இல்லாவிட்டால், எல்லோரையும் தாங்குகின்ற ஹே பூமாதேவியே, என்னை உன்னுடன் உள்ளே வைத்துக் கொள்வதற்கு நீ தகுந்தவளாக இருகின்றாய். என்னை அழைத்துக் கொள், அம்மா! என கதறினாள். உடனே பூமி இரண்டாக பிளந்து, பாம்புகளின் படங்களால் தாங்கப்பட்ட ஆஸனத்தில் அமர்ந்து பூமிதேவி தோன்றி, ஸீதையை அழைத்துச் சென்று மறைந்தாள் .

அனைவரும் "ஹா-ஹா" என கதறினார்கள். ஸ்ரீராமரும், குழந்தைகளும் கதறினார்கள். வஸிஷ்டர் அனைவரையும் ஶாந்தபடுத்தினார். குவலவர்களை அன்புடன் ஆதரவுடனும் ராமர் வளர்த்தார். பரதனைக் கொண்டு ஸிந்துதேச துஷ்டர்களை அழித்தார். பரதன், தன் புதல்வர்களான தக்ஷன்-புஷ்கலன், ஆகிய இருவரையும், அவர்கள் பெயரிலேயே இரண்டு நகரங்களை நிர்மாணித்து, அங்கேயே அவர்களுக்கு ராஜ்யாபிஷேகம் செய்தான். லக்ஷ்மணனும், காராபதம் எனும் தேசத்திற்கு அரசர்களாக, தன் இரட்டை குமார்களான அங்கதன், சந்த்ரகேது இருவரையும், ஸ்ரீராமர் ஆணைபடி அபிஷேகம் செய்வித்தான்.

ஸ்ரீராமர், தன் குழந்தைகளான, குசனை குசாவதி என்னும் நகரத்திலும், லவனை சராவதி என்னும் நகரத்திலும் ஸ்தாபித்தார். ஸ்வர்கம் செல்வதற்காக ஸ்ரீராமர், தம்பிகளுடன் வடதிசை நோக்கி புறப்பட்டார். ஸகல ஜனங்களும் ஸ்ரீராமரை பின் தொடர, ஸ்ரீராமர் ஸரயூ நதியில் இறங்கினார்.

यद्गोप्रतर कल्पोभूत् संमर्द: स्तत्र मज्जताम्।

अतस्तदाख्यया तीर्थं पावनं भुवि पप्रथे॥ 101

யத்கோப்ரதர கல்போ அபூத் ஸம்மர்த: தத்ர மஜ்ஜதாம்।

அதஸ்ததாக்யயா தீர்த்தம், பாவநம் புவி பப்ரதே॥ 101

பஸுக்கள் நதியில் ஜலத்தில் நெருக்கிக் கொண்டு நீந்தி கடப்பது போல், ஜனங்கள் அந்த நதியில் மூழ்கி ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டு ஸ்வர்கம் சென்றதினால் அந்த இடம் "கோப்ரதரம்" எனப் ப்ரஸித்தி பெற்ற புண்ய தீர்த்தமாயிற்று. பகவன் விஷ்ணு, தேவகார்யமான ராவணவதத்தை முடித்த பிறகு, ஹநுமாரையும் விபீஷணனையும் இவ்வுலகில் தமது வெற்றித்தூண்களாக நிறுத்திவிட்டு, தம்முடைய திவ்ய ஸரீத்தை அடைந்தார்

षोडशस्सर्गः - பதினாராம் ஸர்கம்:

குசன், குசாவதி என்னும் நகரில் வெகு சிறப்பாக ஆட்சி செய்து வந்தான்.

अथेतरे सप्त रघुप्रवीराः ज्येष्ठं पुरोजन्मतया गुणैश्च।

चक्रुः कुशम् रत्न विशेषभाजम्सौभ्रात्रमेषाम् हि कुलानुसारि॥

அதேதரே ஸப்த ரகுப்ரவீரா: ஜ்யேஷ்டம் புரோஜன்மதயா குணைச்ச|

சக்ரு: குஶம் ரத்னவிஶேஷபாஜம் ஸௌப்ராத்ரமேஷாம் ஹி குலாநுஸாரி|| 1

ஸ்ரீராமர் முதலிய நான்கு ஸஹோதரர்களின் புதல்வர்களான லவன் முதலியவர்கள் தங்கள் எல்லோரைக் காட்டிலும் சிறந்துள்ளவனும், வயதினாலே மூத்தவனுமான குசனுக்கு ராஜ்யத்தில் உள்ள சிறந்த பொருட்கள் எல்லாம் அளித்தனர். ஸஹோதர அன்பே அதற்கு முக்ய காரணமாகும். அவர்கள் ஒற்றுமையுடனும் அன்புடனும் இருப்பது ரகு குலத்தின் சிறந்த பண்பாகும் அல்லவா! தங்கள் தங்கள் நாட்டு எல்லையை மீறாது, எல்லா வளங்களையும் பெருக்கி, மக்களை நன்கு ஆண்டு வந்தும், அவர்களுக்கு பாதுகாப்பாகவும் இருந்தனர்.

ஒரு நாள் நடுநிசியில் குசன், ஒரு அழகான முன்பார்த்திராத ஸ்த்ரீயை கண்டான். குசன் அவளை நோக்கி, உனக்கு யோக ஶக்தி தெரியும் என நினைக்கின்றேன். என் அறை உள் தாளிடப்பட்டு உள்ளது. நீ துக்கமுடையவளாய் காட்சியளிக்கிறாய். நீ யார்? யாருடைய மனைவி? இந்நடுநிசியில் என்னை காண வரக்காரணம் என்ன? ரகு குல ம ன்னர்கள் பல ஸ்த்ரீயை நாடாதவர்கள். நீ கூறவேண்டியதை கூறுவாயாக.

அரசே! நான் அயோத்யா நாட்டு தேவதை. உன் தந்தை பரமபதம் செல்லும் காலத்தில் அயோத்தியா நாட்டு மக்களையும் அழைத்து சென்றதால், குபேரரின் அழகாபுரியைக்காட்டிலும் மிக்க மேன்மையான எனது அயோத்தியா நகரம் தற்போது சோபையை இழந்து காணப்படுகிறது. நகரம் பாழடைந்து காணப்படுகிறது. அதனால் நான் துக்ககரமான நிலையை அடைகிறேன். நிர்ஜனமான நாட்டில் நரிகள் ஊளையிடுகின்றன. மயில்கள் தோகைவிரித்து ஆடாமல் துக்கமாக உள்ளன. காட்டு விளங்குகளின் வாசஸ்தலமாக மாறி விட்டது. அதனால் நீயும் உன் குசாவதியை விட்டு உனது குலத்தினரின் ராஜதானியாகிய அயோத்தியை அடைந்து, அதை பழைய பிரகாரம் சோபை மிக்கதாக விளங்கசெய்ய வேண்டும். என்பதே என் பிராத்தனை என்றது. குசன், பெரியோர்களிடம் கலந்து முடிவெடுத்து அயோதிக்கு வருவதாக கூறவே, அந்த தேவதை மறைந்தாள். மறுநாட்காலையில் வஸிஷ்டர் முதலிய பெரியோர்களுக்கு தெரிவித்தான். அனைவரும் அயோத்திக்குச் செல்வதை ஆமோதித்தனர்.

कुशावतीं श्रोत्रियसात्स कृत्वा यात्रानु कूलेऽहनि सावरोधः।

अनुद्रुतो वायुरिवाभ्रवृन्दैः सैन्यैरयोद्याभिमुखः प्रतस्थे॥

குஶாவதீம் ஶ்ரோத்ரியஸாத்ஸ க்ருத்வா யாத்ராநு கூலே அஹநி ஸாவரோத:|

அநுத்ருதோ வாயுரிவாப்ரவ்ருந்தை: ஸைன்யைரயோத்யாபிமுக: ப்ரதஸ்தே||

குசன், குசாவதி நகரத்தை வேதமறிந்த ப்ராம்மணர்களுக்குரியதாகச் செய்துவிட்டு, ப்ரயாணத்திற்கு அனுகூலமான நாளில், அந்தப்புரத்து ஸ்திரீகளுடன் கூடியவனாக, காற்று மேகக்கூட்டங்களால் பின் தொடருவது போல், ஸேனைகளால் பின் தொடரப்பட்டு அயோத்தியை நோக்கி புறபட்டான். வழியில் கங்கையை கடக்கும்போது கங்காதேவியை வனங்கினான். ஸரயூ நதிதீரத்தில், அங்கு ரகு குலத்தவர்கள் நீண்டகாலம் யாகம் செய்து நாட்டிய யூபஸ்தம்பங்களைக் கண்டான். வருஷங்கள் பல கடந்தாலும், அவை புதுபொலிவுடன் காணப்படுவதைக்கண்டு ஆச்சர்யமடைந்தான். குசன், பிறகு வாஸ்து பூஜையின் முறையை அறிந்தவர்களைக் கொண்டு பூஜையை செய்வித்தான். ராஜக்ருஹத்தில் ப்ரவேசித்த பின் அவரவர்களின் தகுதியும் முதன்மையும் அறிந்து

அவர்களை கௌரவித்தான். அயோத்தி முன்னிருந்த சோபையைத் திரும்பவும் பெற்று விளங்கியது. அயோத்தி தேவதையும் மகிழ்ந்தாள்.

ஒரு ஸமயம் ஸரயூ நதியில் ஜலக்ரீடை செய்தான். அப்போது அகஸ்த்ய முனிவரால் ஸ்ரீராமருக்கு அளிக்கபட்ட தோள்வளையை, ஸ்ரீராமர், குசனுக்கு அரசுரிமையுடன் அதையும் சேர்த்து அளித்தார். நீராடியபின் கரையை அடைந்த குசன், தோள்வளை காணாது திகைத்தான். ஜலத்தில் விழுந்திருக்க வேண்டும் என்று, அங்கே தேடலானான். பல நபர்கள் நன்கு தேடினார்கள். பிறகு அவர்கள், அரசே நாங்கள் நன்கு தேடி விட்டோம். ஸரயூ நதியின் மடுவில் வஸிக்கும் குமுதன் என்ற நாகன் அதை கவர்ந்துள்ளான் என்று நினைக்கின்றோம், என்றனர். கருடாஸ்த்ரத்தை குசன் எடுக்கவே, ஸர்பராஜன் குமுதன் தன் தங்கை குமுதவதி அறியாமல் அதை எடுத்து விட்டாள். ஆகவே அவளை ம   ன்னிக்க வேண்டும். இவ்வாபரணம் மறுபடியும் தங்கள் புஜத்தை அலங்கரிப்பதாக என்று மன்றாடிக்கேட்டுக் கொண்டான். மேலும் குமுதவதி தங்களுக்கு ஆயுட்கால பர்யந்தம் பணிவிடை செய்ய விரும்புவதாகக் கூறினான் அதை ஆமோதி   த்து குமுதவதியை மணந்தான். குமுதன் கருடபயம் இல்லாமலும் அயோத்தி மக்கள் நாகபயம் இல்லாமலும் வாழ்ந்தனர்.

கேள்விகள்:

1.சத்ருக்கனன் அழித்த அரக்கன் பெயர் என்ன?
2.ஸீதைக்கு எத்தனை குழந்தைகள் பிறந்தனர்? அவர்கள் பெயர் என்ன என்ன?
3.சத்ருக்னன் நிர்மாணித்த நகரம் எது?
4.குசன் லவன் பெயர் காரணம் ஶ்லோகத்துடன் எழுது?
5.லஷ்மணனின் குழந்தைகள் பெயர் என்ன?
6.பரதனுக்கு எத்தனை குழந்தைகள், பெயர்கள் எழுது?
7.சத்ருக்னின் குழந்தைகள் பெயர் எழுது?
8ஸ்ரீமத்ராமாயணம் யாரால் எழுதப்பட்டது? அதை கானம் செய்தவர்கள் யார் யார்?
9.ஸ்ரீ ராமர் குசலவனிடம் என்ன கேட்டார்?
10.ஸீதை பூமாதேவியிடம் என்ன பிறார்த்தனை செய்தாள் ஶ்லோகத்துடன் எழுது.
11.கோப்ரதரம் --- சிறு குறிப்பு எழுது?
12குசனிடம் அயோத்யா தேவதை என்ன பிறார்த்தனை செய்தது?
13குசன் யாரை மணந்தான் அவன் ஸகோதரன் பெயர் என்ன?

Chapter Eleven

सप्तदश: सर्ग: — பதினேழாவது ஸர்கம்

மஹாராஜா ஸுதர்ஸனன், அக்னிவர்ணன் சரித்ரங்கள்

अतिथिं नाम काकुत्स्थात् पुत्रं प्राप कुमुद्वती।
पश्चिमाद्यामिनीयामात् प्रसादमिव चेतना॥ १

அதிதிம் நாம காகுத்ஸ்தாத் புத்ரம் ப்ராப குமுத்வதீ।
பஶ்சிமாத்யாமிநீயாமாத் ப்ரஸாதமிவ சேதநா॥ 1

புத்தியானது கடைசி இரவின் ஜாமத்திலிருந்து தெளிவைப் பெறுவது போல், குமுத்வதி ககுத்ஸ்த வம்சத்தோன்றலான குசனிடம் இருந்து "அதிதி" எனப்புகழ் பெற்ற மகனை பெற்றாள். அதிதியும் தாய் தந்தையரின் குலங்களைத் தனது நன்னடைத்தையால் மேலும் தூயதாக்கினான். குசனும் குமுதவதியும் அதிதியின் அபரிமிதமான வளர்ச்சியையும், மேதா விலாஸத்தையும் கண்டு மகிழ்ந்தனர். துர்ஜயன் என்னும் கொடிய அஸுரனுடன், இந்திரனுக்காக போரிடும் போது, குசனும் துர்ஜயனும் ஒருவரை ஒருவர் தாக்கி மாண்டனர். குசனின் விருப்பப்படி அதிதியை அரச பதவியில் அமர்த்தினர். பட்டாபிஷேக கோலம் அதிதிக்கு மிகவும் பொருத்தமாக அமைந்திருந்தது.

नदद्भिः स्निग्धगम्भीरम् तूर्यैराहत पुष्करैः।
अन्वमीयत कल्याणम् तस्याविच्छिन्न संतति॥

நந்தபி: ஸ்னிக்தகம்பீரம் தூர்யைராஹத புஷ்கரை:।
அன்வமீயத கல்யாணம் தஸ்யாவிச்சின ஸந்ததி॥ 11

இடையறாது தொடர்ச்சியாக அதிதிக்கு நன்மையே இனி நேரப்போகின்றது என்பதை, பட்டாபிஷேக காலத்தில் வாசிக்கப்பட்ட ம்ருதங்கம், முதலிய வாத்யங்கள் இனிமையாகவும் கம்பீரமாகவும் ஒலித்ததைக் கொண்டும் ஊஹிக்கமுடிந்தது. ஸ்துதிபாடகர்கள் தொடர்ந்து அதிதியின் புகழ் பாடினர். அபிஷேகம் முடிந்தவுடன் பொற்காசுகளை எராளமாக, ப்ராமணர்களுக்கு அள்ளி அள்ளி கொடுத்ததால், அவர்கள் ஆயுட்காலம் முழுவதும் போதுமான அளவு தக்ஷிணைக் கொண்ட யாகங்களை செய்ய உதவுவதாக இருந்தது. மகிழ்ந்த அவர்கள் அவனுக்கு ஆ சீர்வாதங்களைச் செய்தனர். அவன் செயல்கள் அர்த்த ஶாஸ்த்ரத்தை ஒட்டி இருந்தது குறிபிடத்தக்கது.

சிறையில் இருந்தவர்கள் விடுவிக்கப்பட்டனர். தூக்குதண்டனை தடை செய்யப்பட்டது. கன்றுகள் தாய் பஶுவிடம் பால் குடிக்க ஸுதந்திரமாக அவிழ்த்து விடப்பட்டது. பட்டாபிஷேகம் முடிவில், ஐராவதம் போன்ற யானையின் மீது ஏறி நகரத்தை வலம் வந்தான். அயோத்தி ஸ்வர்கம் போல் காட்சி அளித்தது. மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். தர்ம ஶாஸ்திரம் அளித்த பெரியோர்களுடன் இருந்துக்கோன்டு வாதி ப்ரதிவாதிகளின் வ்யவஹாரங்களை தானே நேரில் விசாரனை செய்தான். அவற்றிலுள்ள ஸந்தேகங்களை நீக்கினான். உட்பகைவர் வெளிபகைவர் இருவராலும் வெல்ல முடியாத நிலையில் இருந்தான். எல்லோரிடமும் அன்புடன் இருந்ததால் செல்வம் அவனை விட்டு நீங்காமல் இருந்த்து.

அதிதி தினந்தோறும் ராஜாங் ககார்யங்களை மந்திரிகளுடன் ரஹஸ்யத்தில் ஆலோசித்தான். ரஹஸ்யங்கள் வெளிவரும் பகுதிகள் நன்கு பாதுக்காகபட்டு இருந்ததால், அவனது ஆலோசனைகள் பிறர் அரிய முடியாதிருந்தன. திலிபன் வம்சை பரம்பரை அல்லவா திலிபனின் செயல்களும் அவ்வாரே இருந்த்தாக முதல் ஸர்கத்தில் 20ஆம் ஸ்லோகத்தில் பார்த்தோம்.

तस्य संवृतमन्त्रस्य..............प्राक्तनाइव॥ 1.20

தஸ்ய ஸம்வ்ருதமந்த்ரஸ்ய.........ப்ராக்தநா இவ॥

வேவுகார்ர்களின் மூலம் நாட்டில் நடக்கும்எல்லாவற்றையும் அவன் நன்கு அறிந்தான் அவன் முயற்சிகள் பயனளித்த பின்பே பிறர்க்கு புலப்பட்டன. மிகச் செல்வம் உடையவனாக இருந்தும் அவன் தகாத வழியில் செல்லவில்லை. சத்ருக் னனின் பலாபலம் தெரிந்து போரிடச்சென்றான். மூலபலத்தை தன் ஶரீரம் போல் கருதிகாத்து வந்தான். வியாபாரிகள் தம்மிச்சைப்படி, திருடர்கள், துஷ்டப்ரா ணிகளின் பயமும் இன்றி நதிகளிலும், வணங்களிலும், மலைகளிலும் தடையி ன்றிச் செ ன்றனர். காட்டில் மஹரிஷிகள் கவலையின்றி தபஸில் ஈடுப்பட்டனர்.

स्तूयमान: स जिह्वाय स्तुत्यमेव समाचरन्।

तथापि ववृधे तस्य तत्कारिद्वेषिणो यश:॥ 73

ஸ்தூயமாந: ஸ ஜிஹ்வாய ஸ்துத்யமேவ ஸமாசரன்।

ததாபி வவ்ருதே தஸ்ய தத்காரித்வேஷிணோ யஶ:॥

கொண்டாடதக்க காரியங்களை செய்து வந்தால் அவனைப் பெரியோர்கள் புகழ்ந்தனர். பிறர் புகழும் போது அவன் வெட்கம் முற்றான். புக ழை வெறுத்ததனாலேயே அவன் புகழ் மேன்மேலும் வளர்ந்தது. குடிமக்கள் ஸ்ர்வசுதந்திரமாக இருந்தனர். ஶாஸ்திரம் காட்டிய வழியிலேயே தன் முனோர்களைப்போல் உன்னத நிலைக்குச் சென்றான்.

शास्त्रनिर्दिष्टवर्त्मना ஶாஸ்த்ர நிர்திஷ்டவர்த்மநா॥ 77

என்கிறார் கவி. யாகங்களில் ஏராளமான செல்வத்தை ரித்விகளுக்கு அளித்ததால் குபேரனின் பெயரான தநதன் என்கிற பெயர் அதிதியை அடைந்தது. ரகுவம்ச அரசத்தி னரின் அம்சங்கள் ஒன்றாகதிரண்டு வந்த்துபோல் அதிதியின் ராஜ்யம் அமைந்தது.

अष्टादश: सर्ग: பதினெட்டாவது ஸர்கம்

அதிதி நிஷத நாட்டு அரசனின் மகளை மனந்தான். நிஷதமலை போன்று பலம் பொருந்திய மகன் பிறந்ததால் "நிஷதன்" என்றே பேயர் சூட்டினர். தன் மகனின் வளர்சியை கண்டு பெருமிதம் அடைந்த அதிதி, தன் மகன் நிஷதனிடம் ராஜ்யபாரத்தை ஒப்படைத்து விட்டு,தன் முன்னோர்கள் போல் யோகே நாந்தே தனுத்யஜா ம் என்பதுபோல் யோகமாத்திரத்தில் த்ன் உடலை நீத்தான்.

தன் தந்தையைபோல் நிஷதனும் வெகு நேர்மையான ஆட்சியை மக்களுக்கு அளித்தான். இந்த ஸர்கத்தில் "கவி" பலமன்னர்களின் புத்ர பரம்பரைகளின் பெயரை மட்டும் கொடுத்து,அவர்களின் ஆட்சி சிறப்பாக அமைந்தன. என்று பட்டியலோடு கூறுகின்றனர். இப்பாடத்தில் பெயர் பட்டியல் ஆரம்பத்திலயே கொடுக்கபட்டுள்ளது. "த்ருவ ஸந்தியின்" மகன் ஸூதர்சனனின் ஆட்சி மட்டும் "கவி" விஸ்தாரமாக தெருவிக்கின்றனர். ஸீதர்சனனின் வளர்ச்சி அபரிமிதமாக இருந்தது. கல்வியில், அவன் எவ்விதமான ச்ரமுமின்றி தே ர்ச்சி அடைந்தான். தன் நன்னடத்தையால் மக்களை தன்வசமாக்கிகொண்டான்.

एकोनविंशः सर्गः ஏகோநவிம்ச: ஸர்க:

சிறந்த அறிவாளியாகவும், புலன்களை அடக்கிய மஹாயோகீச்வரனான ஸூதர்சனை, தன் மகன் அக்னிவர்ணனை முடிசூட்டி . பிறகுதான் தவத்தில் ஈடுபட, நைமிசாரிண்யம் சென்றான். தவம் செய்த காலத்தில் அர ண்மனையை மறந்து, புண்யதீர்த்தங்களில் ஸ்நாநம் செய்தான் தர்பைகளை விரித்த த ரையில் படுத்தான். பர்ணசாலையில் வசித்தான். தவத்திலயே ஏகாந்த சித்தத்தை உடையவனாக இருந்தான்.

फलनिस्पृहस्तपः संचिकाय॥ 2

பலநிஸ்ப்ருஹஸ்தப: ஸம்சிகாய||

ஸ்வர்கம் முதலிய பலனின் ஆசையற்றவனாக ஸூதர்சனன் தவத்தை செய்தான் . இந்த ஸர்கத்தில் "மகாகவிகாளிதாசர்" தர்ம அர்த்த வரிசையில், "காம"த்தை மட்டுமே புருஷார்த்தமாக அக் னிவர்ணன் எ ண்ணி ஐம்புலன்களின் இன்பங்களை அனுபவித்தான். என்கிறார். தன் முன்னோர்கள் போல் வித்தையில் கவனம் செலுத்தவில்லை. யாகங்களை செய்யவில்லை. மந்திரிகளிடம் ராஜ்யத்தை ஒப்படைத்து விட்டு எப்பொழுதும் இன்பநுகர்சியின்றி நொடிப்பொழுதும் இருக்கமாட்டான். ஏதாவது விழாக்களை கொண்டாடிய வண்ணம், அந்தபுரபெ ண்களுடன், மது அருந்துதல், போன்ற தவறான மார்கத்திலயே ஈடுபட்டான். அவனது செயல்கள் மந்திரிமார்களுக்கு மிகவும் வருத்தத்தை கொடுத்தது. மக்கள் ம ன்னனைக்கான விரும்பினர். அக்னி வர்ணன் தன் பாதங்களை ஜன்னல் வழியே நீட்டினான்னன்றி நேரில் மக்களை கா ணவில்லை. மக்கள் கேட்கும்போது அரசனுக்கு தீங்கு நேரா வண்ணம் மந்திரிகள் ராஜவிச்வாசத்துடன் இருந்தனர். இ ன்பகேளிக்கைகளிலேயே அக்னிவர்ணன் நாட்கள் கடத்தியதால், காலத்தில் உடல்நலம் கெடவே, குரல் , உடல் மெலிந்து உயிரை விட்டான். அக்னிவர் ணன் மனைவி கர்பவதியாக இருந்ததால், மக்கள் அவளிடம் அரசாட்சியை அளித்தனர்.

तं भावार्थं प्रसवसमयाकांक्षिणीनां प्रजानाम्
अन्तर्गूढं क्षितिरिव नभोबीजमुष्टिं दधाना ।
मौलैः सार्धं स्थविरस वैर्हेमासिंहासनस्था
राज्ञी राज्यं विधिवदशिषद्भर्तुरव्याहताज्ञा॥ 57

தம் பாவார்த்தம் ப்ரஸவ ஸமயா காங்க்ஷிணீநாம் ப்ரஜாநாம்
அந்தர் கூடம் க்ஷிதிரிவ நபோ பீஜமுஷ்டிம் ததாநா|
மௌலை: ஸார்தம் ஸ்தவிரஸசிவைர் ஹேமஸிம்ஹாஸநஸ்தா
ராஜ்ஞீ ராஜ்யம் விதிவதஶிஷத்பர்து ரவ்யாஹதிஜ்ஞா||

விதையை பூமிதேவியானவள், விதைபதற்குரிய காலமான ஆவணியில் விதைக்கபட்ட விதையை, தன்னுள் வைத்துஇருப்பது போல், உலகின் நன்மைக்காக அவ்வரசி கர்பத்தை தாங்கி இருந்தாள். குலமுறையாக வந்த வயதுமுதிர்ந்த மந்திரிகளின் உதவியை பெற்று கணவனது ராஜ்யத்தை, அவ்வரசி அரியனையில் அமர்ந்து, முறைபடி நன்கு பரிபாலித்து வந்தாள்.

மஹாகவி காளிதாஸரால் இயற்றபட்ட ரகுவம்ச மஹாகாவ்யத்தின், 19ஆம் ஸர்கத்துடன் கதைசுருக்கம் முடிவுற்றது.

சுபம்:

கேள்விகள்

1. குசனின் மகன் பெயர் என்ன?
2. அதிதி பட்டாபிஷேகம் பற்றி எழுது?
3. அதிதியின் ராஜபரிபாலனம் பற்றி எழுது?
4. "தநதன்"_ சிறு குறிப்பு எழுது?
5. அதிதியின் பிள்ளை பெயர் என்ன?
6. ஸூதர்ஸனன் தந்தை பெயர் என்ன?
7. ஸூதர்ஸனன் பிள்ளை பெயர் என்ன?
8. "அக்னிவர்ணன்" சிறு குறிப்பு எழுது?
9. அக்னிவர்ணனுக்கு பிறகு ஆட்சி செய்தது யார்?

नीलाम्बुज श्यामलकोमलाङ्गम् सीतासमारोपित वामभागम्।
पाणौ महासायक चारुचापम् नमामि रामं रघुवंशनाथम्॥

நீலாம்புஜ ஶ்யாமல கோமலாங்கம் ஸீதாஸமாரோபித வாமபாகம்|
பாணௌ மஹாஸாயக சாருசாபம் நமாமி ராமம் ரகுவம்ஶநாதம்||
ஸ்ரீகோஸ்வாமீ துளஸீதாஸர்

Chapter Twelve

மஹாகவி காளிதாஸர்

पुरा कवीनां गणानाप्रसङ्गे
कनिष्ठिकाधिष्ठितकालिदासाः ।
अद्यापि तत्तुल्यकवेरभावात्
अनामिका सार्थवती बभूव ॥

புரா கவீநாம் க3ணாநாப்ரஸங்கே3
கநிஷ்டி2காதி4ஷ்டி2தகாலிதா3ஸ: ।
அத்3யாபி தத்துல்யகவேரபா4வாத்
அநாமிகா ஸார்த2வதீ ப3பூ4வ ॥

पुष्पेषु जातिः पुरुषेषु विष्णुः
नारीषु रम्भा नगरीषु काञ्ची ।
नदीषु गंगा नृपतेषु रामः
काव्येषु माघः कवि कालिदास

புஷ்பேஷு ஜாதி: புருஷேஷு விஷ்ணு:
நாரீஷு ரம்பா4 நக3ரீஷு காஞ்சீ ।
நதீ3ஷு க3ங்கா3 ந்ருபதேஷு ராம:
காவ்யேஷு மாக4: கவி காளிதா3ஸ:

कालिदासगिरां सारं कालिदासः सरस्वती ।
चतुर्मुखोऽथवा साक्षाद् विदुर्नान्ये तु मादृशाः ॥

காலிதா3ஸகி3ராம் ஸாரம் காலிதா3ஸ: ஸரஸ்வதீ ।
சதுர்முகோ2-த2வா ஸாக்ஷாத்3 விது3ர்நாந்யே து மாத்3ருஶா: ॥

(மல்லீநாதர்ஸ—ஸ்ரீ காளிதாஸ • க்ரந்தங்களின் ஸம்ஸ்க்ருத வ்யாக்யானம் செய்தவர்).

காளிதாஸரின் மேகதூதம் என்னும் காவ்யத்திற்கு வ்யாக்யானம் செய்த பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய ஸ்ரீ பூர்ணேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் என்பவர்

पुण्यतीर्थदेवायतनादि संकीर्तनेन दुरितक्षयः ।

புண்யதீர்த[2]தே[3]வாயதநாததி[3] ஸங்கீர்தநேந து[3]ரிதக்ஷயঃ ।

புண்ய தீர்த்தங்கள், க்ஷேத்ரங்கள் இவைகளை நினைத்து பாடுவதால், பேசுவதால், நம்முடைய பாவங்கள் விலகும் என்று எழுதியுள்ளார். இவைகளைக் காவ்யங்களில் காணலாம்.

நமக்கு மேல்நாட்டு கலாச்சார ஆதிக்கம் ஏற்பட்டு நன்கு வேரூன்றி நம்முடைய பாரதீய கலாச்சாரங்கள் தெரியாமலேயே மறையத் தொடங்குகின்றன. நமக்கு மில்டன் (Milton), ஷெல்லி (Shelly), ஷேக்ஸ்பியர் (Shakespear) போன்ற நாடகாசிரியர்கள், கவிதை புலவர்களை நன்கு தெரியும். ஆனால் நம் நாட்டுப் புலவர்கள், கவிகள், காவ்ய இலக்கியங்கள் எதுவும் தெரியாமல் காலம் கடத்தி வருகின்றோம். என்ன ஆச்சர்யம் என்றால் மேலே குறிப்பிட்ட ப்ரபலமான நாடகாசிரியர்கள், கவிகள் நம் நாட்டு கலாசாரத்தையும், கவிகளையும், அவர்கள் இயற்றிய காவ்யங் களையும் கற்று அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொடுக் கின்றனர். அனைத்துக்கும் மூலாதாரமாக உள்ளது நம்முடைய பாரதீய கலாசாரமும், ஸம்ஸ்க்ருத இலக்கிய காவியங்களும், பிராந்திய மொழி காவியங்களும்தான் என்றால் மிகையல்ல. நம் முடைய கவிகளின் காவ்யங்களையும் நாடகங்களையும் ஆங்கிலத் தில் மொழிபெயர்த்து தெரிந்து கொள்வதால் அவைகளின் ரஸம், ஆழம், அர்த்த கௌரவம் மற்றும் பல நுட்பமான ரஹஸ்யங் களைத் தெரிந்து கொள்ள வாய்ப்பு இல்லாமல் போகிறது. சம்ஸ் கிருதத்திற்குத் தனியான பெருமை அதன் அநுக்ரஹ சக்திதான்.

காவ்யம் — ஒரு சிறு குறிப்பு

ஸ்ரீமத் வால்மீகி மஹர்ஷிகளால் இயற்றப்பட்ட ஸ்ரீமத் ராமாயணத்திற்கு 'ஆதிகாவ்யம்' என்று பெயர். श्रीमद् रामायणे आदिकाव्ये ஸ்ரீமத் ராமாயணே ஆதி[3]காவ்யே என்று ஒவ்வொரு ஸர்கத்தின் முடிவில் காணலாம்.

காவ்யம் என்பதற்கு கவி எழுதியது என்பது பொருள். ஸ்ரீ வால்மீகி மஹர்ஷிக்கு 'ஆதிகவி' என்றே பெயர்.

கேட்டும், படித்தும், அனுபவித்தற்குரிய காவ்யத்தை 'ச்ராவ்ய காவ்யம்' என்பர். இதற்கு ஸ்ரீமத் ராமாயணம், ரகு வம்ஸம், குமார ஸம்பவம் முதலியன உதாஹரணங்களாகக் கொள்ளலாம்.

நடிப்பதற்கு வசதியாக எழுதப்பட்டு, நடித்தும் அனுபவித்தற்குரிய காவ்யத்தை ''த்ருச்ய காவியம்'' அல்லது ''நாடக காவ்யம்'' என்று கூறுவர். இதற்கு உதாஹரணமாக சாகுந்தலம், உத்தரராம சரிதம் முதலியன சொல்லலாம்.

தண்டியாசிரியர் காவ்யத்தை பகுத்துக் கூறும் போது पद्यम् பத்யம் செய்யுளாலானது, गद्यं கத்யம் வசன நடையாலானது இரண்டும் கலந்து அமைந்தது चम्पू சம்பு என மூன்று வகையாகப் பிரித்துள்ளார். இதையே மஹாகாவ்யம், சிறு காவ்யம் என்றும் இரண்டாகப் பிரித்துள்ளனர்.

गद्यम् - வசன நடையுள்ளது; पद्यम् - செய்யுளாலானது.

चम्पू - இரண்டும் கலந்தது. गद्यपद्यमयीचम्पू - கத்யபத்யமயீசம்பூ.

- தண்டி ஆசிரியர் தான் எழுதியுள்ள 'காவ்யா தர்சம்' எனும் நூலில் மஹாகாவ்ய லக்ஷணங்களைத் தொகுத்துக் கூறுகிறார்.

1. सर्गबन्धो महाकाव्यमुच्यते तस्य लक्षणम् ।
आशीर्नमस्क्रियावस्तुनिर्देशो वापि तन्मुखम् ॥

ஸர்க[3]ப[3]ந்தோ[4] மஹாகாவ்யமுச்யதே தஸ்ய லக்ஷணம் ।
ஆமீர்நமஸ்க்ரியாவஸ்துநிர்தே[3]மோ வாபி தந்முக[2]ம் ॥

2. इतिहासकथोद्भूतमितरद्वा सदाश्रयम् ।
चतुर्वर्गफलोपेतं चतुरोदात्तनायकम् ॥

இதிஹாஸகதோ[2]த்[3]பூ[4]தமிதரத்[3]வா ஸதா[3]ம்ரயம் ।
சதுர்வர்க[3]ப[2]லோபேதம் சதுரோதா[3]த்தநாயகம் ॥

3. नगरार्णवशैलर्तुचन्द्रार्कोदयवर्णनैः ।
उद्यानसलिलक्रीडामधुपानरतोत्सवैः ॥

நக[3]ரார்ணவமைலர்துசந்த்[3]ரார்கோத[3]யவர்ணனைः ।
உத்[3]யாநஸலிலக்ரீடா[3]மது[4]பநாநரதோத்ஸவைः ॥

4. विप्रलम्भैर्विवाहैश्च कुमारोदयवर्णनैः ।
मन्त्रद्यूतप्रयाणाजिनायकाभ्युदयैरपि ॥

விப்ரலம்பை4ர்விவாஹைச்ச குமாரோத3யவர்ணநை: ।
மந்த்ரத்3யூதப்ரயாணாஜிநாயகாப்4யுத3யைரபி ॥

5. अलंकृतमसंक्षिप्तं रसभावनिरन्तरम् ।
सर्गैरनतिविस्तीर्णैः श्रव्यवृत्तैः सुसन्धिभिः ॥

அலங்க்ருதமஸம்க்ஷிப்தம் ரஸபா4வநிரந்தரம் ।
ஸர்கை3ரநதிவிஸ்தீர்ணை: ப்ஃரவ்யவ்ருத்தை: ஸுஸந்தி4பி4: ॥

6. सर्वत्र भिन्नवृत्तान्तैरुपेतं लोकरञ्जकम् ।
काव्यं कल्पान्तरस्थायि जायेत सदलङ्कृति ॥

ஸர்வத்ர பி4ந்நவ்ருத்தாந்தைருபேதம் லோகரஞ்ஜகம் ।
காவ்யம் கல்பாந்தரஸ்தா2யி ஜாயேத ஸத3லங்க்ரதி ॥

न्यूनमप्यत्र यैः कैश्चिदङ्गैः काव्यं न दुष्यति ।

ந்யூநமப்யத்ர யை: கைஃப்சித3ங்கை3: காவ்யம் ந து3ஷ்யதி ।

மஹா காவ்யத்திற்குத் தேவையான அம்சங்கள் அலங்கார சாஸ்த்ரங்களிலே விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அதன் உட்பிரிவுகள் ஸர்கங்கள் सर्गाः எனப்படும். காவ்யத்தின் தலைவன் தேவனாகவோ, நற்குடியில் பிறந்து தீர உதாத்தனுக்குரிய குணங்களுடன் கூடிய க்ஷத்ரியனாகவோ இருக்கலாம். ரகு வம்சத்தில் இருப்பது போல் ஒரே வம்சத்தில் தோன்றிய பலரும் நாயகர்களாக இருக்கத் தக்கவர்களே.

ச்ருங்காரம், வீரம், சாந்தம் என்ற மூன்றினுள் ஒன்று முக்யமான ரஸமாகவும், மற்ற ரஸங்கள் அதற்கு புஷ்டி தருகின்றனவனவாகவும் அமைதல் வேண்டும். கதை இதிஹாஸத்திலிருந்து எடுக்கப்பட்டதாகவோ அல்லது உத்தமமான வேறு ஒரு மனிதனைப் பற்றியதாகவோ இருக்கலாம்.

துஷ்டர்களின் இழிகுணத்தை நிந்தித்தும், நல்லோர்களின் சிறப்பியல்புகளைப் புகழ்ந்தும் கூற வேண்டும். நகரம், ஸமுத்ரம்,

மலை, பருவங்கள், சந்த்ர ஸூர்ய உதயங்கள், ஜலக்ரீடை, பூங்காவில் விளையாடுதல், மதுபானம், காதலர்களின் பிரிவு, சேர்க்கை, விவாஹம், புத்ரன் பிறப்பு, போர் முதலிய வர்ணனைகள் இடம் பெற்று இருக்க வேண்டும்.

ரஸம், பாவம், பலவகை அணிகள் முதலியன நிரம்பி, காதிற் கினிய வ்ருத்தங்களிலே அமைந்து, மனதை மகிழ்விப்பதாகவும் இருக்க வேண்டும்.

எட்டு ஸர்கங்களுக்கு குறையாகவும், 32 ஸர்கங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். ஸர்கங்கள் மிக நீண்டு இல்லாமல், அவைகளின் இறுதியிலும் வ்ருத்தங்கள் மாற்றப்பட வேண்டும்.

தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்கிற நான்கு புருஷார்த் தங்களையும் அடைவதற்கான முறைகளைத் தெளிவாகக் கூறல் வேண்டும்.

பொதுவாக காவ்யத்தின் பயனைக் கூறுமிடத்து, பொருள், புகழ், உலக அறிவு, தீயன நீக்கி நலனை அடைதல், ஒரு காதலி தன் கருத்தைக் காதலனுக்குத் தெரிவிப்பது போல் சொல்லாமல் சொல்லி, அறத்தின் அறிவைப் புகட்டுதல் முதலியன பயனாகக் குறிக்கப்பட்டுள்ளன.

ரஸத்வனி, அலங்காரத்வனி, வஸ்துத்வனி எனப்படும் மூன்று த்வனிகளில் ரஸத்வனி நிறைந்த காவ்யமே சிறந்ததாகக் கருதப்படுகின்றது. இதை அனுபவிக்கும் போது கவியினது மனத் துடன் ஒத்த மனமுடைய ரஸிகனது மனம் மட்டற்ற மகிழ்ச்சியை அடைகின்றது. இம்மகிழ்ச்சி, பிரம்மானந்தத்திற்கு ஒப்பானதாக இருக்கும்.

ஸ்ரீ வால்மீகி மஹர்ஷிகள், காளிதாஸர் போன்ற மஹா கவிகளின் காவ்யங்களை நோக்கிய பின்பே அணியாசிரியர்கள் மஹாகாவ்ய லக்ஷணங்களை வகுத்து தொகுத்துக் கொடுத்துள்ளனர்.

संसारविषवृक्षस्य द्वे फले अमृतोपमे ।
काव्यामृतरसास्वादः संलापः सज्जनैस्सह ॥

ஸம்ஸாரவிஷவ்ருக்ஷஸ்ய த்[3]வே ப[2]லே அம்ருதோபமே ।
காவ்யாம்ருதரஸாஸ்வாத[3]ః ஸம்லாபஃ ஸஜ்ஜனைஸ்ஸஹ ॥

ஸம்ஸார விஷ வ்ருக்ஷத்திற்கு காவ்யாம்ருதத்தைப் பருகுதலும், சாதுக்களின் சங்கமும், அவர்களுடன் உரையாடலும் எனப்படும் இரண்டும் அம்ருதமாகும் என்று பெரியோர் கூறுவர்.

மஹாகாவ்ய லக்ஷணத்திற்கே மூல காரணமாய் உள்ளது மஹாகவி காளிதாஸரின் காவ்யங்கள்தான்.

மஹாகாவி காளிதாஸரின் வாழ்க்கை வரலாறு

மஹாகவி காளிதாஸரின் காலம் பற்றி பல்வேறு கருத்துக்கள் உள்ளன. அவரின் காலத்தை மேல் நாட்டினர் நன்றாக ஆராய்ச்சி செய்துள்ளனர்.

1. Sir William Jones சர் வில்லியம் ஜோன்ஸ் என்பவர் முதல் நூற்றாண்டு என்று கூறுகிறார். முதல் நூற்றாண்டில் மால்வ பிரவு அரசர்களில் விக்ரமாதித்யன் எனும் அரசன் ஆட்சியில், விக்ரமாதித்ய சகாப்தம் என்னும் புதியதாக ஆரம்பித்துள்ளான். அது 56 BC என்று அமைவதாக சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். முதல் நூற்றாண்டில் புஷ்பமித்ரன் எனும் அரசன் சுங்க ராஜ்யத்தை (Sunga Dynasty) ஏற்படுத்தினான். அவன் புதல்வன் 'அக்னி மித்ரன்', 'விதிசா' विदिशा என்னும் நகரத்தைத் தலைநகராகக் கொண்டு ராஜ்யத்தை ஏற்றுக் கொண்டான். காளிதாஸன் அக்காலத்தில், ராஜ்யகவியாக இருந்துள்ளார். இவைகளை அவர் எழுதியுள்ள मालविकाग्निमित्रम् மாளவிகாக்னிமித்ரம் என்னும் நாடகத்தில் குறிப்பிட்டுள் ளார். இவைகளைக் கொண்டு சர் வில்லியம் ஜோன்ஸ் காளி தாஸரின் காலம் முதல் நூற்றாண்டு என்று முடிவு செய் துள்ளார். இதைப் பலர் அங்கீகரித்துள்ளனர்.
2. Prof A.B. Keith and Vincent Smith என்போர் நான்காம் நூற்றாண்டு என்கின்றனர்.
3. Prof Max Mullar ஆறாம் நூற்றாண்டு என்கிறார்.
4. Dr. Fergussen and Dr. Fleet முதலியோரும் காளிதாஸரின் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வெவ்வேறு காலக் கணக்கை கூறு கின்றனர்.

5. காளிதாஸர் உஜ்ஜயினியில் இருந்ததாகவும், கலிங்க தேசத்தில் இருந்ததாகவும், ஹிமாலயத்தில் இருந்ததாகவும் பல்வேறு கருத்துக்கள் உள்ளன.

6. குமார ஸம்பவம் ஆங்கில மொழிபெயர்ப்பின் முன்னுரையில் Dr.M.R. Kale அவர்களும் அபிக்ஞான சாகுந்தலம் ஆங்கில மொழிபெயர்ப்பின் முன்னுரையில் சாரதா ரஞ்ஜன் ராய் என்பவரும் (Sir William Jones), சர் வில்லியம் ஜோன்ஸின் ஆராய்ச்சியை ஏற்றுக் கொண்டு, முதல் நூற்றாண்டு என்று முடிவு செய்துள்ளார்கள். அதற்குக் காரணம் முதல் நூற்றாண்டில் இருந்த அச்வகோசரின் நூல்களுக்கும், காளிதாஸரின் நூல்களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விளக்க, காளிதாஸரின் நடை அச்வகோசரின் நூல்களில் காணப்படுகின்றன என்று ஆராய்ச்சி செய்துள்ளார்.

மேல் நாட்டினர் காளிதாஸரின் நூல்களில் ஈர்க்கப்பட்டு, அவரின் காலத்தைக் கணக்கிடுவதில் ஈடுபடும் ஆராய்ச்சி முதலியவைகளால், காளிதாஸரின் பெருமை உலக அளவில் உயர்ந்து உள்ளது என்பதிலிருந்தே நம் பாரதீய கலாச்சாரப் பெருமையின் முக்யத்வம் புலனாகிறது அல்லவா?

காளிதாஸரின் நூல்கள் அனைத்தும் ஆங்கிலத்திலும் மற்றும் ப்ரெஞ்ச் (French), ஜெர்மன் (German), ரஷ்ய (Russia) மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

''குறிப்பாக ஒரு முடிவும் காண முடியாத போது தேசம் பூராவிலும் அல்லது பெரிய பகுதிகளில் 'ஆழமான நம்பிக்கை' என்று சொல்லக் கூடிய நெடுங்காலமாக இருந்து வரும் கர்ண பரம்பரை விஷயங்களை, அத்தை பாட்டி கதை என்று தள்ளி விடாமல் மதிப்பு கொடுத்து க்ரஹித்துக் கொள்ள வேண்டும்'' என்று மூலாம்னாய காஞ்சி காமகோடி பீடத்தின் 68வது பீடாதிபதியாக இருந்து நம்மையெல்லாம் அனுக்ரஹித்த 'காஞ்சி மஹா ஸ்வாமிகள்' எனப்படும் ஸ்ரீசந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்ரீசங்கராச்சார்ய ஸ்வாமிகள் உபதேசித்துள்ளார்கள்.

காளிதாஸரின் இளமைப் பருவ வாழ்க்கை

ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகள் அருளியது போல் காளிதாஸரின் இளமைக் கால வாழ்க்கை வரலாறு கர்ண பரம்பரை செய்தியாக வந்துள்ளது.

உஜ்ஜயினி ராஜ்யத்தை சாரதானந்தன் என்னும் ராஜா ஆட்சி புரிந்து வந்தான். அவனுக்கு 'வித்யோத்தமா' என்ற மஹாதுஷ்டி, நன்கு பாண்டித்யம் உள்ளவளாக ஒரு பெண் இருந்தாள். தன் மகளின் பாண்டித்யத்திற்கு ஸமமான ஒருவனைத்தான், தனக்கு மாப்பிள்ளை யாக தேடிக் கொண்டு இருந்தான். நூற்றுக்கணக்கான புலவர்கள், வித்யோத்தமாவின் கேள்விகளுக்கு பதில் அளிக்க முடியாமல் அவமானத்துடன் திரும்பினர்.

தோற்றுப் போன மந்த்ரிகள், பண்டிதர்கள் எல்லாம் ஒன்றுகூடி வித்யோத்தமாவின் வித்யா கர்வத்தை அடக்க வேண்டும், ஒரு முட்டாளை மஹா பண்டிதன் என்று சொல்லி, அவளுக்கு விவாஹம் செய்ய வேண்டும் என்று முடிவு கட்டி கிராமங்கள் பக்கம் தேடிச் சென்றனர்.

அப்போது கிராமத்தில் மஹாமூடன், படிப்பறிவில்லாதவன், நுனி மரத்தில் உட்கார்ந்து கொண்டு அடி மரத்தை வெட்டிக் கொண்டு இருந்தான். அவனைப் பார்த்ததும், அவனிடம் சென்று உனக்கு ராஜாங்கப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுக்கின்றோம்; எங்கள் சொற்படி கேட்க வேண்டும் என்று கூறி அரச சபைக்கு அழைத்து வந்தனர்.

ராஜாவிடமும், வித்யோத்தமாவிடமும், இவர் மிகப் பெரிய மனிதர். மஹா பாண்டித்யம் உள்ளவர். ஆனால் இன்று மௌன வ்ரதமுடையவராக இருக்கிறார். 'இளவரசி கேட்கும் கேள்வி களுக்கு மௌனமாகப் பதில் கூறக் கடிய திறமை படைத்தவர் என்று, அவரின் பெருமைகளாகக் கூறினர்.

வித்யோத்தமாவின் கேள்விகளுக்கு இவன் ஜாடையாக கை விரல்களைக் காட்ட, அதற்குப் பண்டிதர்கள், அவ்விரல்களால் பதில் கூறுவதற்கு அர்த்தங்களை கூறலானார்கள்.

வித்யோத்தமாவும் மகிழ்ந்து திருமணத்திற்குச் சம்மதித்து விட்டாள். வித்யோத்தமாவின் திருமணம் முடிந்தது. அந்தக் கிராமத்து முட்டாளும், இளவரசியும் பேசிக் கொண்டு இருக்கும் போதுதான், தான் ஏமாற்றப்பட்டதாகவும், மஹா முட்டாளைத் தனக்குக் கணவனாக்கி விட்டனர் எனவும் வருந்தி, அவனுடன் உஜ்ஜயினி காளி ஸன்னதியில் சென்று பிரார்த்தித்தாள். அவனைக்

காளி தேவியின் ஸன்னதியிலேயே அன்றிரவு விட்டு விட்டு வந்து விட்டாள்.

வியோத்தமாவின் பக்தியில் மகிழ்ந்த அம்பாள், அவள் கணவனின் நாக்கில் ஸரஸ்வதி பீஜாக்ஷர மந்த்ரத்தை எழுதி அனுக்ரஹித்து மறைந்தாள்.

காலையில் காளியின் அருள் பெற்றவன், 'காளிதாஸராக' வித்யோத்தமாவின் அரண்மனை வாசலில் வந்து,

अनावृत्तं कपाटं द्वारं देहि

அநாவ்ருத்தம் கபாடம் த்[3]வாரம் தே[3]ஹி

என்று கூறினான். உள்ளில் இருந்த தேவி வித்யோத்தமா மகிழ்ந்து, ''अस्ति कश्चिद् वाग्विशेष:'' அஸ்திகஶ்சித்[3] வாக்[3]விஶேஷ என்றாள்.

இதையே முதல் வாக்யமாகக் கொண்ட, காளிதாஸர் காவ்யங்களை எழுதத் தொடங்கினார். அம்பாள் காளியின் அருள் பரிபூர்ணமாகக் கிடைத்தவன் அல்லவா!

अस्ति कश्चिद् वाग्विशेष: என்பதில் உள்ள अस्ति என்பதை முதல் பதமாகக் கொண்டு,

अस्त्युत्तरस्यां दिशि देवतात्मा

அஸ்த்யுத்தரஸ்யாம் தி[3]ஶி தே[3]வதாத்மா

என்று குமாரஸம்பவ காவ்யத்தையும்

कश्चिद् கஶ்சித் என்பதை முதல் பதமாகக் கொண்டு कश्चिद् कान्ताविरहगुरुणा கஶ்சித் காந்தாவிரஹகு[3]ருணா என்ற மேகதூதம் அல்லது மேகஸந்தேஸம் எனப்படும் நூலையும்,

वाक् வாக் என்பதை முதல் பதமாகக் கொண்டு वागार्थाविवसम्पृक्तौ வாகா[3]ர்தா[2]விவஸம்ப்ருக்தௌ என்ற ரகுவம்ச காவ்யத்தையும் இயற்றினார். முதல் ச்லோகங்களான இவைகள் அக்காவ்யத்தின் மங்கள ச்லோகம் எனப்படும். இவைகளைச் சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம்.

குமார ஸம்பவம் *(ஐம்பெரும் காப்பியங்கள்)*

ஐம்பெரும் காப்பியங்களில் ரகு வம்சமும் குமார ஸம்பவமும் பார்க்கப்பட்டுள்ளன.

'பாரவி' கவியின் கிராதார்ஜுனீயம், 'மாக[4]' கவியின் சிசுபால வதம், ஸ்ரீ ஹர்ஷரின் நைஷதமும், காளிதாஸரின் ரகு வம்சம், குமார ஸம்பவம் என ஐம்பெரும் காப்பியங்களாகும்.

காளிதாஸருக்கு ஆதிகவியான வால்மீகி மஹர்ஷிகளிடம் ஆழ்ந்த பக்தி உண்டு. அதனால் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில் பால காண்டத்தில் 37-38ல், कुमारसम्भवश्चैव குமாரஸம்ப[4]வஶ்சைவ என்பதை எடுத்துக் கொண்டு, குமாரன் என சொல்லப்படும் ஸுப்ரமண்ய ஸ்வாமியின் பிறப்பைக் கூறுவதால், இக்காவ்யத்திற்கு कुमारसम्भवम् குமாரஸம்ப[4]வம் என்று பெயர் இட்டுள்ளார். 8 ஸர்கங்களைக் கொண்டுள்ளது.

9 முதல் 17 ஸர்கங்கள் இருந்தாலும் அவைகள் காளிதாஸரால் எழுதப்படவில்லை என்பதை அவைகளில் உள்ள சைலியால் 'காளிதாஸரின் நடை ஒற்று இல்லை' என்று பெரியோர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. முதல் 8 ஸர்க்கங்களுக்கே முக்கியத்துவம் கொடுத்து தங்கள் நூல்களில் மேற்கோள் காட்டுகின்றனர்.

குமார ஸம்பவத்திற்கு மூல நூல்களாக காளிதாஸர் கீழ்க் கண்டவைகளை எடுத்துக் கொண்டு உள்ளார்.

ஸ்ரீமத் ராமாயணம், மஹாபாரதம், சிவபுராணம், ஸ்கந்த் மஹாபுராணம், மத்ஸ்ய புராணம், பத்ம புராணம், லிங்க புராணங்கள் முதலியன. இவைகளில் உள்ள குமாரோத்பத்தி, சிவ பார்வதி விவாஹம், தாரக வதம் முதலியவைகளை ஆதாரமாகக் கொண்டுள்ளார்.

ரகு வம்சம்

சூர்ய வம்ச அரசர்களின் வாழ்க்கை வரலாறு, காளிதாஸரின் காலத்தில் பாரத தேசம் செல்வம், இலக்கியம், கலை இவைகளிலே உயர்ந்து இருந்தது போன்றே நாகரீகத்திலும் சிறந்து விளங்கியது. படு பள்ளத்தை நோக்கி ஊர்ந்து செல்லும் பெரும் பனிச்-

சரிவு போல நாசத்தை நோக்கிச் செல்லும் பகட்டான செல்வ வாழ்க்கையைக் குறித்து காளிதாஸர் தன் பாடல்களின் மூலம் எச்சரிக்கின்றார்.

19 ஸர்கங்கள் கொண்டது இவ்வற்புதமான காவ்யம். முதல் ஸர்கத்திலேயே ரகு வம்ச மன்னர்களின் சிறப்பியல்புகளை வர்ணிக்கத் தொடங்கிய கவி காளிதாஸர், முதலில் கூறிய குணம் தூய்மை. அது பிறவி முதல் அமைய வேண்டும் என்கிறார்.

வேத தர்மங்களிலே பற்றுள்ளவர், ஆங்காங்கு யாகாதி கார்யங்களையும், நித்ய கர்மானுஷ்டானங்களையும் வலியுறுத்து கின்றார்.

திலீபன் முதல் அக்னிவர்ணன் முடிய 29 அரசர்களின் வரலாற்றை, தர்ம, அர்த்த, காம, மோக்ஷம் எனப்படும் சதுர்வித புருஷார்த்தங்களுடன் விளக்குகிறார்.

முதல் எட்டு ஸர்கங்கள் 'திலீபன்', 'ரகு', 'அஜன்' இவர்களைப் பற்றியும் 9 முதல் 15 வரை ஏழு ஸர்கங்கள் ஸ்ரீமத் ராமாயண ஸார ஸங்க்ரஹமாக, 'தசதர்', 'ராம லக்ஷ்மண' சரித்திரங்கள், 16வது ஸர்கம், 'லவகுசனது' வரலாறு, 17வது ஸர்கம் ஸ்ரீ ராம பேரன் 'அதிதி' பற்றியும், 18வது ஸர்கம் மிகச் சுருக்கமாக 21 அரச சரிதங்கள், 19வது ஸர்கம் 'அக்னிவர்ணன்' சரித்திரம் முதலியன உள்ளன.

अहं च रघुवंशः ***(யுத்த காண்டம் 1-11)***

அஹம் ச ரகுவம்சஃ என்றும் रघुवंशस्य चरितम् *(பாலகாண்டம் 4-9)* என்று ஸ்ரீமத் வால்மீகியின் வாக்கை மனதில் கொண்டு, தன் காவ்யத்திற்கு 'ரகு வம்சம்' என்றே பெயர் வைத்தார்.

காளிதாஸர் எழுதிய நாடகங்கள்

1. மாளவிகாக்னி மித்ரம், 2. அபிஞான சாகுந்தலம், 3. விக்ரமோர் வசீயம்.

மாளவிகாக்னி மித்ரம்

ஐந்து அங்கங்கள் (chapters) கொண்ட நாடகம். விதிசா தேச ராஜன் அக்னிமித்ரனுக்கும் விதர்ப்ப தேச ராஜ சகோதரி மாளவிகா

விற்கும் உள்ள ஊடல், ப்ரேமை, விவாஹம் முதலியன அழகாக அமைந்துள்ளது.

விக்ரமோர்வசியம்

ஐந்து அங்கங்களைக் கொண்டது. சந்த்ர வம்ச அரசன் புருவிற்கும், ஊர்வசிக்கும் ஏற்படும் ப்ரேமை, விவாஹம் முதலியன அமைந்துள்ளன. ரிக் வேதத்தில் (10-95). சதபத ப்ராஹ்மணத்தில் (11-5-1) இக்கதை உள்ளது.

அபிக்ஞான சாகுந்தலம்

உலக வரலாற்றில் இந்த நாடகம் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மேலை நாட்டு நாடக ஆசிரியர்கள், கவிகள் மிகவும் பாராட்டி எழுதியுள்ளனர். 7 அங்கங்கள் உள்ள இந்நாடகத்தில், சந்த்ர வம்ச அரசன் துஷ்யந்தனுக்கும், விச்வாமித்ர மஹர்ஷியின் புதல்வி சாகுந்தலாவிற்கும் ஏற்படும் ப்ரேமை, விவாஹம், உரையாடல்கள், கண்வ மஹர்ஷியின் ஆச்ரம வர்ணனை எனப் பல அம்சங்களைக் கொண்டது. சாகுந்தலாவின் புதல்வன் பரதனின் சரிதம் அடங்கியுள்ளது. அதனால் இப்புண்ய தேசத்திற்கு 'பாரத தேசம்' எனப் பெயர் ஏற்பட்டது என்பர். ஸ்ரீ கண்வ மஹர்ஷி, சகுந்தலாவிற்கு அளிக்கும் உபதேசங்கள் நம் நெஞ்சைத் தொடும். மிகவும் மகத்துவம் வாய்ந்தாதகவும், இன்றும் அனைவருக்கும் அளிக்கும் உபதேசங்களாகவும் ஆகும்.

ஜெர்மானியர்கள் இந்த நாடகத்தை மிகவும் போற்றுகின்றனர். 1791ல் ஜெர்மன் அறிஞர் ஆர்ஜ் போஸ்டர் (आर्ज फोस्टर) ஜெர்மன் பாஷையில் மொழிபெயர்த்துள்ளார்.

மஹாபாரதத்தில் இக்கதை உள்ளது.

சாகுந்தலத்தின் பெருமையைக் கீழ்க்கண்டவாறு புகழ்ந் துள்ளனர்.

वासन्तं कुसुमं फलं च युगपद् ग्रीष्मस्य सर्वं च यद्
यच्चान्यमनसो रसायनमतः सन्तर्पणं मोहनम् ।
एकीभूतमभूतपूर्वमथवा स्वर्लोक भूलोकयो
रैश्वर्यं यदि वाञ्छसि प्रियसखे, शाकुन्तलं सेव्यताम् ॥

வாஸந்தம் குஸுமம் ப^{2}லம் ச யுக^{3}பத்^{3} க்^{3}ரீஷ்மஸ்ய ஸர்வம் பச யத்^{3}
யச்சாந்யமநஸோ ரஸாயநமதஃ ஸந்தர்பணம் மோஹநம் ।
ஏகீபூ^{4}தபூ^{4}தபூர்வமத^{2}வா ஸ்வர்லோக பூ^{4}லோகயோ
ரைஶ்வர்யம் யதி^{3} வாஞ்ச^{2}ஸி ப்ரியஸகே^{2}, ஶாகுந்தலம் ஸேவ்யதாம் ॥

ஜெர்மன் அறிஞர் Geothe என்பவர் கீழ்க்கண்டவாறு புகழ்ந்து ஆங்கிலத்தில் கவிதை எழுதியுள்ளார்.

In case you desire to rejoice in the blossoms,
Of early years, the fruits of the age advanced
In case you want to have something that
charms, something that is enchanting
In case you want to call both the heaven
and earth by a Common name
I refer you to the SAKUNTHALA
AND THUS I describe these all

ரவீந்த்ரநாத் டாகூர் 'சாகுந்தலத்தை' பெங்காலி மொழியில் எழுதியுள்ளார். அதைக் கண்ட ஆங்கில அறிஞர் லாரன்ஸ் பின்யான் (Laurence Binyon) என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

The two peculiar principles of India are the beneficient tie of home life on the one hand, and the liberty of the soul, abstracted from the world, on the other. In the world India is variously connected wth many races and many creeds; She cannot reject any of them. But on the altar of devotion (Tapasya) India sits alone. Kalidasa has shown both in Sakunthala and Kumara Sambhava that there is a harmony between these two principles.

என்று ரவீந்த்ரநாத் டாகூர் காளிதாஸரின் சாகுந்தலத்தையும், குமார ஸம்பவத்தையும் புகழ்ந்து எழுதியுள்ளார்.

काव्येषु नाटकं रम्यं तत्रापि च शाकुन्तला

காவ்யேஷு நாடகம் ரம்யம் தத்ராபி ச ஶாகுந்தலா

என்பதிலிருந்தே சாகுந்தலத்தின் பெருமை நன்கு தெரிகிறதல்லவா.

ருதுஸம்ஹாரம், மேகதூதம் அல்லது மேக ஸந்தேஸம் எனும் இரண்டு லகு காவ்யங்களும் காளிதாஸரால் எழுதப்பட்டுள்ளது.

ருது ஸம்ஹாரம்

காளிதாஸரால் முதன்முதலில் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. இதில் ஆறு ஸர்கங்களும் சேர்த்து 144 ச்லோகங்கள் உள்ளன. க்ரீஷ்ம ருது வர்ணனையில் ஆரம்பிக்கும் இக்காவ்யம் வஸந்த ருதுவில் முடிவடைகின்றது. மேல் நாட்டு அறிஞர்கள் பலர் இதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளனர். ஸுந்தர காண்டத்தில் உள்ள பருவ வர்ணனைகளை ஆதாரமாகக் கொண்டு இதை எழுதியுள்ளார்.

மேகதூதம் அல்லது மேக ஸந்தேசம்

கீதி காவ்யமாகும் (गीतिकाव्यम्) பூர்வ மேகம், உத்தர மேகம் என இரண்டு பிரிவாக எழுதப்பட்டுள்ளது. பூர்வ மேகத்தில் 67 ச்லோகங்களும், உத்தர மேகத்தில் 55 ச்லோகங்களும் உள்ளன. மொத்தம் 122 ச்லோகங்கள். ஒரு யக்ஷன், மேகத்தைத் தூதாக, தனது பிரியையிடம் அனுப்புவதாக அமைந்துள்ளது இக்காவ்யம்.

காளிதாஸரின் பெருமைகள்

கி.பி. 634ல் இருந்த புலிகேசி என்ற மஹாராஜனின் 'ஐஹோல்' சாஸனத்தில் காளிதாஸரைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

स विजयतां रविकीर्तिः कविताश्रित कालिदास भारविकीर्तिः ।

ஸ விஜயதாம் ரவிகீர்திஃ கவிதாச்ரித காலிதா[3]ஸ பா[4]ரவிகீர்திஃ ।

இவரை கவி ஸார்வபௌமன், கவிச் சக்கரவர்த்தி என்றே ஸம்ஸ்க்ருத காவ்யங்களை ரஸிப்பவர்கள் எல்லோரும் புகழ்வார்கள்.

காதம்பரி, ஹர்ஷ சரிதம் போன்ற சிறந்த காவ்யங்களை இயற்றிய மஹாகவி பாணர், ஹர்ஷ சரிதத்தின் ஆரம்பத்தில்,

निर्गतासु न वा कस्य कालिदासस्य सूक्तिषु ।
प्रीतिर्मधुरसान्द्रासु मञ्जरीष्विव जायते ॥

நிர்க[3]தாஸு ந வா கஸ்ய காளி[3]தாஸஸ்ய ஸூக்திஷு ।
ப்ரீதிர்மது[4]ரஸாந்த்ராஸு மஞ்ஜரீஷ்விவ ஜாயதே ॥

உத்படர் என்ற அலங்கார சாஸ்த்ர வல்லுநர் ஸ்ரீ ரகுகார ஸரஸ்வதி அரஸிகர்களால் கெட்டு விடும் என்பதை,

सीमन्तिनी च नलिनी च कुमुद्वती च
चन्द्रप्रभा च रघुकारसरस्वती च ।
कान्तोज्झिता हिमहता रविरश्मितप्ता
मेघावृता जडधियाभिहता न भाति ॥

ஸீமந்திநீ ச நலிநீ ச குமுத்[3]வதீ ச
சந்த்[3]ரப்ரபா[4] ச ரகு[4]காரஸரஸவதீ ச ।
காந்தோஜ்ஜி[2]தா ஹிமஹதா ரவிரஸ்மிதப்தா
மேகா[4]வ்ருதா ஜட[3]தி[4]யாபி[4]ஹதா ந பா[4]தி ॥

த்வனிக்கு இருப்பிடமான காளிதாஸ கவியின் காவ்யங்களை புத்திமான்களால்தான் முழுவதும் ரஸிக்க முடியும் என்பது உத்படாசார்யாரின் வாக்கு.

''த்வந்யாலோககம்'' என்ற ப்ரஸித்தி பெற்ற நூலின் ஆசிரியரான ஆனந்த வர்த்தனாசார்யார், ''உலகியே இரண்டு மூன்று கவிகள்தான் 'த்வனியை' (ध्वनि) கையாண்டு காவ்யத்தைச் சிறப்பித்தவர்கள். அவர்கள் வால்மீகி, வ்யாஸர், காளிதாஸர் முதலியார் என்கிறார்.

''தன் மனதுக்கு எது தீர்மானமாக சரியானது என்று தோன்று கிறதோ, அதையும் ப்ரமாணமாகக் கொள்ளல் வேண்டும்'' என்று மநு கூறுகிறார். आत्मनस्तुष्टिरेव च - ஆத்மநஸ்துஷ்டிரேவ ச. இது பற்றி விசாரம் ஏற்படும் போது तन्त्रवार्तिकम् தந்த்ரவார்த்திகம் என்ற க்ரந்தத் தில் குமாரில பட்டர், காளிதாஸ மஹாகவியின் வாக்கை எடுத்துக் காட்டி, மநுவின் ப்ரமாணத்தைப் பலப்படுத்துகிறார்.

''ஸாதுக்களுக்கு ஒரு விஷயத்தில் ஸந்தேஹம் ஏற்படும் போது முடிவாக அவர்களுடைய அந்தக்கரணத்தில் எது சரி என்று படுகிறதோ அதை ப்ரமாணமாகக் கொள்ள வேண்டும்'' என்று சாகுந்தலத்தில் மஹாகவி காளிதாஸர் கூறுகிறார்.

सतां हि सन्देहपदेषु वस्तुषु प्रमाणमन्तः करणप्रवृत्तयः ।

ஸதாம் ஹி ஸந்தே[3]ஹபதே[3]ஷு வஸ்துஷு ப்ரமாணமந்தঃ கரணப்ருவ்த்தயঃ ।

இதை 'அபியுக்தோக்தி' என்று கூறி, ஸ்ம்ருதிகளுக்கு எவ்வளவு பெருமையோ அவ்வளவு பெருமையைக் காளிதாஸரின் வாக்கிற்கு மிகச் சிறந்த சாஸ்த்ரகாராளான குமாரில பட்டர் கூறுவது மிகவும் கவனத்துக்கு உரியதாகும்.

வ்யாஸாசார்யாளின் ப்ரஹ்மசூத்ரம் 3ம் அத்யாயம், முதல் பாதம் இரண்டாம் அதிகரணம் எட்டாம் சூத்ரமான कृतात्यत्याधिकरणम् க்ருத்யாத்யாதி[4] கரணம்

कृतात्ययेऽनुशयवान्दृष्टस्मृतिभ्या यथेतमनेवं च ।

க்ருதாத்யயேऽநுஶயவாந்த்[3]ருஷ்டஸ்ம்ருப்[4]யா யதே[2]தமநேவம் ச ॥

(3.2.1.8)

"தேவலோக வாஸத்தைத் தந்த, செய்த கர்மத்தின் முடிவேற் பட்டதும், மீதமுள்ள கர்ம வாஸனையுள்ளவனாய், போன முறையை ஒட்டியும், சில இடங்களில் அதற்கு மாறாகவும், இறங்குகிறான் ஜீவன். அவ்விதம் ஸ்ருதி ஸ்ம்ருதிகள் இருப்பதே அதன் காரணமாகும்" என்பது ஸ்ரீ சூக்தத்தின் அர்த்தம்.

இந்த ஸூத்ர பாஷ்யத்திற்கு 'பாமதி' भामती என்கிற வ்யாக்யானம் வாசஸ்பதி மிச்ராசார்யாளால் எழுதப்பட்டுள்ளது.

இந்த பாமதி வாயானத்திற்கு ஸ்ரீ அமலநாந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் என்பவர் 'கல்பதரு' कल्पतरु என்கிற அபூர்வமான வ்யாக்யானத்தை அருளியுள்ளார்.

மேலே உள்ள சூத்ரத்தில் दृष्टस्मृतिभ्याम् த்[3]ருஷ்டஸ்ம்ருதிப்[4]யாம் என்பதற்கு 'ஸ்ம்ருதி' என்பதை 'காளிதாஸ ஸ்ம்ருதி' என்று பொருள் கூறுகிறார்.

காளிதாஸர் மேக ஸந்தேசத்தில் *(மேக தூதத்தில்)* உஜ்ஜயினி நகரை வர்ணிக்கும் போது,

"புண்யம் செய்து ஸ்வர்கம் சென்றவர்கள் அங்கே புண்ணிய பலன்களை அனுபவித்து விட்டு மறுபடி பூலோகம் திரும்பும் போது, மிகுதியாக உள்ள புண்ய பலனைப் பூலோகத்தில் அந்த மஹா புருஷர்கள் அனுபவிப்பதற்காக ஸ்வர்க்கத்தின் ஒரு பகுதியைப் போல உள்ளது உஜ்ஜயினி நகரம்" என்கிறார்.

स्वल्पीभूते सुचरितफले स्वर्गिणां गां गतानां ।
शेषैः पुण्यैर्हृतमिव दिवः कान्तिमत् खण्डमेकम् ॥

ஸ்வல்பீபூ4தே ஸுசரிதப2லே ஸ்வர்கி3ணாம் கா3ம் க3தாநாம் ।
ஶேஷைঃ புண்யைர்ஹ்ருதமிவ தி3வঃ காந்திமத் க2ண்ட3மேகம் ॥

காளிதாஸரின் இந்த மேகஸந்தேஸ ச்லோகத்தை 'ஸ்ம்ருதிப் யாம்' என்பதில் 'ஸ்ம்ருதி' என்பதற்கு ஸ்ரீ அமலாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் 'காளிதாஸ ஸ்ம்ருதி' என்று பெருமைப்படுத்திப் போதித்துள்ளார்.

காளிதாஸ மஹாகவி தம்முடைய காவ்யங்களின் வாயிலாகப் பாரத தேசப் பண்பு, மக்களின் பெரும் நோக்கங்கள், தர்மங்கள், அடிப்படை பண்பாடு முதலியவற்றை கண்ணாடியில் காட்டுவது போல் கூறியுள்ளார்.

நமது பாரத தேசத்தின் குடியரசு தலைவராக President of India ஆக இருந்த மஹா மேதை டாக்டர் ராதாகிருஷ்ணன் காளி தாஸரை கீழ்க்கண்டவாறு புகழ்கிறார்.

Kalidasa ia the greatest representative of India's spirit, grace and genius. The Indian National consciousness is the base from which his works grow. Kalidasa has observed India's cultural heritage, made it his own, enriched it, given it unviersal scope and significance.

உலக மஹா கவியாக காளிதாஸர் தனது காவ்யங்களில் दीपशिखा தீப ஜ்வாலையை உவமையாகப் பல இடங்களில் வர்ணித்திருப்பதன் காரணமாக, காளிதாஸரின் கவிதை ரசனைகளில் மெய்மறந்து மயங்கிய விக்ரமாதித்ய மாமன்னன், இரத்ன ஜீபஜ்யோதி எனப் பட்டம் அளித்துக் கொண்டாடினான்.

ஆஸேதோঃ ஆஹரித்வாரம் வித்வத்கோஷ்டிஷு -
விச்ருதா காளிதாஸ கவீந்த்ரஸ்ய தீபசிகேதியா ।

இரத்தின தீப ஒளி என்றும் அணைவதில்லை. அது திரியையோ எண்ணெயையோ எதிர்பார்ப்பதில்லை. சுற்றி அடிக்கும் சுழல் காற்றும் அதை அணைக்க முடியாது. நந்தா விளக்காக ஒளிர்கிறது. அவ்வாறே நந்தா விளக்கொளியாக மிளிர்கிறார் காளிதாஸர்.

அனைத்து ஸகுண மூர்த்திகளும் ஒன்றே. அத்வைதத்தில் தான் ஒன்று சேர்கின்றன என்பதைத் தன் காவ்யங்களில் நிரூபித் திருக்கின்றார்.

சாகுந்தலம் நாடகத்தின் முடிவில், தனக்கு மறு பிறவியில்லா மோக்ஷம் அருளல் வேண்டும் என்று பரமேச்வரனைப் பிரார்த்திக்கின்றார்.

प्रवर्ततां प्रकृतिहिताय पार्थिवः
  सरस्वती श्रुतिमहतां महीयसाम् ।
ममापि च क्षपयतु नीललोहितः
  पुनर्भवं परिगतशक्तिरात्मभूः ॥

ப்ரவர்ததாம் ப்ரக்ருதிஹிதாய பார்தி^{2}வஃ
  ஸரஸ்வதீ ஶ்ருதிமஹதாம் மஹீயஸாம் ।
மமாபி ச க்ஷபயதுநீலலோஹிதஃ
  புநர்ப^{4}வம் பரிக^{3}தஶக்திராத்மபூ^{4}ஃ ॥

அரசன் மக்களின் நன்மைக்காக முயற்சிக்கட்டும். கற்றோர் களின் சொல் பெருமை சேர்க்கட்டும். எனக்கும் எங்கும் நிறைந்து நிற்கும் பரமேச்வரன் மறு பிறவியற்ற மோக்ஷத்தை அருளட்டும்.

இவைகளால் காளிதாஸர் மறு பிறவியற்ற மோக்ஷத்தில் மனதைச் செலுத்தினார். இதை ரகு வம்சத்தில் ரகு மஹாராஜா தன் மகன் அஜனிடம் ராஜ்ய பாரத்தை ஒப்படைத்து விட்டு யோக மார்கத்தில் ஈடுபட்டான் என்று கூறுகிறார்.

न च योगविधेर्नवेतरः स्थिरधीरापरमात्मदर्शनात् । (८-२२)

ந ச யோக^{3}விதே^{4}ர்நவேதரஃ ஸ்தி^{2}ரதீ^{4}ரா பரமாத்மத^{3}ர்ஶநாத் ।

பரமாத்ம ஞான அனுபவத்திற்காக நிறுத்தாமல் யோகாப்யாஸம் செய்து முடித்தான் ரகு மஹாராஜா.

इतरो दहने स्वकर्मणां ववृते ज्ञानयज्ञेन वह्निना । (८-२०)

இதரோ த^{3}ஹநே ஸ்வகர்மணாம் வவ்ருதே ஞாநயஜ்ஞேந வஹ்நிநா ।

ஆத்ம ஞானமாகிய அக்னியினால் பிறப்பிற்குக் காரண மாகிய தனது செயல்களை எரிப்பதில் முயற்சியுள்ளவனாக இருந்தான் என்பது போல பல உதாஹரணங்களால் காளிதாஸரின் மனம் மறு பிறப்பற்ற அத்வைத நிலையை பரமேச்வரனிடம் பிரார்த்தித்தார் என்பது நன்கு தெரிகிறது.

ज्ञानाग्नि स्वकर्माणि भस्सात् कुरुते तथा *என்பது (5.37) ஸ்ரீகீதாசார்யன்* வாக்கை, *இதில் காண்பிக்கின்றான் காளிதாஸன்.*

க்ஞானாக்3னி ஸ்வகர்மாணி ப4ஸ்மஸாத் குருதே ததா2 ।

ஸ்ரீ காளிதாஸரின் உவமைகளில் ஒரு சில பார்ப்போம்.

उपमा कालिदासस्य भारवेरर्थगौरवम् ।
दण्डिनपदलालित्य माघे सन्तित्रयो गुणाः ॥

உபமா காளிதா3ஸஸ்ய பா4ரவேரர்த்த2கௌ3ரவம் ।
த3ண்டி3நபத3லாலித்யம் மாகே4 ஸந்தித்ரயோ கு3ணாः ॥

உவமைகளுக்குக் காளிதாஸரும், அர்த்தபுஷ்டிக்கு *(பொருள், விசேஷம்)* பாரவியும், பதவின்யாஸத்திற்கு *(சொல் நயம்)*, தண்டி கவியும், சிறப்புடையவர்களாய் இருப்பினும் மாககவி இம்மூன்றி லும் சிறப்புடையவர்.

ஆகவே காளிதாஸரின் உவமைகளுடன், அவரின் பொன் மொழிகள் ஒரு சில பயில்வோம்.

ரகு வம்சம்

1. हेम्नः संलक्ष्यते ह्यग्नौ विशुद्धिः श्यामिकापि वा ।
ஹேம்நः ஸம்லக்ஷ்யதே ஹ்யக்3நௌ விஶுத்3தி4ः ஶ்யாமிகாபி வா । *(1.10)*

தங்கத்தின் சுத்தமான தன்மையோ, அசுத்தமான தன்மையோ நெருப்பில் நன்றாகப் பார்க்கப்படும்.

2. क्रिया हि वस्तूपहिता प्रसीदति । *(3.29)*
க்ரியா ஹி வஸ்தூபஹிதா ப்ரஸீத3தி ।

படிப்பித்தல் முதலிய தொழில்கள் தகுந்த பாத்ரத்தில் செய்யப்படும் போது பயனுள்ளதாக ஆகிறது.

3. •भिन्नरुचिर्हि लोकः பி^{4}ந்நருசிர்ஹி லோகঃ (6.30)

உலகம் பலதரப்பட்ட ருசியையுடையது அல்லவா!

4. विषमप्यमृतं क्वचिद्भवेदमृतं वा विषमीश्वरेच्छया ।
விஷமப்யம்ருதம் க்வசித்^{3}ப^{4}வேத^{3}ம்ருதம் வா
விஷமீஸ்வரேச்ச^{2}யா । (8.46)

கடவுளின் விருப்பத்தில் சில இடங்களில் விஷமும் அமிர்தமாக ஆகும். சில இடங்களில் அம்ருதமும் விஷமாக மாறும்.

5. मनो हि जन्मान्तरसङ्गतिज्ञम् ।
மநோ ஹி ஜந்மாந்தரஸங்க^{3}திக்ஞம் । (7.15)

மனமானது முற்பிறப்பிலிருந்து சேர்க்கையை *(வாசனையால்)* தெரிந்து கொள்ளும்.

6. अपदे पदमर्पयन्ति हि श्रुतवन्तोऽपि रजोनिमीलिताः ।
அபதே^{3} பத^{3}மர்பயந்தி ஹி ஶ்ருதவந்தோபி ரஜோநிமீலிதாঃ ।
(9.74)

சிறந்த அறிவுள்ளவர்களும் ரஜோ குணத்தினால் அறிவுக் கண் மறைக்கப்பட்டவர்களாய் தகாத மார்க்கத்தில் அடி வைக்கின்றனர்.

7. तेजसां हि न वयः समीक्ष्यते ।
தேஜஸாம் ஹி ந வயঃ ஸமீக்ஷ்யதே । (11.1)

தேஜஸ்விகள் விஷயத்தில் வயது கவனிக்கப்படுவதில்லை.

8. काले खलु समारब्धाः फलं बध्नन्ति नीतयः ।
காலே க^{2}லு ஸமாரப்தா^{4}ঃ ப^{2}லம் ப^{3}த்^{4}நந்தி நீதயঃ । (12.69)

நற்காலத்தில் தொடங்கப்பட்ட செயல்முறைகள் பயனளிக்கின்றன.

9. वयोरूपविभूतीनामेकैकं मदकारणम् ।

வயோரூபவிபூ4தீநாமேகைகம் மத3காரணம் । *(17.43)*

இளமை, அழகு, செல்வம் இவற்றில் ஒவ்வொன்றும் இறுமாப்பிற்குக் காரணம் (மூன்றும் சேர்ந்து இருந்தால் கேட்பானேன்).

10. स्वादुभिस्तु विषयैर्हृतस्ततो दुःखमिन्द्रियगणो निवार्यते ।

ஸ்வாது3பி4ஸ்து விஷயைர்த்3ருதஸ்ததோ
து3க்2க2மிந்த்3ரியக3ணோ நிவார்யதே ।

இனிய சிற்றின்பங்களால் இழுத்துச் செல்லப்பட்ட புலன்களை அவற்றின்றும் திருப்புவது சிரமமாகும்.

குமார ஸம்பவம்

1. एको हि दोषो गुणसन्निपाते निमज्जतीन्दोः किरणेष्विवाङ्कः ।

ஏகோ ஹி தோ3ஷோ கு3ணஸந்நிபாதே நிமஜ்ஜதீந்தோ3:
கிரணேஷ்விவாங்க: ॥ *(1.3)*

ஒரு குறை நற்குணங்களிடையே சந்திரனுடைய கிரணங்களிடையே களங்கம் மறைவது போல மறைந்து விடுகின்றது.

2. विकारहेतौ सति विक्रियन्ते येषां न चेतांसि त एव धीराः ।

விகாரஹேதௌ ஸதி விக்ரியந்தே யேஷாம் ந சேதாம்ஸி த ஏவ
தீ4ரா: । *(1.59)*

மனம் மாறுதலுக்கான காரணம் இருக்கும் பொழுதும் எவர்களுடைய மனம் மாறுபாடு அடைகின்றதில்லையோ, அவர்களே மன உறுதியுடையவர்கள்.

3. आत्मेश्वराणां न हि जातु विघ्नाः समाधिभेदप्रभवो भवन्ति ।

ஆத்மேஶ்வராணாம் ந ஹி ஜாது விக்4நா:
ஸமாதி4பே4தப்ரப4வோ ப4வந்தி ।

தம்மைத் தாமே அடக்கியாள்வோருக்கு இடையூறுகள் ஒரு பொழுதும் நிஷ்டையைக் கலைக்க மாட்டா.

4. न धर्मवृद्धेषु वयः समीक्ष्यते ।

ந த4ர்மவ்ருத்3தே4ஷு வய: ஸமீக்ஷ்யதே ।

தர்மத்தினால் முதிர்ந்தோர் விஷயத்தில் வயது பார்க்கப் படுவதில்லை.

5. शरीरमाद्यं खलु धर्मसाधनम् ।

ஶரீரமாத்3யம் க2லு த4ர்மஸாத4நம் । *(5.33)*

தர்மத்தை ஸம்பாதிப்பதற்கான கருவிகள் பலவற்றிலும் சரீரம் மிக முக்கியமானது ஆகும்.

6. न केवलं यो महतोऽपभाषते शृणोति तस्मादपि यः स पापभाक्।

ந கேவலம் யோ மஹதோऽபபா4ஷதே ஶ்ருணோதி தஸ்மாத3பி யஃ ஸ பாபபா4க் । *(5.83)*

பெரியோர்களை நிந்திப்பவர்களுக்குத்தான் பாபம் என்ப தில்லை. அதைக் கேட்டுக் கொண்டு இருப்போருக்கும் பாபமுண்டு.

7. विक्रियायै न कल्पन्ते सम्बन्धाः सदनुष्ठिताः ।

விக்ரியாயை ந கல்பந்தே ஸம்ப3ந்தா4ஃ ஸத3நுஷ்டி2தாஃ । *(6.29)*

நல்லோர்கள் மூலம் ஏற்பட்ட சேர்க்கைகள் கெடுதலை செய்வதற்கு சக்தியுடையவைகள் அல்ல.

8. यदध्यासितमर्हद्भिस्तद्धि तीर्थं प्रचक्षते ।

யத3த்4யாஸிதமர்ஹத்3பி4ஃ ஸ்தத்3தி4 தீர்த2ம் ப்ரசக்ஷதே ।

எந்த இடமானது பூஜைக்குரிய பெரியோர்களால் அமரப் பட்டதோ, அந்த இடத்தையே 'தீர்த்தம்' புண்ய ஸ்தானமாக பெரியோர் கூறுகின்றனர்.

9. भर्तृवल्लभतया हि मानसीं मातुरस्यति शुचं वधूजनः ।

ப4ர்த்ருவல்லப4தயா ஹி மாநஸீம் மாதுரஸ்யதி ஶுசம் வதூ4ஜநஃ । *(8.12)*

தன் கணவனுக்கு முற்றும் இசைந்தவளாவதன்றோ மணப் பெண் தன் தாய் *(தந்தையரின்)* மனத் துயரைப் போக்குகிறாள்.

10. विक्रिया न खलु कालदोषजा निर्मलप्रकृतिषु स्थिरोदया ।

விக்ரியா ந க2லு காலதோ3ஷஜா நிர்மலப்ரக்ருதிஷு ஸ்தி2ரோத3யா

காலத்தின் கேட்டினால் ஏற்பட்ட மாறுபாடு தூய்மையோரிடம் நீடித்திருக்காது.

மேக ஸந்தேஸம்

1. आपन्नार्तिप्रशमनफलाः संपदो ह्युत्तमानाम् ।

ஆபந்நார்திப்ரஶமநப2லா: ஸம்பதோ3 ஹ்யுத்தமாநாம்। *(1.53)*

உயர்ந்தோரின் செல்வங்கள் கஷ்டப்படுபவரின் துன்பத்தை நீக்குவதையே பயனாகக் கொண்டிருக்கின்றன.

2. कस्यात्यन्तं सुखमुपनतं दुःखमेकान्ततो वा
नीचैर्गच्छत्युपरि च गतिश्चक्रनेमिक्रमेण ।

கஸ்யாத்யந்தம் ஸுக2முபநதம் து3:க2மேகாந்ததோ வா
நீசைர்க3ச்ச2த்யுபரி ச க3திஶ்சக்ரநேமிக்ரமேண ।

எவருக்குத் தான் ஒரே இன்பமும் ஒரே துன்பமோ ஏற்படுகிறது. சகடக்கால் போல மேலும் கீழும் ஏறி இறங்குகிறது.

விக்ரமோர்வசீயம்

1. अनुत्सेकः खलु विक्रमालङ्कारः ।

அநுத்ஸேக: க2லு விக்ரமாலங்கார: ।

கர்வம் கொள்ளாமையல்லவோ வீரத்திற்கு அணி.

2. स्वार्थात्सतां गुरुतरा प्रणयिक्रियैव ।

ஸ்வார்தா2த்ஸதாம் கு3ருதரா ப்ரணயிக்ரியைவ । *(4.31)*

நல்லோர்களுக்குத் தம் கார்யத்தைவிடத் தமக்கு வேண்டியவருடைய கார்யமே பெரிது.

மாளவிகாக்னி மித்ரம்

1. पुराणमित्येव न साधु सर्वम् ।

புராணமித்யேவ ந ஸாது4 ஸர்வம் ।

பழமையானவைகள் என்றதால் மட்டுமே எல்லாம் நல்லவைகளாக ஆகாது (1-2).

2. सर्वज्ञस्याप्येकाकिनो निर्णयाभ्युपगमो दोषाय ।

ஸர்வக்ஞஸ்யாப்யேகாகிநோ நிர்ணயாப்4யுபக3மோ தோ3ஷாய ।

ஸர்வக்ஞனாயிருந்தாலும் ஒருவன் தனியே இருந்து செய்யும் தீர்மானத்தை ஒப்புக் கொள்வது தவறுதலுக்குக் காரணமாகும்.

3. प्रायस्समानविद्याः परस्परयशः पुरोभागाः ।

ப்ராயஸ்ஸமாநவித்3யாஃ பரஸ்பரயஶஃ புரோபா4கா3ஃ । *(1-20)*

பெரும்பாலும் ஒரே வித்தையைப் பயின்றவர்கள், ஒருவருடைய புகழை ஒருவர் குறை கூறிக் கொண்டிருப்பார்கள்.

4. अनुरागोऽनुरागेण परीक्षितव्यः ।

அநுராகோ3ऽநுராகே3ண பரீக்ஷிதவ்யஃ । *(0-3)*

அன்பை அன்பினாலேயே பரீக்ஷை செய்ய வேண்டும்.

அபிக்ஞான சாகுந்தலம்

1. भवितव्यानां द्वाराणि भवन्ति सर्वत्र ।

ப4விதவ்யாநாம் த்3வாரணி ப4வந்தி ஸர்வத்ர । *(1.14)*

விதிப்படி நடந்தாக வேண்டியவற்றிற்கு வாயில்கள் எங்கும் இருக்கும்.

2. सर्वः कान्तमात्मीयं पश्यति ।

ஸர்வஃ காந்தமாத்மீயம் பஶ்யதி । *(1.14)*

எவனும் தன்னுடையது அழகியதெனவே கருதுகிறான்.

3. लभेत वा प्रार्थयिता न वा श्रियं ।
श्रिया दुरापः कथमीप्सितो भवेत् ॥

லபே4த வா ப்ரார்த2யிதா ந வா ஶ்ரியம் ।
ஶ்ரியா து3ராபஃ கத2மீப்ஸிதோ ப4வேத் ॥ *(3.11)*

வேண்டுபவன் செல்வத்தை அடைவானோ இல்லையோ, லக்ஷ்மிக்கே அவள் அடைய விரும்பியவன் எப்படி கிட்டாமல் போவான்?

4. सर्वः सगन्धेषु विश्वसिति ।

ஸர்வஃ ஸக3ந்தே4ஷு விஶ்வஸிதி । *(5)*

எவனும் தன் போன்றவரிடமே நம்பிக்கை கொள்வான்.

5. पूर्वावधीरितं श्रेयो दुःखं हि परिवर्तते ।

பூர்வாவதீ4ரிதம் ஶ்ரேயோ து3ஃக2ம் ஹி பரிவர்ததே । *(7-13)*

முதலில் புறக்கணிக்கப்பட்ட நன்மை திரும்ப வருவது கஷ்டம்.

ஒரு சில உவமைகளைக் காண்போமா?

சந்த்ராலோகம் என்று அலங்கார நூல் உள்ளது. அதில் 100 அலங்காரங்கள் லக்ஷணத்துடன் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் முதன்முதலில் கூறுவது உபமாலங்காரமகும்.

உபமாலங்காரத்தின் லக்ஷணத்தைக் கூறும் போது

उपमा यत्र सादृश्यलक्ष्मीरुल्लसति द्वयोः ।
हंसीव कृष्ण ते कीर्तिस्स्वर्गङ्गामवगाहते ॥

உபமா யத்ர ஸாத்3ருஶ்யலக்ஷ்மீருல்லஸதி த்3வயோஃ ।
ஹம்ஸீவ க்ருஷ்ண தே கீர்திஸ்ஸ்வர்க3ங்கா3வகா3ஹதே ॥

இதில் முதல் பாதம் லக்ஷணமாகவும், இரண்டாம் பாதம் உதாஹரணமாகவும் உள்ளது. ஒன்று மற்றொன்றைப் போல உள்ளது என்பது உவமை.

ரகு வம்சத்தில்

1. वैवस्वतो मनुर्नाम माननीयो मनीषिणाम् ।
आसीन्महीक्षितामाद्यः प्रणवच्छन्दसामिव ॥

வைவஸ்வதோ மநுர்நாம மாநநீயோ மநீஷிணாம் ।
ஆஸிந்மஹீக்ஷிதாமாத்3யஃ ப்ரணவச்ச2ந்த3ஸாமிவ ॥

வித்வான்களால் மதிக்கத் தக்கவரும் வேதங்களுக்கு ப்ரணவம் போல் அரசர்களுக்கு முதல்வரும் வைவஸ்வதர் என ப்ரஸித்தி பெற்றவருமான மநு இருந்தார். வேதங்களுக்கு ப்ரணவம் போல் என்பது உவமையாகும்.

2. तदन्वये शुद्धिमति प्रसूतः शुद्धिमत्तरः ।
दिलीप इव राजेन्दुः इन्दुः क्षीरनिधाविव ॥
தத³ந்வயே ஶுத்³தி⁴மதி ப்ரஸூதஃ ஶுத்³திமத்தரஃ ।
திலீப இவ ராஜேந்து³ஃ இந்து³ஃ க்ஷீரநிதா⁴விவ ॥ *(1.12)*

பரிசுத்தமான அம்மநுவின் வம்சத்தில் மிகவும் பரிசுத்தனான திலீபன் என்ற சந்தரன் போன்ற அரசன் பாற்கடலில் சந்திரன் பிறந்தது போல் பிறந்தான்.

இம்மாதிரி உவமைகளை நூற்றுக்கணக்கில் காளிதாஸரது காவ்யங்களில் காணலாம். உவமை அலங்காரமே காளிதாஸரோ என பிரமிக்கத் தக்கவைகளாக அவை அமைந்துள்ளன.

இப்பாடத்தைப் பயில்பவர்கள் அனைவரும் காளிதாஸரின் காவ்யங்களையும் மற்றும் இதைத் தொடர்ந்து வரும் ஐம்பெரும் காப்பியங்களையும் முறைப்படி படித்து தங்கள் வாழ்க்கையை குறைவின்றி வாழ, அவைகளில் உள்ள வழிகாட்டுதல்படி அமைத்துக் கொள்ள வேண்டும். மேலும், இப்பாடத்தின் ஆரம்பத்தில் குறிப் பிட்டபடி, ஸ்ரீ பூர்ணேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அருளியபடி இந்த ஐம்பெரும் காப்பியங்களைப் படிப்பதால், அவைகளில் வரும் ராஜாக்கள் சரிதம், புண்ய நதிகள், தேச வர்ணனைகள், காட்டு வர்ணனைகள், நீதிகள், பொன்மொழிகள் முதலியவைகளைப் படிப்பதால், நம்முடைய பாபங்கள் அகன்று, இறைவனின் அருளும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

॥ पुण्यतीर्थदेवायतनादि संकीर्तनेन दुरितक्षयः ॥

॥ புண்யதீர்த²தே³வாயதநாதி³ ஸங்கீர்தநேந து³ரிதக்ஷயஃ ॥

கேள்விகள்

1. ஆதிகவி என்று யாருக்குப் பெயர்?

2. காவ்யம் - சிறு குறிப்பு எழுதுக.

3. மஹாகாவ்ய லக்ஷணங்களைத் தொகுத்துக் கொடுத்தவர் யார்? அவைகளின் ஸாராம்சத்தை எழுதுக.

4. மஹாகவி என்று எவரை அழைக்கின்றோம்? அவர்தம் வாழ்க்கை வரலாறு பற்றி ஆராய்ச்சி செய்த ஆங்கில அறிஞர்கள் யார் யார்?

5. காளிதாஸரின் இளமைப்பருவ வாழ்க்கை கர்ண பரம்பரை கதையை எழுதுக.

6. காளிதாஸர் எழுதிய காவ்யங்களின் பெயர்களை எழுதுக.

7. ரகுவம்சம் - சிறு குறிப்பு எழுதுக.

8. அபிக்ஞான சாகுந்தலம் யாரால் எழுதப்பட்டது? சிறு குறிப்பு எழுதுக.

9. காளிதாஸரின் பெருமைகளை 'கல்பதரு'வில் கூறியுள்ளபடி எழுதுக.

10. ப்ரஹ்மசூத்ர வ்யாக்யானங்களின் பெயர் என்ன? அதனை எழுதியவர்கள் யார் யார்?

11. காளிதாஸர் கடைசியில் இறைனிடம் வேண்டுவது என்ன? அது எதில் உள்ளது?

12. காளிதாஸரின் 'உவமை' பற்றிக் கூறும் ச்லோகம் என்ன?

13. காளிதாஸரின் பொன்மொழிகளில் ஏதேனும் ஐந்தை எழுதுக.

14. ரகுவம்ச உவமைகளை எழுதுக.

15. அலங்கார நூலின் பெயர் என்ன? அதில் உவமை பற்றிய லக்ஷணத்தை எழுது

॥श्रीसद्गुरुचरणारविन्दार्पणमस्तु॥



SRI SWARNAM
✆ : 9500028833

